www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

நவ.12-18,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 127



## போர்க்களமும் புதிய காட்சிகளும்!

## ராஜாவுக்கு 'செக்'

134 NOT அவுட்

துடிப்பான பையன்

ஸ்போர்ட்ஸ்

காதலிப்பதில் ஒரு சங்கதி

அப்துல் ரகுமான்

## பாலசிங்கம் வீட்டுக்கு குண்டு

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அவர்களைக் காணவில்லை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
இதற்கு முன்னர் எப்போதும்
கண்டிராத துயரத்தை
யாழ்-குடாநாடு
தற்போது சுமந்து கொண்டிருக்கிறது!

சனத்தொகையில்
சரிபாதிக்கு மேலானவர்கள்
அகதிகளான சோகத்தின்
கனமும்-ரணமும்
வெளியில் இருந்து பார்க்கையில்
முழுதாக உணரப்படாமல் போகலாம்.

யுத்தத்தில்
யார் வெற்றி பெறுகிறார்கள்.
பெற்றுக்கொள்ளும் வெற்றிகளை
தக்கவைத்துக் கொள்ளமுடியுமா?
என்பதெல்லாம்-எதிர்கால
நிகழ்ச்சிப் போக்குகளால்
நிர்ணயிக்கப்படப் போகிறவை!

ஆனால்-யாழ்-குடாநாடு
பெருமலையாக அழுத்தும்
இன்றைய துயரிலிருந்து
விடுபடுவது என்பது
விரைவில் நடக்கக்கூடியதல்ல!

ஏற்கனவே-நாட்டின்
வளர்ச்சிப் போக்கிலிருந்து
50 வருடங்கள்
பின்தங்கியிருக்கிறது யாழ் குடாநாடு.

இன்றைய உக்கிரப்போர்
மேலும் ஒரு பெரும்
பின்னடைவுக்கு தள்ளிவிட்டது.

குடியிருப்புக்கள் மத்தியில்
இரு தரப்புக்கள் மோதும்போது
சிறுகச் சிறுக சேமித்து
கட்டியெழுப்பிய வீடுகள்
காணாமல் போகலாம்.

வெட்டை வெளியாய்
யாழ் குடாநாட்டில்
பெரும் பகுதி மாறிப்போக,
இரத்தமும்-கண்ணீரும்
கலந்து சேறாக
தினசரி வாழ்க்கை சீர்படவே
காலம் பல செல்லலாம்.

புலிகளை வென்றோம்
என்று படையினர் கூறலாம்.
பலம் இழக்கவில்லை
பார்க்கத்தானே போகிறீர்கள்
என்று புலிகள் சொல்லலாம்.

ஆனால், மக்கள்
வளங்களை இழந்து
சேமிப்பில் கண்ட பலன்களையெல்லாம்
யுத்த இருளில் தொலைத்து,
உறவுகள் இழந்து...
வாழ்க்கையின் பலத்தை
பறிகொடுத்ததை மட்டும்
எப்படி மறுக்கலாம்?

இரு தரப்புக்கும்
வெற்றி தோல்விகள்
மாறி மாறி வந்தாலும்
மக்களைப் பொறுத்தவரை
சோர்வும், சுமைகளுமே
யுத்தம் வழங்கிய பரிசுகள்!

விளைவு நல்லதாயின்
ரணங்களை மறக்கலாம்.
ஆனால், முடிவேயில்லாத
யுத்தம் எங்குதான்
மக்களை கொண்டுசென்று
நிறுத்தப் போகிறது?
கேள்விக்கு விடையில்லாதபோது
விளைவு நல்லதாகும் என்று
நம்புவதற்கு சிரமமாயுள்ளது.

அரசியல் தீர்வு யோசனை
ஒரு கட்டத்தின்மேல்
நகராமல் நின்றுகொண்டிருக்க
யுத்தம் முன்நோக்கி
கைவீசியபடி சென்றுகொண்டிருக்கிறது.
நசிபடுபவையெல்லாம்
கெட்டவையல்ல என்பதால்
ரசிக்கத்தான் முடியவில்லை.

உண்மையான மனிதாபிமானிகளின்
நெஞ்சில் இரத்தம் கசிகிறது.
மனிதாபிமான வேடமிட்டோர்
மௌனமாக இருக்கிறார்கள்.

நெருக்கடி நிலையில்தான்
யார் எந்தப் பக்கம் நிற்கிறார்கள்.
யாரெல்லாம் முகம் மறைக்கிறார்கள்
என்று தெரிந்து போகிறது.

குறைந்தபட்சம்
யாழ் குடாநாட்டுக்கு
உணவு அனுப்பச் சொல்லவும்
போர்நிறுத்த காலத்தில்
மார்தட்டிய மனிதாபிமானிகளுக்கு
இன்று குரல் எழவில்லை-அவர்களையும்
காணவில்லை! காணவில்லை!
மக்கள் புரிந்து கொண்டால் சரி! □□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## மனக்கவலை

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதல் அடைவார்கள் மத் 5;4 என்று வேதம் சொல்கிறது. என் துக்கம் எப்பொழுதும் எனக்கு முன்பாக இருக்கிறது என்று சங்கீதக்காரனாகிய தாவீது புலம்புகிறார். சங்: 102. துயரப்படுகிற யாவருக்கும் ஆறுதல் தர இயேசுவானவர் இன்றும் உயிரோடு இருக்கிறார். பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு இவ்வுலகத்தில் அவதரித்தார். துன்பத்தின் நடுவில் வேதனையின் மத்தியிலும் நம்மை ஆதரிக்கிறவராய் இருக்கிறார். துன்ப நேரத்திலும் அவரே நமக்கு ஆறுதல் தருபவராக இருக்கிறார். சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை. இன்பமானாலும் துன்பமானாலும் நாம் ஸ்தோத்திரம் பண்ணி ஜெபம் செய்வது நமது கடமையாய் இருக்கிறது. இந்த உலகத்திலே உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள் என்றார் இயேசு. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். எம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.

ஜ.ஆர்.தேவராஜ், கட்டுகஸ்தோட்டை

## ஆன்மீகம்



## வள்ளல் நபியின் வாய் மொழி

ஒரு சமயம் நாயக நற் தோழர்களில் ஒருவர் கடுமையாக நோயுற்றிருந்தார் என்ற செய்தி அண்ணல் அவர்களுக்கு கிடைத்தது.

உடனே அன்னவரின் வீட்டுக்கு அண்ணல் அவர்கள் சென்றார்கள். நலம் பற்றி விசாரித்த நாயகம் (ஸல்) அவர்களிடம் அத் தோழர், இறை தூதரே! என்னிடம் அதிக செல்வங்கள் நிறைந்திருக்கிறது இவை அனைத்தையும் ஏழைகள் நலனுக்காகக் கொடுத்துவிடப் போகிறேன் என்று கூறினார்.

இதைக் கேட்ட பெருமானார் அவர்கள் முதலில் உங்கள் செல்வத்தில் இருந்து உங்கள் குடும்பத்தில் உள்ள ஏழைகள் சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்கு வழி செய்யுங்கள்.

இது அவர்கள் பிறர் தயவில் வாழ்க்கை நடத்துவதையும், இரந்து கை நீட்டிக் கேட்பதையும் தடுத்துவிடும் என்றார்கள். எனவே வள்ளல் நபியின் இவ் வாய் மொழியை செல்வந்தர்கள் சிரமேற்க வேண்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல-124

### பரிசுக்குரிய கவிதை

### மனித வனம்

பனங்காட்டில் புதையுண்ட
மனித வித்துக்கள் - இனி
வளர்ந்தங்கு வனமாக(த்)
தலை தூக்கும் நிலையாமோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### இரங்கார்

"பெண்ணானால் பேயும் இரங்கும்"
என்ற எண்ணத்திலா,
மரமே! நீயும் பெண்ணானாய்?
என்னதான் நீயானாலும்
மனிதர் மனமிரங்கார்
அடுப்புக்கு விறகு வேண்டி! உன்
இடுப்புடைப்பார் கவனம்!

கிண்ணிக் கன்னிரஸ்னா-கிண்ணியா 02

### சோலைவனம், பாலைவனம்

முள்ளில்லா ரோஜா ஒன்று,
பாலைவன ரோஜாவாகிப்,
பரிதவிப்ப தெதற்காக?
சோலைவனப் பூவுலகு,
மானிடவர்க்கத்தால்
சுடுகாடாய்ப் போனதனால்!

நஸ்பியா பஹர்தீன்-புத்தளம்

### அகோரம்

மீன் கன்னி காட்டினார்கள்,
பாம்புக் கன்னி தந்தார்கள்,
தினமுரசுக் கவிதையிலே
மரக்கன்னி தந்தாரே!
மதிநுட்பம் நிறைந்தவர்கள்
எதிர்கால அகோரத்தை
எடுத்துரைப்பதிதுதானோ?

அ.முஹம்மது முஸ்அப் ரஸீன்-நிந்தவூர் 03

### கையும் வளருதப்பா

செத்தும் இரு வருடம்
சிலையரன உருத் தோற்றம்
உத்தம தேவனாய்
உயர்ந்து நான் வளர
சத்தோடு இரு கையும்
சட்டென்று வளருதப்பா

அ.தேவலோகிதன்-செட்டிபாளையம்

### "திசை மாறிப் போகின்றாள்"

'கொலன்னாவை எண்ணெய்க்குதம்
குண்டு பட்டு வெந்ததனால்
கண்டு கொண்ட இலங்கைமகள்
கலங்கி உருமாறி
தீப்பிளம்பு சுவாலையுடன்
திசைமாறிப் போகின்றாள்"

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### இலையுதிர் காலம்

ரத்தம் சிந்தும் - இந்த
யுத்த மண்ணில்
மனித மரங்களுக்கு
நித்தம்
இலையுதிர்காலம்.

த.மதிவண்ணன்-வந்தாறுமூலை

### வெள்ளோட்டம்

தொடரும் யுத்தம்
முடிந்த போது - அடுத்து
நடக்கவிருக்கும்
ஆவிகளின்
ஆட்சிக்கொரு
வெள்ளோட்டம்.

எம்.துரையன்-அக்கரைப்பற்று-08

### விடிவு

விடிவுவருமா?- சாப
விமோசனம்தான் நீங்கிடுமா?
வீசும் யுத்தப்புயலாலே
விழும் இப்பெண் மரம்தானே!

ரி.திலீபன்-தம்பிலுவில் 02

### இது ஏனோ?

மனித மனங்கள்
மரணித்து விட்டதால்
மலரும் இன்று
மரமாகியதோ?

பி.வி.அன்டன்-மட்டக்களப்பு

## கவிதைப் போட்டி இல-127



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.11.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 127
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### தேவதை

"சிற்பி செய்த சிலையுமல்ல
சித்திரமோ அதுவுமல்ல
ஏற்றமில்லா யுத்தமதால்
ஏங்கியழும் மானிடரை
அற்புதமாய் மர உருவில்
அணைக்க வந்த தேவதையே"

ஏ.எம்.முஸ்தபா-ஏறாவூர்-01

### இனம் உதிர் காலம்

இது இலை உதிர் காலம்
அல்ல-
மனித இனம் உதிர்காலம்

எஸ். அபிராமி-வாழைச்சேனை

### மரத்ததுவோ

உரசும் போர் நடுவில்
உறவுகளும் தொலைந்தனவோ!
வரவை எதிர்பார்த்து
வஞ்சியிவள் வாடிநிற்க
கரமும் கிளையாகி
மனமும் மரத்ததுவோ?!

தமிழினி இராசரத்தினம்-மட்டக்களப்பு

### இறைவன் கட்டளை

மரத்திற்கு உரமிடுங்கள்
மங்கைக்கு - சீதனக்
கொடுமையின்றி வாழ
வரமிடுங்கள்

சுபாவரன் -கண்டி

### மாதிரியோ?

விடுதலையே நாதமென
வேண்டிநின்ற காரணத்தால்
சுடுகலனுக் கிரையாகிச்
சுடலையிலே புதைந்த இவள்,
படுமரமாய் வரமெடுத்துப்
பரிதவிக்கும் தன்னினத்தின்
எடுகுறியாய்ப் புவியினிலே
என்றும் நிலைத்தவளோ?

கல்முனை-இப்றா.

### கன்னிமரம்

காடுகளை வெட்டிவிட்டு
கன்னிகளை நட்டீர்களோ??

அமுதா-மகாலிங்கசிவம்-மட்/கல்லடி

### எக்ஸ்ரே

முரசின் 125 பிரதிகளும் சேமித்து வைத்திருந்தவன் நான். மீண்டும் ஒரு தடவை எக்ஸ்ரே ரிப்போர்ட்டை திரும்பப் படித்துப் பார்த்தேன். இன்றைய நிலவரத்தை படிப்படியாக அன்றே காட்டிவிட்டது முரசு. பரபரப்புக்காக தரப்பட்ட தகவல்கள் அல்ல. மீண்டும் படித்தால் அட உண்மைதான் என்று நிகழ்ச்சிகள், நிலவரங்களோடு ஒப்பிட்டு வியக்க வைப்பதே முரசின் அரசியல் எக்ஸ்ரே.

மார்க்கண்டு சதாசிவம், கொட்டாஞ்சேனை-கொழும்பு.

புலிப்பாய்ச்சலின் பின்னர் படைநடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படும் என்று பலர் சொன்னார்கள். நாரதரோ போர் தொடரும். புலிகளும் தாக்குதல் யுத்தத்தை முழுமையாக செய்ய முடியாத நிலையில் இருப்பதால், போரின் கட்டங்கள்மாறும் என்று கோடிட்டுக் காட்டியிருந்தார். நாரதர் சொன்னது நடந்தாச்சு.

ஜோ.தில்லைநாதன் (ஆசிரியர்) களுவாஞ்சிக்குடி- மட்டக்களப்பு.

இந்த நூற்றாண்டில் தலைசிறந்த நாவல் என்றால் அது 'தாய்'. உலகத் தலைவர்கள் பாராட்டியதில் பொய்யில்லை.

ஏ.எஸ்.றம்ஸியா-குருநாகல்.

உபேந்திரன் என்று இராமாயணத்தில் ஒரு பாத்திரம் வருகிறதே, அது யார்? இராஜகுமாரன் விளக்குவாரா

மா. சோதீஸவரன், அப்புத்தளை

வரும் வாரம் இராமாயணத்தில் விளக்கம் இருக்கும்.

ஆ.ர்.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

எம்.ஐ.எஃப்.பஸ்லா, தக்கியாவீதி-கொச்சிக்கடை.
எல்.எம்.நவாப்தீன்-நிகழி.
அ.கணேசமூர்த்தி, ஆரையம்பதி-மட்டக்களப்பு.
எம்.சுரேந்த், தங்கமலையூர்-ஹப்புத்தளை.
மணிமேகலை-உலர்மலை.
ஏ.அனற்-மூதூர்-07.
கே.ஆர்.இராமகிருஷ்ணா-அக்கரைப்பற்று-08.
ரம்லானியா பரீட்-அக்குறணை.
ஆர்.ஜஸ்மின்-மிஹுவாங்கொட.
கே.முஜீவா-முள்ளிப்பொத்தானை.
என்.பாலஸ்கந்தராஜா-வெலிசர, ராகம.
என்.நஜ்ப்-தோப்பூர்-04.
எஸ்.பத்மா, உமாதினி, நல்சாத், கொழும்பு-10.
அ.ற.மு.ஜெமில்-பாண்டிருப்பு-01.
க.யோகேஸ்வரன்-அழகல்லையூர்.
சி.புஷ்பகாந்தன்-நுவரெலியா.
த.மதிவண்ணன்-வந்தாறுமூலை.
எம்.தியாகேஸ்வரி, எம்.பரமேஸ்வரி
மட்/முறக்கொட்டாஞ்சேனை.
ம.இளங்கோவன்-6ம் வட்டாரம்-மட்/துறைநீலாவணை.
களுத்துறை டைவர், கொழும்பு-12
பீ.எம்.ஏ.றகுமான்-கஹடகஸ்திகிரிய.
விஜயன்-ஜமுனாதேவி-தோப்பூர்-மூதூர்
ம.ரேணுக்காதேவி-இறக்குவானை.
எம்.தேவன்-வேப்பங்குளம், வவுனியா
மா.மோகனசுந்தரி-பொப்பிட்டிய
ஆர்.எஸ்.சிவா-வெலிக்கந்த-தெரனியகல.
ஜா.ஹாசி முஹம்மத்-அக்கரைப்பற்று-06.
என்.ராஜன்-குவைட்
செல்வி-ரஞ்சிதா பூபாலன்-கண்டி.

## வாசகர் சாலை



ஆயுதபலம் மட்டும் போதாது. அரசியல் பலமும் வேண்டும் என்று ராஜதந்திரி விடுதலைப் புலிகளுக்கு சொல்லியிருந்தது மெத்தச் சரி.

கே.உதயணன்-திருக்கோணமலை.

பட்டுக்கோட்டையார் வாரம்தோறும் கலக்கிக் கொண்டிருக்கிறர். பார்க்கர் ஸ்மித் கில்லாடி.

ஏ.பத்திநாதன்-வவுனியா.

நெஞ்சத்தில் ஈட்டி செருகியது போன்ற வசனங்கள். 'தாய்', நாவல் விறு விறு ரகம். ஆனால் கற்பனையல்ல. ஒரு சமூகம் எழுந்தவிதம், தாண்டிய தடைகள் கண்முன்னால் விரிகின்றன.

எம். சுரேஸ்குமார்-ஸ்காபுரோ-கனடா.

தணிக்கை. தணிக்கை. ஆனால் எக்ஸ்ரே ரிப்போர்ட் மட்டும் ஊடுருவிக் கொண்டுதான் இருக்கிறது. நாட்டு நடப்பை நாடிபிடித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

எல்.நஜீம்-கல்முனை.

கிண்ணியா அமீரலியின் கதை இதம். அதிரடி அய்யாத்துரையாரின் சின்னக் கவிவரிகள் சிறப்பாக அமைகின்றன.

கோட்டைமுனை முத்துமணி-மட்டுநகர்.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்-குடாநாட்டில் பொறி வெடிகள்?

# உடன் வெளியேறுமாறு புலிகள் அறிவித்தல்

## "இறுதிவரை போரிடுவோம்" என்று தமிழ் செல்வன் தெரிவிப்பு!

(யாழ் நிருபர் வர்மா)

**யாழ் குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி தவிர்ந்த பகுதிகளிலுள்ள மக்களை வெளியேறிச் செல்லுமாறு விடுதலைப் புலிகள் அமைப்பினர் கோரியுள்ளனர். புலிகள் அமைப்பினர் அவ்வாறு கோருவதற்கு முன்னரும் பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து செல்லத் தொடங்கியிருந்தனர். புலிகள் அமைப்பினரும் மக்களை வெளியேறுமாறு கோரியதன் பின்னர் தென்மராட்சிக்கு செல்லும் பாதைகள் சன நெரிசலில் நிரம்பிவழிகின்றன. நெரிசலில் சிக்கிய இரண்டு குழந்தைகள் மூச்சுத்திணறிப் பலியாகியுள்ளனர்.**

### மக்கள் வெளியேற்றம்

யாழ்-குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகள், மக்கள் வெளியேறிக் கொண்டிருப்பதால் வெறிச்சோடியுள்ளன.

படையினரின் 'சூரிய ஒளிக் கதிர்' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து சிறுப்பிட்டியிலும், புன்னாலைக்கட்டுவனிலும் படையினர் நிலைகொண்டிருந்தபோது, மக்களது வெளியேற்றத்தை புலிகள் கட்டுப்படுத்தி வந்தனர்.

மக்களை பூரணமாக வெளியேற்றும் எண்ணம் முதலில் புலிகள் இயக்கத்திடம் இருக்கவில்லை. பின்னர் புன்னாலைக் கட்டுவனிலிருந்து ஊரெழு நோக்கியும், சிறுப்பிட்டியிலிருந்து நீர்வேலி சென்று, கோப்பாய் சந்தி நோக்கி செல்லவும் படையினர் நடவடிக்கையில் இறங்கினார்கள். கோப்பாய் சந்தியில் இருந்து கைதடிப் பாதையூடாக சென்று நாவற்குழியில் படையினர் நிலை கொண்டுவிட்டால் தென்மராட்சிக்கு செல்லும் பாதை தடைப்பட்டுவிடும். அதனால் படையினர் நீர்வேலியை தாண்டிய செய்தி அறிந்ததும், பாதை தடைப்பட முன்னர் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் புலிகள் இயக்கத்தினரும் ஈடுபட்டனர்.

தென்மராட்சிப் பகுதியில் இருந்து வடமராட்சிக்கு செல்லும் வழி இருப்பதால் இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் அங்கும் சென்றுள்ளனர். எனினும் வடமராட்சிப் பகுதியும் போதிய பாதுகாப்பில்லை என்று கருதி பெரும்பாலானவர்கள் அங்கு செல்ல முன்வரவில்லை.

### வன்னியில் தஞ்சம்

சமீபத்தில் வெற்றிலைக்கேணியில் இருந்தும் படையினர் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். புலிகளும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

வெற்றிலைக்கேணி, மற்றும் ஆனையிறவு இராணுவ முகாம்களில் இருந்து படையினர் முன்னேறினால் தென்மராட்சியும் பாதுகாப்பாக இருக்காது என்று கருதி சுமார் ஒரு இலட்சம் மக்கள் யாழ்-குடாநாட்டை விட்டு வெளியேறி வன்னிப் பகுதிகளுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்தவாரம் புலிகளுக்கு சொந்தமான நூற்றுக்கணக்கான படகுகள் கிளாலிக் கடல் ஏரியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. கடற்புலிகளது பாதுகாப்போடு நடத்தப்பட்ட படகுச்சேவை மூலம் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் யாழ் குடாநாட்டிலிருந்து கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மடு போன்ற பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

படையினரது நடவடிக்கை தொடர்வதைப் பொறுத்து மூன்று இலட்சம் மக்களை யாவது வன்னிப் பகுதிக்கு புலிகள் அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

கிளிநொச்சியை பிரதான நகரப் பகுதியாக மாற்றவும் புலிகள் திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

### ஆர்ப்பாட்டம்

இதேவேளை, கிளிநொச்சியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. பெரும் தொகையான மக்கள் கலந்துகொண்ட அந்த ஊர்வலத்தின் முடிவில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

புலிகளது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் செல்வன் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். "வாழ்ந்தால் மானத்தோடு வாழ்வோம். அல்லது மானத்தோடு அழிவோம்" என்று அவர் தெரிவித்தார். "படையினர் ஆட்பலத்தோடும், படைக்கல பலத்தோடும் பாரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். அதனை எதிர்கொள்ள மக்கள் எம்மோடு சேர்ந்து ஆட்பலத்தை பெருக்க வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

### பொறிவெடிகள்

இதேவேளை யாழ் குடாநாட்டில் படையினர் தொடர்ந்து முன்னேறினால் பொறி வெடிகளில் சிக்க வேண்டியிருக்கும். பாரிய தயாரிப்புக்களை தாம் மேற்கொண்டு வருவதால் மக்கள் வெளியேறுவதே பாதுகாப்பானது என்று புலிகள் இயக்க உறுப்பினர்கள் கூறிவருகின்றனர்.

இதனையடுத்து கோவில்களில் தஞ்சம் புக நினைத்திருந்த மக்களும் வெளியேறத் தொடங்கிவிட்டனர்.

இதேவேளை வன்னிப் பகுதியில் இருந்து புலிகளது அணிகள் யாழ் குடாநாட்டுக்கு சென்றுள்ளன.

ஆர்.பி.ஜி. ரக ஆயுதங்கள் மோட்டார்கள் போன்றவற்றைச் சுமந்துகொண்டு வன்னிப் பகுதியில் இருந்து ஒரு அணி யாழ் நோக்கிச் சென்றுள்ளது.

## சிங்கள கிராமவாசிகள் மீது தாக்குதல்

## புலிகள் மறைமுக உரிமை கோரல்

சிங்கள கிராமவாசிகள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு புலிகள் அமைப்பினர் இதுவரை உரிமை கோரவில்லை. பாரிசிலுள்ள புலிகள் இயக்கப் பிரமுகர் லோரன்ஸ் திலகர் சமீபத்தில் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் மழுப்பலான பதிலையே கூறியிருந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் சிங்கள கிராமவாசிகள் மீதான தாக்குதலை மறைமுகமாக நியாயப்படுத்தும் கருத்து வெளியாகியுள்ளது. புரட்டாதி மாதத்திற்கான விடுதலைப் புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "இரண்டாம் ஈழப்போர் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு அகதி வாழ்வை பரிசாகக் கொடுக்கத் தொடங்கியது. மூன்றாம் ஈழப் போரின் ஆரம்பமே அகதி வாழ்வை குடியேற்ற வாசிகள் மீது அதிகரிக்கச் செய்துள்ளது. எதிர்காலத்தில் ஒரு அகதி வெள்ளத்தை குடியேற்றவாசிகளின் இடம்பெயர்வு சிறீ லங்காவில் ஏற்படுத்தப் போகிறது.

தமிழர் தாயகம் பங்கு போடப்பட முடியாதது. அதைப் பங்குபோட புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவுக் கப்பல் செல்ல தாமதம்

யாழ்-குடாநாட்டுக்கு தேவையான மாவை அனுப்பிவைக்க அரசாங்கம் உத்தரவிட்ட போதும் சீரற்ற காலநிலை காரணமாக கப்பலில் மா மூட்டைகளை ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. திருமலை துறைமுகத்தில் கப்பல் தரித்து நின்று மாவை ஏற்றக்கூடியவாறு கடல்நிலை சீராக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திருமலை துறைமுகத்திலிருந்து கப்பல் சென்றாலும், பருத்தித்துறை துறைமுகத்தை சென்றடையவும் சீரற்ற காலநிலை தாமதத்தை ஏற்படுத்தும்.

அதனால் கொழும்பு மூலமாக வவுனியா தாண்டிக்குளம் வழியாக உடனடி நிவாரணத்தை அனுப்புமாறு தொண்டர் நிறுவனங்களும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இல்லாவிட்டால் காலநிலை சீராகிக் கப்பல் செல்வதற்கு முன்னர் பட்டினிச் சாவுகளை மக்கள் எதிர் நோக்குவர் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

## இரண்டு துருப்புச் சீட்டுக்கள் தேவை!

## புலிகள் இயக்கம் யாழில் அறிக்கை

தற்போதைய போர்ச் சூழல் குறித்து யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"பாரிய ஆட்தொகை, படைக்கல சக்தி என்ற இரண்டு துருப்புச் சீட்டுக்களோடு அரசு போரில் ஈடுபட்டுள்ளது. இதனை வெற்றி கொள்ள புலிகள் இயக்கத்திற்கும் அந்த இரண்டு துருப்புச் சீட்டுக்கள் தேவையாக உள்ளன.

படையினரின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பதிலடி கொடுப்பது என்பதில் புலிகள் இயக்கம் உறுதியாக உள்ளது. இடிமுழக்க தாக்குதலுக்குப் பதிலடியாக புலிகள் தொடுத்த தாக்குதலும் அதில் ஒரு அங்கமாகும்.

இந்தப் பெரும்தாக்குதலில் 150 புலிகள் பலியாகியிருந்தனர். இராணுவ பரிமாணத்தைப் பொறுத்தவரை இந்த உயிரிழப்பு தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. ஆயினும் இந்தப் பதில் தாக்குதல் மூலம் புலிகள் இயக்கம் தான் நினைத்ததைச் சாதிக்க முடியாமல் போய்விட்டது என்பது உண்மையாகும்.

யாழ்-குடாநாட்டுக்குள் படையினர் கொண்டுள்ள அசுர பலத்தில் ஒரு பலவீனமும் இருக்கிறது. யாழ்-குடாநாட்டில் உள்ள படைகளுக்கு விநியோக வழிப் பிரச்சனைகளே அதுவாகும்." என்று புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆட்சேர்ப்பு நிலையங்கள் இயங்குகின்றன

## வன்னிப் பகுதியிலும் திரட்டல்

யாழ்-குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் புலிகள் இயக்கத்தின் ஆட்சேர்ப்பு அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

யாழ்-குடாநாட்டில் தென்மராட்சியிலும், வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலும் புலிகளது ஆட்சேர்ப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் நூறுபேர்வரை கடந்தவாரம் தம்மோடு இணைந்து கொண்டனர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலுள்ள இளைஞர்களையும், யுவதிகளையும் அழைத்துச் சென்று புலிகள் அமைப்பினர் பிரசார வகுப்புக்களை நடத்திவருகின்றனர்.

இயக்கத்தில் சேருமாறு விடுக்கும் வேண்டுகோளை மறுப்பவர்கள்மீது புலிகள் இயக்க உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் "உங்களுக்கு மானம் இல்லையா? வெட்கம் இல்லையா? தமிழ் தாயிடம் பால் குடித்து வளரவில்லையா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள்.

இதேவேளை இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது அனுமதியின்றி வடபகுதியை விட்டு வெளியேறுவதையும் புலிகள் அமைப்பினர் தடைசெய்துள்ளனர். அதேவேளை இடம் பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரணமாக தமது சேமிப்பில் இருந்த உணவுப் பொருட்களையும் புலிகள் வழங்கியிருந்தனர்.

## 33 இலட்சம் நஷ்டம்!

## தாமதம் ஏற்படுத்திய இழப்பு

யாழ் குடாநாட்டுக்கு அனுப்புவதற்காக கொழும்பு துறைமுகத்தில் வைத்து மண்ணெண்ணை ஏற்றப்பட்டது. பின்னர் ஏற்பட்ட இழுபறி காரணமாக கப்பல் துறைமுகத்தில் 20 நாட்களாக தடுத்துவைக் கப்பட்டிருந்தது. தற்போது கப்பல் யாழ்குடா நாட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால் கப்பல் தரித்து நின்ற நாட்களுக்காக நாள் ஒன்றுக்கு 3250 அமெரிக்க டொலர்கள் வீதம் 20 நாட்களுக்கும் 65 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (33 இலட்சம் ரூபாய்) யாழ்-அரச செயலகத்தால் செலுத்தப்பட்டுள்ளது. நஷ்டத்தை ஈடுகட்ட மண்ணெண்ணை விலையை அதிகரித்தே யாழ்குடாநாட்டில் விற்பனை செய்யவேண்டியிருக்கும்.

## இரு தரப்பும் துப்பாக்கிகளைக் கைவிடவேண்டும்

## சென்னைக் கூட்டத்தில் கலைஞர் பேச்சு

தமிழ் நாட்டில் சென்னையில் இலங்கையில் பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக்கொடி ஊர்வலம் ஒன்றை நடத்தியது. தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமையில் நடத்தப்பட்ட அந்த ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் கலைஞர் கருணாநிதி உரையாற்றினார்.

"இலங்கையில் தமிழர்கள் அமைதியும், உரிமையும் பெற்று வாழ வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். வரும் வழியில் நீங்கள் எழுப்பிய முழக்கம் எனது காதில் ஒலித்து இதயத்தில் பாறைபோல இறுகியது.

நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்றுதான் நாம் கூறுகிறோம்.

இலங்கையில் இரு சாராரும் துப்பாக்கியைப் போட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும். இடையில் மத்திய அரசு செயல்பட்டுத் தீர்வு காண வேண்டும்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் மருந்து, மாத்திரைகள் இல்லாமல் தவிக்கிறார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக மருந்து, மாத்திரைகள் வாங்கி சிகிச்சை அளிக்க ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும். வாழ்க இலங்கைத் தமிழர்கள். அவர்களுக்காக நமது குரல் தொடர்ந்து ஒலிக்கும்." என்று கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.



## பைத்தியக்காரன் பிடித்த புலி

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் பைத்தியக்காரன் ஒருவரால் பொலிசில் மாட்டிக்கொண்டார். தமது உறவினர் ஒருவரைச் சந்தித்துவிட்டு சென்ற இளைஞரை பைத்தியக்காரன் ஒருவர் பின்தொடர்ந்து வந்தாராம். திடீரென்று சிங்களத்தில் புலி, புலி, குண்டு, குண்டு என்று பைத்தியக்காரன் கூச்சலிட வீதியால் சென்றவர்கள் அந்த இளைஞரைப் பிடித்துக் கொண்டார்கள். அங்கு வந்த ஒருவர் தன்னை ஒரு இராணுவ உத்தியோகத்தர் என்று அறிமுகப்படுத்திவிட்டு, அந்த இளைஞரை கொண்டு சென்று வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தாராம். மாட்டிக் கொண்டவர் தமிழ் கட்சி ஒன்றின் தீவிர ஆதரவாளராம்.

## மாணவர்கள் கைது

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாடசாலைகளுக்கு அரசாங்கம் விடுமுறை விட்டுள்ளது. அதேசமயம் திருமலையில் பாடசாலை மாணவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். திருமலை நகரில் புலிகளது நடமாட்டம் இருப்பதாக சந்தேகித்தே பரவலான கைதுகள் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை உப்புவெளி மூன்றாம் கட்டையில் தொழில் நுட்பக் கல்லூரி அகதி முகாமில் உள்ள அகதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை.

## பாராளுமன்றத்தில் கூட்டணி தடுமாற்றம்!

## நேரடியாக தனித்து எதிர்க்கத் தயக்கம்!

அவசர காலச் சட்டப் பிரேரணை 11.07.95 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்து வாக்களிக்கும் என்று அக் கட்சி வட்டாரங்கள் முன்னர் தெரிவித்திருந்தன.

எதிர்த்து வாக்களிக்கும் முடிவோடுதான் பாராளுமன்றம் சென்றதாகவும் பின்னர் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டி ஏற்பட்டதாகவும் தனது பெயரை வெளியிட விரும்பாத கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் சென்ற ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தம்மோடு சேர்ந்து எதிர்த்து வாக்களிக்க முடியுமா என்று கேட்டார்களாம். வழக்கமாக எங்களை பாராளுமன்றத்தில் இருத்திவிட்டு நைசாக நழுவிப் போய்விடுவீர்கள். இப்போது உங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாக எங்களையும் கூட்டுச் சேர்க்கப் பார்க்கிறீர்கள் என்று ஈ.பி.டி.பி, புளொட் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறிவிட்டார்களாம்.

தாம் தனித்து நின்று எதிர்த்து வாக்களித்தால் ஆளும் தரப்பின் பார்வையில் நேரடியாகப்பட வேண்டியிருக்கும் என்பதால் எதிர்ப்பு தெரிவிக்கும் யோசனையை கூட்டணி கைவிட்டது.

பின்னர் பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு வெளிநடப்புச் செய்யப் போவதாகக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். புளொட், இ.தொ.கா., ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு உடன்பட்டு வருவார்களோ என்று நாடி பிடித்துப் பார்க்கப்பட்டது.

முன்னர் பல தடவை கூட்டு நடவடிக்கைகளுக்கு கூட்டணி உடன்படவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஈ.பி.டி.பி, புளொட், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசியல் தீர்வு யோசனையை சமர்ப்பித்தபோதும் கூட்டணி ஒதுங்கிக் கொண்டது. இப்போது தமது தேவைக்காக நம்மையும் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறது என்று ஏனைய தமிழ் கட்சிகளது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து விட்டனர்.

இறுதியில் பாராளுமன்றத்தில் அறிக்கை விடும் முடிவையும், வெளிநடப்பு செய்யும் முடிவையும் கூட்டணி கைவிட்டது. வழக்கம் போல வாக்களிப்பு நேரத்தில் கூட்டணி பா.உக்கள் சபையில் காணப்படவில்லை.

## சம்பளம் இல்லாத உத்தியோகம்

யாழ்-குடாநாட்டில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப் பணம் இல்லை என்று யாழ் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்-குடாநாட்டுக்கு தேவையான பணத்தை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை எதிர்பார்த்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அக்டோபர் மாதத்திற்குரிய சம்பளப் பணத்தில் 50 வீதமான சம்பளம் அரச ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்று யாழ் அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பணம் இல்லாமையால் அங்கு வங்கிகளும் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## புகார் பெட்டி

# தேசிய தொலைக்காட்சியில் புறக்கணிப்பா?
## சுட்டிக்காட்டியும் தொடர்ந்து பாராமுகம்

இலங்கையின் தேசிய தொலைக்காட்சி சேவையான 'ரூபவாஹினி'யில் தமிழ்மொழி அமுலாக்கல் சம்பந்தமாக கடந்த காலங்களில் பலமுறை பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்ற போதிலும் எவ்வித மாற்று நடவடிக்கைகளோ, முன்னேற்றமோ இன்றி தனது இஷ்டத் துக்கு இயங்கிக்கொண்டு வருகிறது.

இலங்கையின் அரசகரும மொழிகளில் தமிழும் அந்தஸ்துப் பெற்றுள்ளது. அதுவும் அரங்கேற வேண்டும் என்ற எண்ணமோ, சிறுபான்மை தமிழ்பேசும் மக்களும் ரூபவாஹினியை ஆர்வத்துடன் பார்க்கிறார்கள்- வருடாந்தம் அனுமதிப் பத்திரமும் பல ரூபாய்கள் செலுத்தி பெறுகிறார்கள் என்ற உணர்வோ, சிந்தனையோ இல்லாமல் ரூபவாஹினி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசும் பாராமுகமாயிருப்பது எதற்காக?

ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும் தமிழ், ஆங்கில, ஹிந்தித் திரைப்படங்கள், பாடல்கள் மற்றும் நாடகங்கள் என்பன சிங்கள மொழி பேசுவோரின் நன்மை கருதி சிங்கள மொழியில்-சிலவற்றின் கதைச்சுருக்கமும், உப-தலைப்புக்களும் இடம்பெறுகின்றன. இதனால் சிங்களமொழி பேசுவோர் சிரமமின்றி ஒளிபரப்பை ரசிக்கிறார்கள். ஆனால் சிங்கள மொழியிலான ஒளிபரப்புக்களோ ஏனைய பிற மொழி ஒளிப்பரப்புக்களோ தமிழ்மொழி பேசுவோரின் நன்மைகருதி அதனை தமிழ்மொழியில் உப- தலைப்புக்களிலோ, கதைச்சுருக்கத்திலோ தருவதில் மட்டும் பாரபட்சமும், அசிரத்தையும். தமது மொழி தவிர்ந்த பிறமொழி ஒளிபரப்புக்களை தமிழ் பேசுவோர் பார்ப்பதில்லை, அவர்களுக்கு அது அவசியமில்லையென சம்பந்தப் பட்டவர்கள் கருதுகிறார்களா? இதைவிடுத்து அரசகருமமொழி அமுலாக்கல் என்று கோசமிடுவதில் அர்த்தமில்லையே!

இன, மொழி பேதங்களற்ற ஒரு சிறந்த தேசிய தொலைக்காட்சி சேவையே அனைத்து மக்களினதும் அடிப்படை விருப்பமாகும். குறிப்பாக தமிழ் பேசும் சிறுபான்மை சமூகங்களின் அபிலாசையும் கூட.

எனவே இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, சிறுபான்மை சமூகங்களினது தேசிய அபிலாசைகளில் ஒன்றான ரூபவாஹினியில் தமிழ்மொழி அமுலாக்கல் விடயத்தில் கூடிய கவனமெடுத்து செயற்பட முன்வருவார்களா?

ஏ.அஸ்வர், ஸம்.ஸம். சனசமூக நிலையம், மாளிகைக்காடு.

## கார்ட்டூன் மூலை




நன்றி- லங்காதீப

## நாய்களை கொஞ்சம் கவனியுங்கள்

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலக வளவிற்குள் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதே வளவிற்குள் பிரதேச சபைப் பொதுநூலகமும் உள்ளதால் மாணவர்களும், பொதுமக்களும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பிரச்சனை குறித்து பிரதேச சபைக்கு பலமுறை முறையிட்டும் எதுவித நடவடிக்கைகளும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. இப்பிரதேச வளவிற்குள் மாத்திரம் 10 பெரிய நாய்களும், 6 சிறிய நாய்களும் உள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தினமும் நூலகத்திற்கு வரும் மாணவிகளை நாய்கள் துரத்துவதால் மாணவிகள் நூலகத்திற்குவர அஞ்சுகின்றனர். அதேநேரம் பிரதேச செயலகத்தில் அலுவல்களுக்காக வயோதிபர்களும் வர அச்சப்படுகின்றனர்.

உடனடியாக நாய்களை பிரதேச சபை ஒழிக்காவிட்டால் பொது நூலகத்தை இழுத்துமூடும் அபாயம் ஏற்பட்டுவிடலாம் எனப் பலர் புகார் தெரிவிக்கின்றனர்.

## மாறியது ஏனோ?

ஐ.டி.என் தொலைக்காட்சியில் வெள்ளிக் கிழமைகளில் ஒளிபரப்பப்பட்டுவந்த தமிழ்த் திரைப்படங்கள், தற்போது டி.என்.எல் தமிழ்த் திரைப்படம் இடம்பெறும் ஞாயிற்றுக் கிழமைகளுக்கு மாற்றப்பட்டதன் காரணம் என்ன?

ஒரே தினத்தில் இரண்டு திரைப் படங்களை ஒ(ளி)லிபரப்புவதனால் எந்தப் படத்தைப் பார்ப்பது என்ற பிரச்சனை ஏற்படுகிறது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றி அக்கறை செலுத்தின் அது வரவேற்கத்தக்கதாகும்.

செல்வி. சு.வாணீஸ்வரி-அப்பர் கலஹா.

## தரவேண்டியதை தரவில்லை

வவுனியா மாவட்டத்தில் மிக கஷ்டமான பிரேதசம் செட்டிக்குளம் செயலகப் பிரிவு. இங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு போதிய தங்கு வசதியோ, போக்குவரத்து வசதியோ இல்லை. இங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு இதுவரை ஊக்குகைப் படி வழங்கப்படவில்லை. ஆனால் உயர்மட்ட அதிகாரிகள் அவர்களது ஊக்குகைப்படியை பெற்று விட்டனர். போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாதமையால் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு(மாகாண அரச) வழங்கப்படவில்லை என உயர்அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் உத்தியோகத்தர்கள் சித்திரை மாதம் முதல் புரட்டாதி மாதம் வரையிலான ஊக்குகைப்படி நிலுவையை பின்னரும், ஐப்பசி மாத ஊக்குகைப் படியை அந்த மாத சம்பளத்துடனும் தரும்படி கோரிய போதும் அது நிராகரிக்கப்பட்டது. அதனை வழங்குவதற்கு போதுமான நிதி கையிருப்பில் இருந்தும் வழங்கப்படாதது வியப்பிற்குரியதே. உயர் அதிகாரிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திய நடைமுறையை மற்றைய உத்தியோகத்தர்கள் விடயத்திலும் பயன்படுத்தி இருக்கலாம் என்பது மற்றைய உத்தியோகத்தர்களின் கருத்தாகும்.

சண்முகலிங்கம், அரச எழுதுநர் பிரதேச செயலகம், செட்டிகுளம்.

## தண்ணீர் - தண்ணீர் என்று வருமோ?

மொனறாகலை மாவட்டத்தில் படல்கும்புர பிரதேசத்தில் கமேவெல தோட்டம் அமைந்துள்ளது. இத்தோட்டத்தில் மூவாயிரம் (3000) தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இம் மக்களுக்கான குடிநீர் விநியோகம் முற்றாகத் தடைப் பட்டுள்ளது பெரும் பிரச்சனையாகும். இத்தோட்டத்திற்கான நீர் விநியோகம் 150 வருடங்கள் பழைமைவாய்ந்த குழாய்கள் மூலமாகவே மேற்கொள்ளப் பட்டு வந்தன. ஆனால் கடந்த ஐந்தாறு வருடங்களாக இந்நீர் விநியோகம் தடைப் பட்டுள்ளது. இது சம்பந்தமாக தோட்ட நிர்வாகமோ எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்துடன் தோட்டத் தொழிற்சங்கங்களும் பேச்சுவார்த்தை நடத்தியும் பலன்கிடைக்கவில்லை.

ஆயினும், தொண்டர் ஸ்தாபனமான சர்வதேசத் திட்ட நிறுவனம்(பிளேன்) பொறுப் பேற்று நலன் விரும்பிகளின் சிரமதான பணி மூலம் நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து நீர் விநியோகம் செய்ய முன் வந்து வேலைத் திட்டத்தை ஆரம்பித்தது. இதற்கு நீர்த்தாங்கி அமைக்கப்படும் பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மை இனமக்கள் எதிர்ப்பு தெரிவித்து பசறை பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி தடுத்துள்ளார்கள். இது சம்பந்தமாக தோட்ட நிர்வாகம் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக தோட்டத் தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுப்பார்களா? மேலும், குடிநீர் பிரச்சனையால் இத் தோட்டத்து மக்கள் பெரும்பிரச்சனையை எதிர் நோக்குவதுடன் சுகாதார சீர்கேட்டுக்கும் உள்ளாகியுள்ளார்கள் என்பது வேதனைக்குரிய விடயமாகும். தோட்ட நிர்வாகமோ, தொழிற்சங்கங்களோ கண்மூடி மௌனமாக இருந்தால் இத் தோட்டத்து மக்களுக்குக்கிடைக்கும் பிற தொண்டர் ஸ்தாபனங்களின் உதவி சிக்காமல் போவது தெட்டத்தெளிவு.

எஸ்.இராஜேந்திரா( ஆசிரியர்)-பசறை

## தாய்மொழிக்கு இடமில்லையா?

மலையக பகுதிகளில் படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் முகமாக பல்வேறு துறைகளிலும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கு அவர்களின் தாய்மொழியில் நேர்முகப்பரீட்சை நடத்தப் படுவதில்லை. சகோதர மொழியிலேயே (சிங்களம்) நடத்தப் படுகின்றது. சகோதர மொழி தெரிந்த இளைஞர், யுவதிகள் தப்பித்துக் கொள்கின்றார்கள். தெரியாதவர்கள் தடுமாறுகின்றார்கள். உதாரணமாக, இவ்வருடம் நடத்தப் பட்ட நூலக முகாமையாளர் பதவி (இடம்:-கினிகத்தேன), கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளுக்கு என ஆசிரியர் நேர்முகப்பரீட்சை(இடம்:நுவரெலியா)- இவை போன்ற இன்னும் பல நேர்முகப் பரீட்சைகளில் இந்நிலை காணப்பட்டது. ஆகவே அந்தந்த தாய்மொழி இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் தாய்மொழியில் எந்த பரீட்சையும் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம். இனியும் இது போன்ற தவறுகளை மலையக மக்களுக்கு செய்ய வேண்டாம்: அவர்களின் நலனில் கவனம் செலுத்தவும்.

இரா.இராஜா, பொகவந்தலாவ.


## மணிமண்டபம்

WEDDING HALL at WELLAWATTA

மணமணவறை, வீடியோ, போட்டோ, தம்பதிகளின் அலங்காரம் ஐயர், ஏனைய சகல நிரந்தர ஒழுங்குகளும் அடங்கிய மண்டபம் வேறு வைபவங்களுக்கும் வாடகைக்கு உண்டு.

Tele:503552,592586,595242,595243.

விலாசம்:
58, HAMERS AVE, WELLAWATTA.
பொலிஸ் நிலையத்துக்கு அருகில்

## கணனி வகுப்புக்கள்

வெள்ளவத்தையில்

MDS

36, சின்சபா வீதி (சவோய் சினிமா-எதிரில்)

LECTURE IN SINHALA, TAMIL & ENGLISH LANGUAGE DIP. IN COMPUTERS, WITH WORLD RECOGNIZED CERTIFICATES.

கற்போர் வசதிக்கேற்ற வகுப்பு நேரங்கள் தரப்படும். சகலவிதமான கணனி வகுப்புக்களும் உண்டு. உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

Tele: 596515,592586
MICRO DEVELOPMENT (PVT) LTD.

## தையல் வகுப்பு

DRESSMAKING | Full Course 1 Month

Blouse Jacket Shalwar Frocks

also Cake icing Flower making Hair styling, Beauti culture

AMS-Wellawatte-Opp. Roxy 571/101/1, Galle Rd, T/508062

## சித்தர்களின் தெய்வீக மருத்துவம்

(GOVT. APPROVED CHARTY) மட்டக்களப்பு, கல்லடி (வேலூர்) குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு, மகாசக்தி உபாசகர் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி (அக்குப்பங்சர்) டாக்டர்-சக்தியானந்தபாவா மட்டக்களப்பு-மலையாள (இந்தியா) பாரம்பரிய கைகண்ட அனுபோக புராதன (மருந்து, மந்திர, யந்திர, மனோவசிய, ஆகார்ஷண) வைத்திய முறைகளினால் உடல்நோய், மனநோய், தீயசக்திகளினால் ஏற்பட்ட தீவினைகளையும் தீர்த்து துன்பங்கள் அணுகாமல் "காவல்ரட்சைகள், சர்வகாரியசித்தி, தாயத்து, நவக்கிரகதோஷ, சர்வரோக நிவர்த்தியந்திரம், ஜனராஜ வசிய யந்திரங்களும்" செய்து கொடுக்கிறார். பிரிந்த குடும்பங்களை உறவாக்க, விரும்பிய வாழ்க்கையை அமைத்து இன்பமாக வாழ, (இருவர் பெயர்களும் தேவை) வேறு நன்மையான தனிப்பட்ட மாந்திரீக வசிய விடயங்கள் செய்து கொள்ள-வரமுடியாத வெளிநாட்டவர்கள் கோரிக்கைகளை எழுதினால் உங்கள் விருப்பங்களை உடன் நிறைவேற்ற பரிகாரப் பொருட்களை தபாலில் அனுப்பப்படும். விரும்பியனுப்பும் காணிக்கைகளை (மணியோடர்) ஏற்று உடன் கவனிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நாடவேண்டிய விலாசம்:-

YOGI. DR. SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTER,
KALLADY, BATTICALOA.



## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ!

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

## தபால் மூலம் வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G.A.Q., B.A., B. Com., B.B.A.
G.S.Q. B.Sc (Bio & Stats)

### புதிய மாணவர்கள் அனுமதி - 1996

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மேற்படி பட்டங்களை வீட்டிலிருந்தவாறே படித்துப் பட்டம் பெறுவதற்கான எமது தபால் மூலம் பட்டப்படிப்புகள் பயிற்சித் திட்டத்திற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இப்பாடநெறிகள் பற்றிய முழுவிபரங்கள் அடங்கிய கையேட்டின் விலை ரூபா 50/-. Kotahena தபாற் கந்தோரில் பணம் பெறக்கூடியவாறு, Registrar, External Studies Academy என்ற பெயருக்கு பெற்ற ரூபா 50/- இற்கான மணியோடரையும் இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரி எழுதப்பட்ட நீள கடிதவுறையையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்து தபால் மூலமும் அல்லது நேரில் 50/- செலுத்தியும் கையேட்டையும், விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக் கொள்ளலாம்,

முக்கிய குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி 1995 டிசம்பர் 31 ஆம் திகதியாகும். இத் திகதிக்குள் எமது நிலையத்தில் தம்மைப் பதிவு செய்யும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

EXTERNAL STUDIES ACADEMY
P.O. Box : 660, No. 32, 3rd Floor,
Colombo Central Super Market,
Reclamation Road, Colombo–11.

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்வற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.

## சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை

### 1996ஆம் ஆண்டு ஜனவரிக்கான மாணவர் அனுமதி

சுவிட்சர்லாந்தின் சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையில் மூன்று ஆண்டு ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கையை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து ஏற்கப்படுகின்றன.

தகைமை : க.பொ.த. (சா/த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம் 17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப் பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறைப் பயிற்சிக் காலத்தின்போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூ. 430000 ) சேமிக்கலாம்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கை பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1995 கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி வரை சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைததுவ கற்கை பற்றிய மேல் விபரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

தழுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்,
LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
கொழும்பு - 11.
தொ. பே. 320139
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

### நாரதர்

# போர்க்களமும் புதிய காட்சிகளும்!

கோப்பாய்க்குப் பின்னர் நிலமை முன்பு போல சுமுகமாக இருக்காது என்று கடந்தவாரம் தெரிவித்திருந்தேன். கோப்பாய் சந்திவரை செல்ல கடந்தவாரம் முழுவதும் படையினர் பலத்த முயற்சியில் ஈடுபடவேண்டியதாகியது.

நீர்வேலிக்கும், கோப்பாய் சந்திக்கும் இடையிலும், மறுமுனையில் ஊரெழுவுக்கும் உரும்பிராய் சந்திக்குமிடையிலும் படையினர் கடந்த வாரம் தரித்து நின்று கொண்டிருந்தனர்.

படையினரின் இருமுனை முன்னேற்றத்திற்கு தம்மால் முடிந்தளவு எதிர்ப்பை புலிகளது அணிகள் காட்டிவருகின்றன.

எனினும் புலிகளது முக்கிய நிலைகள் யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியில் இருந்து தென்மராட்சிக்கும் யாழ்-குடாநாட்டுக்கு வெளியே வன்னிப்பகுதிக்கும் மாற்றப்பட்டுள்ளன.

யாழ்-குடாநாட்டில் பெரும் பகுதி படையினர் வசம் சென்றுவிடும் என்பதை புலிகள் தமது நிலைகளை மாற்றிக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளை வைத்து பொது மக்கள் கணிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

அதனால், யாழ்-குடாநாட்டின் மத்திய பகுதியில் இருந்து சாரிசாரியாகப் பொது மக்கள் தென்மராட்சி நோக்கி செல்ல ஆரம்பித்தார்கள்.

படையினரின் 'இடிமின்னல்' தாக்குதல் நேரத்தில் யாழ்-மத்திய பகுதியில் இருந்து பொதுமக்கள் பெருமளவில் இடம்பெயர்வதை புலிகள் கட்டுப்படுத்த முற்பட்டார்கள்.

படையினர் உள்ளே வந்துவிடுவார்கள் என்ற வதந்திகளை நம்பவேண்டாம் என்று புலிகள் சொல்லிக்கொண்டிருந்தனர்.

'சூரியக்கதிர்' நடவடிக்கையை பொறுத்தவரை நிலமை மாறிவிட்டது.

பொதுமக்களை வெளியேறிச் செல்லுமாறு புலிகளே நேரடியாகச் சொல்லத் தொடங்கிவிட்டனர்.

பொதுமக்கள் வெளியேறிச் செல்ல புலிகளும் உதவியுள்ளனர். தென்மராட்சியில் இடம்பெயர்ந்தோர் தொகை நிரம்பி வழிவதால் தமது படகுச் சேவைகள் மூலம் பெருந்தொகையான மக்களை புலிகள் கிளிநொச்சிக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

இலண்டனில் உள்ள புலிகளின் கிளையும், பிரான்சில் உள்ள திலகரும் அதனை மறுத்துக் கொண்டிருந்தாலும் வடக்கில் புலிகள் இடம்பெயர்ந்த மக்களை ஏற்றி இறக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்-குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை இலண்டன் பி.பி.சி. நிருபர் பேட்டி காண்கிறார். ஏன் வெளியேறி வந்தீர்கள்? என்று கேட்கிறார். "அவை எங்களை போகச் சொல்லிப் போட்டினம்" என்று பதில் வருகிறது. அவை என்பது புலிகளைக் குறிக்கும். அந்தப் பேட்டிக்குப் பின்னர் இலண்டனில் உள்ள புலிகளின் கிளையின் மறுப்பும் ஒலிபரப்பானதுதான் வேடிக்கை.

புலிகளது வெளிநாட்டு கிளைகளுக்கோ அல்லது பாரிசிலுள்ள புலிகளது பிரமுகருக்கோ உண்மை நிலவரம் சரியாக தெரியவில்லை. தமது தரப்பைப் பற்றிப்பேசும் போது உடனுக்குடன் செய்தி கிடைத்தது மாதிரிச் சொல்லுகிறார்கள். சர்ச்சைக்குரிய கேள்விகள் எழும்போது, இன்னமும் விபரம் வரவில்லை என்கிறார்கள். பி.பி.சி.க்கு கிடைக்கும் செய்திகள் முதலில் திலகருக்கு சொல்லப்பட்டு பின்னர் அதற்கேற்ப கேள்விகள் கேட்கப்படுவது போலத் தெரிகிறது.

யாழ்-குடாநாட்டை எப்படியாவது தக்கவைத்தே தீருவது என்று புலிகள் போரிடுவதாக வெளிநாட்டுக் கிளைகள் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், யாழ்-குடாநாட்டு நிலவரம் அதற்கு நேர்மாறானதாக இருக்கிறது.

யாழ்-குடாநாட்டு தளப்பிரதேசத்தை தற்காலிகமாகக் கைவிடப் புலிகள் தயாராகிவிட்டனர். ஆனால், எதிர்ப்புக் காட்டாமல் கைவிட்டுச் செல்ல அவர்கள் தயாராக இல்லை.

அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. எதிர்ப்பே இல்லாமல் சுலபமாக முன்னேறினால் படைத்தரப்பு யாழ் நகரைக் கைப்பற்றினால் தலைகீழ் புரியாத உற்சாகம் ஏற்படுத்திவிடும். ப்பூ..... புலிகள் இவ்வளவுதானா என்று தைரியமும் பெருகிவிடும். அதனால் தாக்குதல் யுத்தத்தை வடபகுதியெங்கும் விஸ்தரிக்கும் உற்சாகமும் உருவாகிவிடும். புலிகளது கொரில்லா தாக்குதல்களை தைரியமாக எதிர்நோக்கும் சூழலும் தோன்றி விடும்.

எனவே தமது அணிகளை பெருமளவில் இழக்காதவகையில் மேற்கொள்ளக்கூடிய எதிர்ப்பு யுத்தத்தை புலிகள் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

தற்காப்பு யுத்தம் என்பது தமது தளப் பிரதேசத்தை பாதுகாக்க நடத்தப்படுவது. தளப்பிரதேசத்தை இழக்க தயாராக உள்ள நிலையில் புலிகள் தற்போது நடத்துவது எதிர்ப்பு யுத்தம்.

முடியுமானவரை படைத்தரப்பிடம் இழப்புக்களை உருவாக்குவதே புலிகள் நடத்தும் எதிர்ப்பு யுத்தத்தின் பிரதான குணாம்சமாக இருக்கிறது.

எதிர்ப்பு யுத்தம் காரணமாக படைத் தரப்பு தனது முன்னேற்றத்தை நிறுத்திக் கொண்டால் புலிகளுக்கு வெற்றி. படைத் தரப்பு தொடர்ந்தும் யாழ்நகர் நோக்கி முன்னேறினால் புலிகள் தமது தளப்பிர தேசத்தை மாற்றிக்கொள்வார்கள்.

யாழ்-குடாநாட்டின் ஒரு பகுதியான தென்மராட்சியில் ஆரம்பித்து வன்னிப்பிர தேசம் வரை தமது தளப்பிரதேசத்தை புலிகள் நிறுவிக்கொள்வார்கள். படைத்தரப்பைப் பொறுத்தவரை யாழ்நகரைக் கைப்பற்றும் வரை உள்ள சாதகங்கள் கைப்பற்றிய பின்னர் இல்லாமல் போய்விடும் என்பதே புலிகளது கணிப்பு.

மிகமுக்கியமாக மக்கள் இல்லாத யாழ் நகர் படைத்தரப்பின் கையில் செல்லும்போது, புலிகளிடமிருந்து மக்களைக் காக்கும் யுத்தம் என்ற கோஷம் அடிபட்டுப் போய்விடும். அதனால் வெற்றியின் கனமும் குறைந்து விடும்.

யாழ் நகரைக் கைப்பற்றி விட்டு மக்களை உள்ளே அழைக்கலாம் என்று நினைக்கலாம். அதற்கு புலிகள் விடப்போவதில்லை. இடம் பெயர்ந்த மக்களின் புகலிடமாக தென் மராட்சியும் வன்னிப்பிரதேசமும் மாறும் போது அங்கும் ஒரு தாக்குதல் யுத்தத்தை நடத்துவது படைத்தரப்புக்கு சுலபமானதாக இருக்காது. வெளியுலக கண்டனங்கள் எழக்கூடும்.

இதுவரை யாழ் குடாநாட்டு மக்களை தாம் பாதுகாப்பதாக புலிகள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

வன்னிப்பிரதேசம் புலிகளது தளப் பிரதேசமாக மாறுமானால், இடம்பெயர்ந்த மக்கள்தான் புலிகளைப் பாதுகாக்கப் போகிறார்கள். படைத்தரப்பு வன்னியில் நடவடிக்கையை அரம்பித்தால் அகதிகள் தாக்கப்படுவதாக புலிகள் சொல்லுவார்கள். உண்மையில் அகதிகள் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படவே செய்யும்.

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் கவனம் தென்மராட்சியிலும், வன்னிப் பகுதியிலும் குவிந்துள்ள அகதிகள் மீது திரும்பியிடும் நிலையில், அங்கு பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது சுலபமானதல்ல.

அதேசமயம் அகதிகளின் புகலிடமாகியுள்ள பகுதியில் இருந்து வந்து புலிகள் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருப்பார்கள்.

ஆகவே, யாழ்-குடாநாட்டில் தளப்பிர தேசத்தைவிட, வன்னித்தளப்பிரதேசம் புலிகளுக்கு அரசியல், இராணுவ ரீதியில் கூடுதலான சாதகமாக மாறினாலும் ஆச்சரியமில்லை.

ஆனால், தமது வீடுவாசல்களை இழந்து, நிர்க்கதியாக உள்ள மக்களை புலிகள் எவ்வளவு காலத்திற்கு தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்பது கேள்விக்குறிதான்.

கிளிநொச்சியைத் தாண்டி வவுனியாவுக்கு வருவதற்கும் புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. தளப்பிரதேசம் மாறினாலும், மக்கள் வெளியேறுவதற்கு புலிகள் விதித்திருந்த கட்டுப்பாடுகள் மாறப்போவதில்லை.

அகதிகளாக அல்லல் படும் நிலையில் உள்ள மக்களுக்கு புலிகளது கட்டுப்பாடுகள் வெறுப்பை ஏற்படுத்தலாம்.

ஏற்கனவே புலிகளிடம் இருந்த நம்பிக்கைகள் குறைந்து போகும் நிலையில், அங்கும் வாழவிடவில்லை, இங்கும் வாழவிடுகிறீர்கள் இல்லை என்று மக்கள் விரக்தியடையக்கூடும்.

தமது வீடு வாசல்கள் அப்படியே கிடக்க, நடுத்தெருவில் வாழும் வாழ்க்கை மக்களுக்கு கசந்து போகவே செய்யும்.

அதனால் யாழ்-குடாநாட்டில் தமது ஊடுருவும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கும் தேவை புலிகளுக்கு ஏற்படும். அப்படியானால்தான் மீண்டும் திரும்பும் நம்பிக்கையில் மக்கள் ஓரளவு அமைதியாக இருப்பார்கள்.

மறுபுறம் படையினரும் நீண்டகாலம் அங்கு நிலை கொண்டிருந்தால் கிழக்கில் நிலமை கட்டுமீறிப் போகலாம்.

யாழ் நகரை கைப்பற்றியதால் பயன் என்ன கிடைத்தது? என்று எதிர்க்கட்சியினர் அரசை துளைக்கத் தொடங்கிவிடுவார்கள்.

வெளியே என்ன சொல்லிக் கொண்டாலும் கூட, தம்மால் கைப்பற்ற முடியாத யாழ்ப்பாணத்தை பொதுஜன முன்னணி அரசாங்கம் கைப்பற்றிவிட்டால் தமது மரியாதை குறைந்து போகும் என்று ஐ.தே. க்ட்சி உள்ளே புகைந்து கொண்டிருக்கிறது.

படைத்தரப்பு கைப்பற்றும் பகுதிகளில் மக்கள் இல்லாமல் போவதில் ஐ.தே. கட்சிக்கும் உள்ளூர மகிழ்ச்சி என்பது மறுக்க முடியாதது.

யுத்தத்தைப் பொறுத்தவரை பல கட்டங்கள் உள்ளன.

தற்காப்பு யுத்தம் தாக்குதல் யுத்தமாக மாறுகிறது. தற்காப்பு என்பது தாக்குதலின் மூலம் உத்தரவாதம் செய்யப்படுகிறது.

உதாரணமாகச் சொன்னால், யாழ்ப்பாண குடாநாட்டில் படைத் தரப்பின் பிரதான தளங்களது தற்பாதுகாப்பு தற்போதைய தாக்குதல் யுத்தம் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது.

அதுபோல புலிகள் முன்பு நடத்திய புலிப் பாய்ச்சலும் புலிகளது தளப்பிரதேச தற்பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல் யுத்தமாகும்.

ஆனால், தாக்குதல் யுத்தத்தின் வெற்றி அழித்தொழிப்பு யுத்தம் மூலமே உத்தரவாதம் செய்யப்படுகிறது.

புலிப்பாய்ச்சல் மூலம் புலிகளாலும் அழித்தொழிப்பு யுத்தத்தை நடத்த முடியவில்லை. படையினரின் தற்போதைய தாக்குதல் யுத்தமும் அழித்தொழிப்பு யுத்தமாக மாற முடியவில்லை.

இரு தரப்புக்கும் இழப்புக்கள் ஏற்பட்டபோதும் தொடர்ந்து போரிடும் அளவுக்கு இரு தரப்பிடமும் சக்திகள் இருக்கின்றன.

அழித்தொழிப்பில் இரு கட்டங்கள் இருக்கின்றன. ஒன்று, எதிரியை அழிப்பது. இரண்டாவது, எதிர்க்கும் ஆற்றலை அழிப்பது. உதாரணமாக, மக்கள் இல்லாத காட்டுப் பகுதிக்குள் புலிகள் தள்ளப்பட்டிருந்தால் புலிகளின் எதிர்க்கும் ஆற்றலில் பாதி குறைந்து போய் இருக்கும்.

யாழ்-குடாநாட்டு படைமுகாம்களது விநியோகப் பாதைகளை புலிகளால் தடுக்க முடிந்திருந்தால் படைத்தரப்பின் எதிர்க்கும் ஆற்றலில் பெரும் பங்கு குறைந்து போயிருக்கும். அதற்கான முயற்சிகளில் புலிகள் ஈடுபட்டபோதும் வெற்றி கிட்டவில்லை.

எனவே-எதிரிகளையும், எதிர்க்கும் ஆற்றலையும் இருதரப்புமே விட்டுவைத்துள்ள நிலையில், யுத்தத்தின் கட்டங்கள் மாறிக்கொண்டிருக்கும். இறுதி வெற்றி யாருக்கு என்பது மட்டும் கேள்விக் குறியாக நிலைக்கும்.

புலிகளது தளப்பிரதேசம் ஏற்கனவே ஒரு தடவை கைமாறியிருந்தது.

இந்தியப்படை வந்தபோது ஏற்பட்ட காட்சி மாற்றம் அது. இப்போதும் தளப்பிரேதசம் ஒரு வேளை கைமாறிப் போகலாம். ஆனால் தற்போது ஒரு புதிய அம்சமும் சேர்ந்திருக்கிறது.

முன்னர் தமது ஆயுதங்களை மட்டுமே தூக்கிக் கொண்டு புலிகள் தந்திரோபாயமாக பின்வாங்கினார்கள்.

இப்போது ஆயுதங்களோடு மக்களையும் தூக்கிக் கொண்டு புலிகள் பின்வாங்குகிறார்கள்.

இன்னொரு விடயமும் கவனிக்கத் தக்கது, கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் இந்தியப் படைகள் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்தன. அப்போது புலிகளது ஆட்பலம், ஆயுத பலம் என்பது தற் போதைய தரத்தில் இருக்கவில்லை.

எனவே-போர்க்களம் சமீப எதிர் காலத்தில் சத்தமின்றிப் போகும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமில்லை.

அதேசமயம் படைத்தரப்பும் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்காமல் போரிட்டுக் கொண்டேயிருக்கும் புதிய தந்திரோபாயத்தை கைக்கொண்டுள்ளது. எதிரியை தேடிவர இடமளிக்காமல் தாமே தேடிச் சென்று தாக்கும் புதிய தந்திரோபாயம் இது. படைகள் இருப்பது போரிடவே தவிர, முகாம்களுக்குள் இருப்பதற்கு அல்ல என்பது அதன் அர்த்தம்.

□□

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது அமைச்சர் அஷ்ரப் மீதுதான். ஆனால் பந்து வீசப்பட்டது அஷ்ரப் என்ற தனிமனிதர்மீது என்று வியாக்கியானம் செய்யப்படுவது சரியல்ல.

பொது ஜன முன்னணியின் தரமான விக்கெட்டுக்களில் ஒன்றை வீழ்த்துவது மூலம் அணியை ஆட்டம் காணவைக்கவே ஐ.தே. கட்சிக்குள் ஒரு சாரார் விரும்பினார்கள்.


அது மட்டுமல்ல, காலித் துறைமுக குத்தகை மறுக்கப்பட்டவர் திரு.அநுரா பண்டாரநாயக்காவுக்கும் நெருக்கமானவர். அதனால் தனக்கு கொடுக்கப்பட்ட ஒரு மணிநேரத்திற்கும் மேலாக பாராளுமன்றத்தில் வாதங்களை அடுக்கிமுடித்திருந்தார் அநுரா பண்டாரநாயக்கா.

ஆளும் தரப்பை சற்று திணறச் செய்துவிட்டது எதிர்த்தரப்பு பந்துவீச்சுக்கள் என்பது மட்டும் உண்மை.

தனது வழக்கமான நிதானப் பாணியிலிருந்து மாறி சற்றே உணர்ச்சிவசப்பட்டு பதிலுரையாற்றிய அமைச்சர் அஷ்ரப்பிற்கு எதிர்த்தரப்பில் குறுக்கீடுகள் அதிகம் இருக்கவில்லை. அவரை முற்றாகவே பகைத்துக் கொள்ளாமல் இருக்கவே ஐ.தே.கட்சி விரும்புகிறது என்பதற்கு அதுவும் ஒரு அடையாளம். ரணிலும், ஏ.சி.எஸ்.ஹமீட்டும் விவாதத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தது மற்றொரு அடையாளம்.

தமிழ் கட்சிகள் அமைச்சர் அஷ்ரப் பிற்காக கை உயர்த்துவார்கள் என்பது தெரிந்ததுதான். ஆனால், தமது நிலையை நியாயப்படுத்த சகல பாராளுமன்ற தமிழ் கட்சிகளும், இனவாத நோக்கமே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு காரணம் என்று கூறியது வலுவில்லாத வாதம்.

எப்படியோ 134க்கு 85 என்ற கணக்கில் அமைச்சர் அஷ்ரப் ஆட்ட மிழக்காமல் திரும்பிவிட்டார். பொது ஜன முன்னணிக்கு இரண்டு லாபம். ஒன்று தனது முக்கிய விக்கெட்டை காப்பாற்றிக் கொண்டமை. இரண்டு, முஸ்லீம் காங்கிரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே கசப்பு ஏற்பட்டுள்ளமை.




## அதிரடி அய்யாத்துரை



கிழக்கிலும், வவுனியாவிலும் ரெண்டு எழுத்தார் கண்டபடி அவசரப்படுகினம் எண்டு தெரியுது. அதாலை வெளியில் இருந்து வாற கண்டனம் இரு தரப்பாருக்கும் சேர்த்தல்லோ வருகுது. யாருக்கு நஷ்டம் எண்டு யோசித்துப் பார்க்கலாமல்லோ.

களியாட்டம் வேண்டாம் நாடு யுத்த நிலையிலை இருக்க வேணும் எண்டு ஒரு தரப்பு சொல்லுது. மின்சாரமும் வேண்டாம். பெற்றோலும் வேண்டாம் சனம் ஒரு பாட்டிலை இருந்தாப் போதும் என்று மறு தரப்பும் காரியம் பார்க்குது. போற போக்கைப் பார்த்தால் சனம் சிரிக்கக் கதைக்கிறதும் ஒருதருக்கும் பிடிக்காமல் போனாலும் போகலாமாக்கும். துன்பம் வரும்போதும் சிரிக்கச் சொல்லி வள்ளுவரும் சொன்னவரல்லோ. அதுவும் செல்லாதாக்கும்.

கிழக்கின் தனித்துவத் தலைவருக்கு எதிராக வாக்குப் போட்டவையும் அவருக்கு கைகொடுத்து வாழ்த்துச் சொல்லிப் போட்டுத்தான் விடை பெற்றவையாம். கட்சிக்காகத்தான் உங்களை எதிர்த்து கை உயர்த்தப் போறம். தவறாக நினைக்க வேண்டாம் என்று முன்கூட்டியே சொன்னவையும் இல்லாமல் இல்லை. அதுதானுங்கோ அரசியல்.

சமாதானத்தைப் பேசுறதும் ஆபத்தானது எண்டது இஸ்ரேல் பிரதமர் ராபின் விசயத்திலும் தெரிஞ்ச போச்சு. போர் செய்தால் ஒரு பக்கம் இருந்துதான் அடி.. சமாதானம் பேசினால் எந்தப்பக்கம் இருந்தும் அடி விழலாம் எண்ட மாதிரியல்லோ நிலமை மாறிப்போச்சுது. எதுக்கும் சமாதானவிரும்பிகள் உஷாராக இருக்கிறது மிக்க நல்லது. நம் நாட்டு சமாதான விரும்பிகள் யோசிக்கத் தேவையில்லை. பிரச்சினை இறுகினா அவை வாய்திறக்கிறதே இல்லைத்தானே!

யாழ்ப்பாணத்திலை பிடிபட்ட சுரங்கக் கட்டிடம் கல்விமான் ஒருவரின் கை வண்ணம் என்று செய்திகள் வந்ததல்லோ. கல்விமான் எப்பவோ காலமாகிப்போனார். அவரது மைந்தர் தலை நகரில் என்ஜினியரிங் படிச்சுக்கொண்டிருந்தவராம். விஷயமறிந்து அவர் பிடிக்கப்பட்டுத் துருவப்படுவதாகத் தகவல்.

தமிழ் கட்சிகள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சாப்பாட்டுக் கப்பல் நகரேல்லை. ஐ.நா. சபையிலை இருந்து ஒரு குரல் கேட்டதும், கப்பல் நகரப்போவதாக செய்தி வந்திட்டுது. பிறர் சொன்னால்தான் செவியில் ஏறும் எண்ட கதைதான் நடக்குது. கதையை மாற்றினால் என்ன பாருங்கோ.

தமிழ் நன்கு தெரிஞ்ச சிங்கள நண்பர் ஒருவர் மினி பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தவராம். கையிலை ஒரு இந்திய தமிழ் சஞ்சிகை வைத்திருந்தவராம். ஆள் சந்தேகமாகக் கிடக்கு. பொலிசிலை கொடுப்போமோ எண்டு ஆராய்ச்சி நடத்தினவையாம் சிலர். நண்பரைத் தெரிந்த ஒருவர் தலையிட்டதாலை தலையிடி இல்லாமல் பிரச்சனை தீர்ந்து போச்சாம்.

ரூபவாஹினியில் செய்தி வாசிக்கிறவையின் நிலமையை பார்த்தா பரிதாபமாகக் கிடக்கு. பார்க்காம வாசிக்கிற ஸ்ரைலுக்காக செய்திகளை துண்டு துண்டாக்கிக் கொண்டிருக்கினம். போன வாரம் ஒரு பெண்மணி செய்தி வாசித்தவர். பயங்கரவாதிகள் பலியானார்கள் என்பதை பயங்கரவாதிகளாகப் பலியானார்கள் எண்டு வாசித்துப் போட்டார். பலியாக முதல் எப்படியிருந்தவை? போராளிகளாக எண்டும் அர்த்தம் செய்து கொள்ளலாம். இது பரவாயில்லை. முந்தி ஒருக்கா இதே அம்மணி 50 விக்கெட்டுக்கு 150 ரன்கள் எண்டமாதிரி செய்தி வாசித்தவர். 50 ஓவரை ரன்னாக்கிப் போட்டார். ஒரு சொல்லை வைத்தே தட்டி தட்டி கிரிக்கெட் விளையாடுகிறவையும் செய்தி வாசிப்பாளர்களாகிப் போட்டினம். எம்.ரி.வி. தொலைக்காட்சியில் ஒரு அறிவிப்பாளர் மீன்றும் சந்திப்போம் எண்டு 'டு' வை 'று' வாக்கி வாராவாரம் 'டமிழோடு' கொஞ்சிக் கொண்டிருக்கிறார்.

கூட்டான கட்சியில் தலைவர் மட்டும் கடும்போக்கு எடுக்க வேணும் எண்டு விரும்புகிறாராம். வெகுஜன பிரதிநிதிகள் பின்னடிக்கினமாம்.

தற்காலத்திற்கு பொருத்தமான ஒரு உற்சாக மாத்திரை மாதிரியான குட்டிக்கவிதை.

"மனிதா!
சுமைகள் இருப்பதால்
சோர்வடையாதே.
சுமக்க தோள்கள்
இருக்கின்றதே
சந்தோசப்படு."

(துரை எழிலன்)



படிப்பகம்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# காத்திருந்த விமானமும் தலைமறைவான தலைவர்களும்

52

**அரசியல் தொடர்**

**அற்புதன் எழுதுவது**

## உள் பிரச்சனைகள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் 1985ம் ஆண்டின் மத்தியில் உள் இயக்கப் பிரச்சனைகள் தோன்ற ஆரம்பித்தன.

1982ம் ஆண்டும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்குள் உள்பிரச்சினை ஏற்பட்டது.

1982இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தின் கொள்கைகளும், மக்கள் மத்தியிலான வேலைகளும் யாழ்-பிராந்திய கமிட்டியில் இருந்த உறுப்பினர்களால் தான் முக்கியமாக முன்னெடுக்கப்பட்டன.

இயக்கத்தின் மத்திய குழு தலைமை என்றளவில் இருந்ததே தவிர, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை தனித்துவமாக அடையாளப்படுத்திய அரசியல் பிரச்சார வேலைகளுக்கு வழிகாட்ட அதனால் முடியவில்லை.

இதனால் மத்திய குழுவை கடுமையாக விமர்சித்த யாழ்-பிராந்தியக் கமிட்டி தனித்து இயங்குவதற்குத் தீர்மானித்தது.

மட்டக்களப்பு பிராந்தியக் கமிட்டி, வன்னிப் பிராந்தியக் கமிட்டி என்பவற்றின் ஆதரேவாடு ஒரு தீர்மானத்தையும் எடுத்தது.

அப்போது இயக்கத்தின் உள் இயக்கத் தொடர்பாளராக இருந்தவர் குணசேகரன். அவரது முயற்சியின் காரணமாக 1982 இல் ஏற்படவிருந்த பிளவு தடுக்கப்பட்டது.

அதனையடுத்து ஏற்பட்ட உள் பிரச்சனை 1985இன் மத்தியில்தான் தீவிரமடைந்தது.

ஈழப் போராளி அமைப்புக்களுக்குள் இரண்டாம் கட்ட தலைமைத்துவம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பில்தான் பலமானதாக இருந்தது.

அது மட்டுமல்லாமல் கட்சிக்குள் கருத்து மோதல்களை துணிச்சலாக நடத்தக்கூடியளவுக்கு உட்கட்சி ஜனநாயகமும் ஈபி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் தான் 1986 வரை உயிரோட்டமுள்ளதாகவும் இருந்தது.

இரண்டாம் கட்டத் தலைமையே இயக்க நடவடிக்கைகளுக்கு உண்மையான தலைமைப்பாத்திரம் வகித்தமையால் தலைமைக்கு தன்னிச்சையான போக்குகளை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

இந்தியாவிலும், இலங்கையிலும் இயக்கத்தின் அரசியல்-பிரசார நிறுவனங்களும், கட்சியின் மக்கள் அமைப்புக்களும் இரண்டாம்கட்ட தலைமையின் கையில் இருந்ததும் ஒரு முக்கிய அம்சமாகும்.

இந்திய அரசுடனான தொடர்பு, இந்திய புலனாய்வு அமைப்புக்களுடனான தொடர்பு என்பவற்றை பத்மநாபா தனது கையில் வைத்துக் கொண்டார்.

## தலைமையில் பிளவு

1983க்குப் பின்னர் இயக்கத்தின் ஆட்பலம் பெருகிய நிலையில் ஏற்பட்ட புதிய சூழலுக்கு தலைமையால் ஈடு கொடுக்க முடியவில்லை.

ஆட்பலம் பெருகியதோடு தலைமை திருப்திப்பட்டுக் கொண்டதே தவிர, இயக்கத்தை புரட்சிகர கட்சியாக மாற்றும் செயல்பாட்டுக்கு தலைமை வழங்க முடியாமல் இருக்கிறது.

மத்திய குழுவில் உள்ள சில உறுப்பினர்கள் தலைமைத்துவத்திற்குரிய திறமையை வெளிப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர் என்றெல்லாம் இயக்கத்தின் இரண்டாம் கட்டத் தலைமை விமர்சனங்களை முன்வைத்தது.

மத்திய குழுவின் உறுப்பினராகவும், மக்கள் விடுதலைப் படையின் பிரதம தளபதியாகவும் இருந்த டக்ளஸ் தேவானந்தா, மத்திய குழு உறுப்பினர் செழியன் ஆகியோர் இரண்டாம் கட்டத் தலைமையின் பக்கம் நின்றனர்.

அதனால், இயக்கத்தின் இராணுவ அமைப்பும் தலைமையின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படும் என்ற நிலை இல்லாமல் போய்க்கொண்டிருந்தது.

"மத்திய குழுவைக் கூட்டி நிலைமையை ஆராயலாம்" என்றார் பத்மநாபா.

"மத்திய குழுக் கூட்டத்தை தமிழ்நாட்டில் வைத்துக்கொண்டால் வரமுடியாது. மத்திய குழு உறுப்பினர்கள் ஈழத்திற்கு வரவேண்டும். இங்கு கூட்டத்தை நடத்தலாம். கலந்துகொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார் டக்ளஸ் தேவானந்தா.

இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப் இந்திய பிராந்தியக் கமிட்டி தலைமைக்கு எதிரான விமர்சனங்களை ஒன்றுதிரட்டி உட்கட்சிப் போராட்ட ஆவணமாகத் தயாரிக்கத் தொடங்கியது.

இந்தியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் வேலைகளுக்கு பொறுப்பாக இருந்தவர்களில் சகலருமே தலைமைக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தனர்.

ஈழச் செய்தி தொடர்பு நிலைய பொறுப்பாளர் மித்திரன், இந்திய பிராந்திய நிதிப் பொறுப்பாளர் பிரேம், இந்திய பயிற்சி முகாம்களுக்கான பொறுப்பாளர் தயாபரன், இந்திய பிராந்தியக் கமிட்டிச் செயலாளர் டேவிற்சன், ஈ.பி.ஆர்.எல்.எஃப் உளவுப் பிரிவின் தலைமைக் குழுவைச் சேர்ந்தவரும், பிரசார வெளியீடுகளுக்கு பொறுப்பாக இருந்தவருமான ரமேஷ், புதுடில்லியில் கட்சி வேலைகளுக்கு பொறுப்பாக இருந்த மகேஷ், கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையான 'ஸ்போக்ஸ் மன்' ஆசிரியர் மனோராஜசிங்கம் ஆகியோர் ஒரே குரலில் விமர்சனங்களை முன்வைத்தனர்.

## மைக்கேல் எங்கே?

இதே காலகட்டத்தில் ஈரோஸ் அமைப்புக்குள்ளும் உட்கட்சிப் பிரச்சினைகள் தோன்றத் தொடங்கியிருந்தன.

உட்கட்சிப் பிரச்சினையில் முன்னின்றவர்களில் ஒருவர் மைக்கேல். யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்தவர். அவர் திடீரென்று காணாமல் போனார். மைக்கேல் எங்கே என்று கேட்டால் தமிழ்நாட்டிலிருந்த ஈரோஸ் இயக்கத்தினர் மைக்கேல் ஈழத்திற்கு போய்விட்டார் என்றனர். இங்கு கேட்டால் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கூறினார்கள். மைக்கேல் உட்பட வேறு சிலரும் காதும் காதும் வைத்ததுபோல மண்டையில் போடப்பட்டுவிட்டார்கள் என்று நம்பப்பட்டது.

ஈரோஸ் இயக்கத் தலைமையின் இந்திய அரசுக்கு ஆதாரமான போக்குத் தொடர்பாகவும் உள்ளே பிரச்சனைகள் ஏற்படத் தொடங்கின.

இயக்கங்களின் உள்பிரச்சனைகள் குறித்து இத்தோடு தற்காலிகமாக நிறுத்திக் கொண்டு மேலே தொடருவோம்.

## முஸ்லிம்களின் நிலைப்பாடு

திம்புப் பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு காணமுடியாமல் போனதற்கு இரண்டு காரணங்களே முக்கியமாக கூறப்பட்டன.

அரச படைகளின் போர்நிறுத்த மீறல்கள், வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதையோ, வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதையோ அரசாங்கம் ஏற்க மறுத்தமை என்பவையே முக்கியமான காரணமாக கூறப்பட்டது.

இதற்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்ன பதில் புத்திசாலித்தனமானது.

"வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக்கூடாது என்று அரசாங்கம் சொல்வது முஸ்லிம் மக்களுக்காகத்தான். அவர்களை அநாதரவாக்கிவிட முடியுமா? நாம் ஒரு பொறுப்பான அரசாங்கம் அல்லவா?" என்று தேனொழுகப் பேசினார் அத்துலத் முதலி.

லலித் அத்துலத் முதலி சொன்னதிலிருந்து ஒரு பகுதி இது:

"வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்பது சாத்தியமானதல்ல. இலங்கை மட்டுமல்ல சர்வேதச நாடுகளும் அதனை ஆதரிக்கவில்லை.

கிழக்கில் வாழும் 33 வீதமான முஸ்லிம் மக்களை நாம் அநாதரவாக்கிவிடமுடியாது. எந்த இனமும் இந்த நாட்டில் பாதிக்கப்படாத வகையிலான அரசியல் தீர்வையே நாம் முன்வைப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அபாயகரமான திட்டம் ஒன்றினை மேற்கொண்டு வருவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. வவுனியா, திருக்கோணமலை போன்ற பகுதிகளிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் தாக்குதல்களை மேற்கொள்ள அவர்கள் உத்தேசித்திருப்பதாக தெரிய வருகிறது."

என்று கூறியிருந்தார் அத்துலத் முதலி. உண்மையில் அவ்வாறான ஒரு திட்டம் புலிகளிடம் அப்போது இருக்கவில்லை.

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு உள்ள தடையாக முஸ்லிம் மக்களை கொண்டுவந்து நிறுத்துவதே லலித்தின் திட்டமாக இருந்தது.

இதே லலித் அத்துலத் முதலிதான் இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவினரை இலங்கைக்குள் கொண்டுவரக் காரணமாயிருந்தவர் என்பதும் மறக்க முடியாதது.

## முஸ்லிம் தூதுக்குழு

"இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். தமிழ் அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்து எமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறப்போகிறோம்" என்று அறிவித்தார் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்.

சென்னையில் இருந்த தமிழ் அமைப்புத் தலைவர்களைச் சந்திக்க பதியுதீன் மஹ்மூத் தலைமையில் ஆறுபேரடங்கிய குழு ஒன்று புறப்பட்டுச் சென்றது.

"வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்வது சாத்தியமில்லை. மாகாண சுயாட்சி ஏற்படுவதையே நாம் விரும்புகிறோம். அரசாங்கம் மாவட்ட சபை யோசனைகளை முன்வைத்தால் ஏற்கமாட்டோம்" என்று பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் கல்வியமைச்சராக இருந்தவர் பதியுதீன் மஹ்மூத்.

புலிகள் இயக்கமும், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ ஆகிய இயக்கங்களும் பதியுதீன் மஹ்மூத் தலைமையில் சென்ற தூதுக்குழுவை சந்திக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈரோஸ் ஆகிய அமைப்புக்களே தூதுக் குழுவை சந்தித்துப் பேசியிருந்தன.

## மீண்டும் முயற்சி

திம்பு பேச்சுக்கள் முறிவடைந்தபோதும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைக்க இந்திய பிரதமர் ராஜீவ் விருப்பம் கொண்டிருந்தார்.

ஈழப் போராளி அமைப்புக்களின் தலைவர்களை சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ராஜீவ் காந்தியைச் சந்தித்து தமது நிலைப்பாட்டை விளக்க ஈழப் போராளி அமைப்புக்களது தலைவர்களும் விருப்பம் கொண்டிருந்தனர்.

"போர் நிறுத்தத்தை மீறிய அரசபடைகள் திருக்கோணமலையில் பொதுமக்களை வேட்டையாடிய காட்சிகளை வீடியோ படமாக வைத்திருக்கிறோம். அதனை ராஜீவ் காந்தியிடம் காண்பிப்போம்" என்று நான்கு இயக்க கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணி (E.N.L.F) கூறியது.

ஆனால் திம்பு பேச்சு முறியும் கட்டத்திலிருந்தபோது, போராளி அமைப்பின் தலைவர்களை ராஜீவ் காந்தியைச் சந்திக்க வைக்க ஒரு முயற்சி நடந்தது.

போராளி அமைப்பின் தலைவர்களைச் சந்திக்க ராஜீவ் காந்தி நேரமும் ஒதுக்கி வைத்திருந்தார்.

சென்னையில் இருந்து அவர்களை புதுடில்லிக்கு அழைத்துச் செல்ல விசேஷ விமானம் ஒன்றும் சென்னை விமான நிலையத்தில் மூன்று நாட்களாகக் காத்திருந்தது.

ஆனால், போராளி அமைப்புக்களது தலைவர்கள் தலைமறைவாகி விட்டனர். ராஜீவ் காந்தியைச் சந்தித்தால் திம்பு பேச்சைத் தொடரவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்றே சந்திப்பை தவிர்த்துக் கொண்டார்கள்.

## கருணாநிதியின் முடிவு

திம்பு பேச்சுக்கள் முறிந்தது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியிடம் பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் கருத்துக் கேட்டது.

திரு.மு.கருணாநிதி சொன்னது இது: "1947ல் இந்திய உபகண்டம் இந்தியா, பாகிஸ்தான் என்று பிரிக்கப்பட்டதைப் போன்று, இலங்கையும் இன அடிப்படையில் பிரிக்கப்படுவதே ஒரேயொரு தீர்வாக அமையும்."

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் சி.வீரமணி ஒரு அறிக்கையில் பின்வருமாறு சொன்னார்: "இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல் தீர தனிநாடு ஒன்றுதான் சரியான தீர்வாகும்.

அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மீண்டும் இனப் படுகொலையை ஆரம்பித்துள்ளது. இப்படியான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து கலந்து கொள்ளும்படி தமிழர் பிரதிநிதிகளை வற்புறுத்தக்கூடாது" என்று தெரிவித்தார் சி.வீரமணி. அதனை மத்திய அரசுக்கு தெரிவித்து ஒரு தந்தியும் அடித்திருந்தார்.

## சதி முயற்சி

தமிழ் நாட்டில் போராளி அமைப்புக்கள் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருப்பதையும், தமிழகத்தில் ஏற்பட்டு வந்த ஆதரவும் இலங்கை அரசுக்கு கோபத்தை ஏற்படுத்திவிட்டது.

சென்னையில் போராளி அமைப்புக்களின் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த திட்டம் தயாரானது.

23.12.85 அன்று அதிகாலை 5 மணியளவில் சென்னையில் ஒரு குண்டு வெடிப்பு இடம் பெற்றது.

குண்டுவெடிப்புக்கு இலக்கான வீடு புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தங்கியிருந்த வீடாகும்.

இலங்கை அரசின் கையாட்கள் செய்த சதி முயற்சி என்று விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றம் சாட்டியது.

குண்டை வைத்தவர் யார் என்றும் இனம் கண்டு விட்டதாக புலிகள் கூறினார்கள்.

அவர்கள் குற்றம் சாட்டியது யாரைத் தெரியுமா? கந்தசாமி நாயுடுவை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் அமைச்சர் தொண்டமானுக்கு நெருக்கமாக தற்போதிருப்பவர்தான் கந்தசாமி நாயுடு.

புலிகள் ஏன் அவர் மீது குற்றம் சாட்டினார்கள்? அது அடுத்தவாரம்.

(தொடர்ந்து வரும்)

# பாலசிங்கம் வீட்டுக்கு குண்டுவைப்பு



1985ல் ஆனந்த விகடன் வெளியிட்ட கருத்தோவியம்



## ஜே.ஆர். அரசின் தீர்வுயோசனைகள்

திம்புப் பேச்சில் தமிழ் அமைப்புக்கள் முன்வைத்த நான்கு அம்ச அடிப்படைக் கோரிக்கைகளை கூறியிருந்தேன். அவற்றை நிராகரித்து இலங்கைத் தூதுக் குழுத் தலைவர் எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனா திம்புவில் தெரிவித்த யோசனைகள் இது:

1. தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற கோரிக்கை. இது இதர சமுதாயங்கள் அல்லது இனக் குழுக்களிலிருந்தும் நாட்டுக்கு தங்கள் விசுவாசக் கடப்பாட்டிலிருந்து வேறுபடும் வகையில் ஒரு தனித்துவம் அல்லது பிரிவினை என அர்த்தப்படுமானால் அது ஒரு புதிய நாட்டை உருவாக்குவதில் சம்பந்தப்படுவதாலும் நாம் அதனை நிராகரிக்கிறோம்.

× தமிழர்கள் ஒரு இனக் குழுவாகத் தொடர்ந்து நிலைப்பதற்கு அவசியமான உரிமைகளையும், நலன்களையும் பேணிப் பாதுகாப்பதற்கு உதவும் ஏதாவது யோசனைகளை பரிசீலிக்க நாம் தயாராகவிருக்கிறோம். நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படாதவாறு இலங்கையில் எல்லா சமுதாயங்களும் தங்கள் கலாசார பாரம்பரியம் மொழிப் பாரம்பரியங்கள் ஆகியவற்றை பேணிப் பாதுகாத்து ஊக்குவிக்கவும் தங்கள் மதத்தைக் கடைப்பிடிப்பதற்குமான உரிமையை நாம் அங்கீகரிக்கிறோம்.

× அரசியல் அமைப்பில் இந்த உரிமையை நாம் உறுதிப்படுத்துவதுடன். சிறுபான்மையோர் உரிமைகள் ஆணைக்குழு ஒன்றையும் நிறுவுவோம். அவசியமானால் அவர்கள் போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கான வகையில் ஒரு சபையையும் நிறுவுவோம்.

2. அடையாளம் காட்டப்பட்ட தமிழ்த் தாயகமும் அதன் பிரதேச ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தலும்.

× இக்கோரிக்கை குடியரசின் சொந்தப் பிரதேச ஒருமைப்பாட்டிலிருந்து கிளை விடுவதான எண்ணம் தெளிவாக இருப்பதால் அத்தகைய எண்ணத்தை வரவேற்க முடியாது. தங்கள் தாயகமாக தமிழர்கள் குறிப்பிடும் பகுதிகளில் இதர சமுதாய மக்களின் குடியேற்றத்துக்கு எதிராக பூரண அல்லது பகுதியான கட்டுப்பாடு இருக்கும் என்ற வெளிப்பாட்டை இக் கொள்கை தொடர்வதால் அது இலங்கை குடிமக்கள் எல்லோரது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீறுதல் என்ற காரணத்தால் நாம் அதனை நிராகரிக்கிறோம்.

× தமிழ் இனத்தின் சுய நிர்ணய உரிமை என்ற மூன்றாவது கொள்கையானது இலங்கை குடியரசில் இருந்து பிரிந்து விடும் உரிமையையும் ஒரு தனி நாட்டையும் உருவாக்கும் உரிமையையும் வெளிப்படுத்துவதால் முற்றாக ஏற்க முடியாததாகும். அத் தன்மையில் அது நிராகரிக்கப்படுகிறது.

×இலங்கையில் உள்ள எல்லா சிறுபான்மையினரதும் உரிமைகள் அரசியலமைப்பில் ஏற்கனவே உறுதிப்படுத்தப் பட்டிருப்பினும் தற்போது தாங்கள் அனுபவித்து வரும் பங்கேற்பு அளவில் திருப்தியடையாத குழுக்கள் இருக்கலாம். உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்டம் இந்த கோரிக்கைகளை போதியளவு நிறைவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

× உங்களுக்கென குறிப்பிட்ட பிரச்சனைகள் இருப்பின் நிவாரண நடவடிக்கைக்காக உங்கள் யோசனைகளை முன்வையுங்கள் என கேட்கிறேன்.

4. இலங்கையில் வாழும் எல்லா தமிழர்களுக்கும் பூரண குடியுரிமை என்ற இக்கொள்கைபற்றி ஏற்கனவே அரசாங்கம் இதுபற்றி முடிவு செய்துவிட்டதால் இதனை இங்கு விவாதிக்கத் தேவையில்லை.

இப்போது எமது பிரதான யோசனைகளை வெளிப்படுத்துவோம்.

இப்பேச்சுகளில் எட்டப்படும் ஏதாவது உடன்பாட்டை அமுலாக்குவதற்கு முன் நிபந்தனை ஒன்று தேவைப்படுகிறது.

× எல்லாவகையான தீவிரவாத நடவடிக்கையையும் முற்றாகத் துறத்தல்.

× இலங்கையிலுள்ள எல்லா தீவிரவாதக் குழுக்களும் தங்கள் ஆயுதங்களையும் சாதனங்களையும் ஒப்படைத்தல்.

× எல்லா பயிற்சி முகாம்களும் அவை இலங்கையிலாயினும்சரி வெளியிலாயினும்சரி மூடப்பட வேண்டும்.

× அகதிகள் எங்கிருந்தாலும் சரி கலவரத்துக்கும் நிலை பெயர்வதற்கும் முன்னர் அவர்கள் வாழ்ந்த இடத்துக்கு எதுவித ஊறுமின்றித் திரும்ப அனுமதிக்கப்படல் வேண்டும்.

× சேதமாக்கப்பட்டோ சிதைக்கப்பட்டோ உள்ள கோயில்கள்,தேவாலயங்கள்,பள்ளி வாசல்கள் மற்றும் வணக்கத்தலங்கள் புனரமைக்கப்பட்டு எல்லா சமுதாய மத மக்களும் எங்கிருப்பினும் அரசியலமைப் பில் உறுதிப்படுத்தப்பட்டவாறு மதத்தை கடைப்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

× இந்த முன் நிபந்தனைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன என அரசு திருப்திப்பட்ட பின்னரே தீவிரவாதக் குழுக்களின் கிளர்ச்சிகள் காரணமாக குற்றவியல் சட்டமீறல் எல்லாவற்றுக்கும் ஒரு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

× இங்கு எட்டப்படும் எந்த தீர்வும் அமுலாக்கப் படுவதற்கு எமது நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் இது ஒன்று தான் அடிப்படை.

www.padippakam.com

# அலசுவது—இராஜதந்திரி

# கெரில்லா தாக்குதல் தந்திரத்தை விட அரசியல் இராஜதந்திரத்துக்கு இடமளிக்கவேண்டும்




'சூரியக்கதிர்' ஒப்பரேஷனின் உக்கிரம் யாழ்குடாநாடு முழுவதையும் நரகலோகமாக மாற்றியிருப்பதையே அறியமுடிகின்றது.

படையினரும், எல்.ரி.ரி.ஈ.யினரும் யாழ்ப்பாண நகரில் இறுதி மோதலுக்குத் தயாராகி வருவதையே சூரியக்கதிர் ஒப்பரேஷன் முன்னெடுக்கப்படுகின்ற முறையை அவதானிக்கும்போது உணரமுடிகின்றது.

உலகில் பல்வேறு விடுதலைப்போராட்ட இயக்கங்களும் தோன்றியுள்ளன. பல்வேறு வகையிலும் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால் இன்று வடக்கே யாழ் குடாநாட்டில் இடம்பெறுகின்ற மோதல் என்பது இருதரப்புப் படைகள் வியூகங்களை அமைத்து, போர்க்களத்தில் போரிடும் மரபுப்போர் பாணியையே பெரிதும் தழுவியதாக இருக்கின்றது.

ஒப்பரேஷன் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை கடந்த மாதம் 17ம் திகதி படையினரால் முடுக்கி விடப்பட்டிருந்தது. கடந்த 12 வருடகால வடக்கு-கிழக்கு யுத்த நிலவரத்தில் இராணுவ ஒப்பரேஷன் ஒன்றில் இவ்வளவு பெருந்தொகையானவர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

பாதுகாப்புப் படைத்தலைமையகம் விடுக்கும் அறிக்கைகள் மூலமாகவே இழப்புகள் பற்றிய விபரங்களை அறியமுடிகின்றது. ஆனால் வடக்கே யுத்தப் பிரதேசங்களிலிருந்தும் கிடைக்கும் தணிக்கைக்கு உட்படாத தகவல்களை நோக்கும்போது இழப்புக்கள் எண்ணிலடங்காதவையாக இருப்பதையே அறியமுடிகின்றது.

கொழும்பு கனத்தைப் பொது மயானத்தைச் சூழவுள்ள தனியார் அந்திய காலச் சேவை நிலையங்களின் முன்பாக தினமும் பெருமளவு படையினர் நிற்பதாகவும், அத்துடன் இந்த அந்தியகால சேவை நிலையங்களுக்கு தினந்தோறும் படையினரின் சடலங்கள் கணிசமானளவு வந்து சேருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கே பல்வேறு பெயர்களிலும் இராணுவ ஒப்பரேஷன்கள் கடந்த காலங்களில் நடத்தப்பட்டுள்ளன.

# இது வரை இடம்பெறாத நீண்ட இராணுவ ஒப்பரேஷன் 'சூரிய ஒளிக்கதிர்'

'ஒப்பரேஷன் லிபரேஷன்' (Operation Liberatoin) அதாவது வடமராட்சி ஒப்பரேஷன் என்றழைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையே வடக்கே முதல் முதலாக முன்னெடுக்கப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையாகும்.

1987ம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இடம்பெற்ற இந்த இராணுவ நடவடிக்கையை அன்று பதவியிலிருந்த ஜே.ஆர்.அரசாங்கம் முழுமூச்சுடன் முன்னெடுத்திருந்தது.

# உள்ளக் குமுறலை மட்டும் வெளியிட முடிந்த தமிழகம்!

படையினர் தமது முழுப்பலத்தையும் பாவித்து இந்த வடமராட்சி ஒப்பரேஷன் நடவடிக்கையில் குதித்திருந்தனர்.

அப்போது வடமராட்சிப் பகுதியை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதே படையினரின் நோக்கமாக இருந்தது. வடமராட்சியை எல்.ரி.ரி.ஈ.யினரின் சிரசாகவே படையினர் கருதியிருந்தனர்.

எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே.பிரபாகரன், அவருடன் அன்று உடனிருந்த எல்.ரி.ரி.ஈயின் பிரதித்தலைவர் மாத்தையா என்றழைக்கப்பட்ட மகேந்திரராசா, அன்றைய யாழ்ப்பாண மாவட்ட எல்.ரி.ரி.ஈ தளபதியான கிட்டு ஆகியோரின் பிறப்பிடமும், மற்றும் எல்.ரி.ரி.ஈயின் முன்னாள் உறுப்பினர்கள் பலரது பிறப்பிடமும் வடமராட்சிப் பிரதேசமாகவே இருந்ததால் இப்பிரதேசத்தை முழு அளவில் தமது கைக்குள் கொண்டுவருவதிலேயே படையினர் ஆர்வங்காட்டியிருந்தனர்.

வடமராட்சி ஒப்பரேஷன் நடவடிக்கையை ஆயுதப்படையினர் தருணம் பார்த்தே ஆரம்பித்திருந்தனர்.

ஏனெனில் வடமராட்சி ஒப்பரேஷன் இடம்பெறுவதற்கு முன்னர் வடக்கே பல்வேறு போராட்ட இயக்கங்களும் இயங்கிவந்தன.

இந்த இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் ஆயுதப்படையினருக்கு நெருக்குதல்களைக் கொடுத்துவந்தன.

ஆயுதப்படையினர் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் குடியிருந்தசமயம் அதனைச் சூழவரநின்று பல்வேறு தமிழ்ப்போராட்டக் குழுக்களும் படையினரை நோக்கி இடையறாது தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன.

வடக்கே இயங்கிய ஆயுதப் போராட்ட இயக்கங்களில் சிறீ சபாரத்தினம் தலைமையிலான டெலோ, பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எஃப், உமாமகேஸ்வரன் தலைமையிலான புளொட் மற்றும் ஈரோஸ் என்பன முக்கியமானவையாகும்.

காலப்போக்கில் இந்த இயக்கங்களுக்கிடையே தோன்றிய முரண்பாடுகள் அவற்றின் வீழ்ச்சிக்கும் வழியமைத்தன.

டெலோ இயக்கத்தை முற்றுமுழுதாகக் களை எடுப்பதில் எல்.ரி.ரி.ஈ. முனைப்பாக இருந்தது. இதன் காரணமாக 1986ம் ஆண்டுப் பகுதியில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற எல்.ரி.ரி.ஈ, டெலோ மோதல்களில் இந்த இரு இயக்கங்களையும் சேர்ந்த பெருமளவு இளைஞர்கள் மிகவும் வெறித்தனமான மோதல்களில் குதித்து பாரிய உயிரிழப்புகளுக்கு வழிவகுத்திருந்தனர்.

இறுதியாக வடக்கே எல்.ரி.ரி.ஈயினரின் கரங்கள் ஓங்கலாயின. இதனையடுத்து வடபகுதியில் செயல்பட்டுவந்த ஏனைய தமிழ்ப்போராட்ட இயக்கங்களையும் எல்.ரி.ரி.ஈயினர் வடக்கே இயங்குவதை தடைசெய்தனர்.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ தனியொரு இயக்கமாக வடக்கே காலூன்ற ஆரம்பித்தது. இருந்தபோதிலும் இந்த இயக்கத்திலுள்ளும் காலப்போக்கில் குத்து வெட்டுக்கள் தோன்றின.

இவ்வியக்கத்தின் பிரதான உறுப்பினரான கிட்டு மீது இடம்பெற்ற தாக்குதலில் ஒரு காலை இழந்து அவர் ஊனமுற்றார்.

இதனையடுத்து அவ்வியக்கத்தினுள் குத்து வெட்டுக்கள் மிகவும் மலிவடைந்த நிலையிலேயே ஆயுதப்படையினர் 'வடமராட்சி ஒப்பரேஷன்' நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

இதன்பின்னர் இந்தியத் தலையீடு தொடர்ந்ததும் இந்தியாவுக்கெதிரான மோதல், அதனையடுத்து மீண்டும் இலங்கைப் படையினருடனான மோதல் என்ற நிலையில் வடக்கு, கிழக்கின் கடந்த 12 வருடகால வரலாறு இரத்தக்கறைபடிந்ததாக இருக்கின்ற நிலையிலேயே தற்போது 'சூரியக்கதிர்' ஒப்பரேஷன் வடபகுதியை படு மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

எல்.ரி.ரி.ஈயினரது நிலைப்பாடு எத்தகைய கோணத்தில் தற்போது இருக்கின்றதென்பது பற்றி எதுவும் தெரியாதிருக்கின்றது. ஆனால் படையினரின் நகர்வுகளை தடுத்துநிறுத்த மிகவும் ஆக்ரோஷமாக அவர்கள் போரிடுவதை அவதானிக்க முடிகின்றது.

ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் (Operation Leapforward) இராணுவ நடவடிக்கையை ஆயுதப்படையினர் ஓரிரு மாதங்களுக்கு முன்னர் மேற்கொண்டபோது, எல்.ரி.ரி.ஈயினர் அதற்குப் பதிலடி கொடுத்திருந்தனர்.

'ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சல்' என்ற பெயரில் எல்.ரி.ரி.ஈயினரின் பதிலடி நடவடிக்கை இடம்பெற்றிருந்தது.

இதில் படையினர் தரப்பில் கணிசமானளவு சேதம் ஏற்பட்டதுடன், எல்.ரி.ரி.ஈயினரின் யுத்ததந்திரமும் புலனாகியிருந்தது.

இதனையடுத்து ஒப்பரேஷன் ஷேக் ஹான்ட் (Operation Shake Hand), ஒப்பரேஷன் தண்டஸ்டிரைக் (Operation Thunder Strike) அதாவது ஒப்பரேஷன் இடிமின்னல் தாக்குதல் என்ற மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை ஆயுதப்படையினர் நடத்தியிருந்தனர்.

இவற்றைத் தொடர்ந்தே வடக்கே இதுவரை காலமும் இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்டிராத நீண்டதொரு இராணுவ நடவடிக்கையாக ஒப்பரேஷன் 'சூரியக் கதிர்' விளங்கியிருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈயினரை பலவீனப்படுத்தி அவர்களை அரசியல் பேச்சுவார்த்தைக்கு உடன்படச் செய்யும் விதத்திலும், மற்றும் எல்.ரி.ரி.ஈயினரின் பிடியிலிருந்து யாழ் குடாநாட்டு மக்களைக் காப்பாற்றும் வகையிலுமே இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் இந்த இரு நோக்கங்களையும் அடைவதில் எவ்வளவு தூரம் பொது ஜன ஐக்கிய முன்னணியினர் வெற்றிகாண்பார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

படையினர் தினமும் அறிவிப்பதுபோல யாழ் குடாநாட்டில் முக்கிய இடங்களைக் கைப்பற்றலாம், மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களையும், தமது முப்படைப்பலத்தையும் பாவித்து எதிர்கொள்ளலாம்.

இருந்தபோதிலும் இன்றைய வடக்கு-கிழக்குப் போராட்டம் சார்ந்துள்ள அரசியல் பிரச்னையில் ஆட்சியாளர்களால் தகுந்த வெற்றியைப் பெறமுடியுமா? என்பது சந்தேகமாகவே இருக்கின்றது.

வடக்கே எல்.ரி.ரி.ஈயினரிடமிருந்து மக்களைக் காப்பாற்றவே போரில் குதித்திருப்பதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் வடபகுதி மக்களின் நிலை என்றுமில்லாதவாறு மோசமடைந்திருக்கக் காணப்படுகின்றது.

அவர்களைக் காப்பாற்ற மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவிக்கப்படும் யுத்தம், தற்போது அவர்களை என்றுமில்லாதவாறு நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்தவாரம் தமிழகத்தில் கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும் வடக்கே இடம்பெறும் யுத்த நடவடிக்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டங்களை அவதானிக்கும் போது 1983ம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் வெடித்ததையடுத்து தமிழ்நாட்டில் தோன்றிய பெருமளவிலான அனுதாப அலையே ஞாபகத்துக்கு வருகின்றது.

அன்று தமிழகம் மட்டுமல்ல இந்திய மத்திய அரசு கூட இலங்கைத் தமிழர்களுக்காக பரிந்து பேசியதுடன் அபயக்கரம் நீட்டி அவர்களை அரவணைத்தும் இருந்தது.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாட்டவர்களால் தமது உள்ளக் குமுறல்களை மட்டுமே வெளியிட முடியுமே தவிர, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேறெதனையும் செய்யமுடியாத தன்மையே காணப்படுகின்றது.

இதற்கு இந்திய மத்திய அரசு இலங்கையின் வடக்கு-கிழக்குத் தொடர்பாகக் கொண்டுள்ள கடும்போக்கான நிலைப்பாடே முக்கிய காரணமாகும்.

எது எப்படியிருந்தபோதிலும் வடக்கே தொடரும் யுத்தம் உடனடியாக தடுத்து நிறுத்தப்படவேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது.

இல்லையேல் யுத்தத்தில் உயிரிழப்புகள் பெருகும் அதேசமயம், மறுபுறத்தே பெருந்தொகையான அப்பாவி மக்கள் பஞ்சம், பட்டினியால் மரணிக்கும் அபாயகரமான சூழ்நிலைகளே தோன்றும்.

அரசாங்கம் இன்றைய யுத்தத்தைநிறுத்தி அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு களம் அமைக்கவேண்டியது அவசியமானதாக இருக்கின்றது.

மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈயினரும் போரைத்தவிர்த்து, பேச்சுக்களுக்குத் தம்மை தயார்படுத்த வேண்டும்.

இதன்மூலமே வடக்கே அழிவுகள் தொடருவதை தடுத்து நிறுத்த முடியும். அத்துடன் எல்.ரி.ரி.ஈயினரும் தனது தரப்பில் இழப்புக்களை கட்டுப்படுத்தி நிதானமாக அரசியல் பேச்சுக்கள் குறித்தும் சிந்திக்கமுடியும்.



நிலப்பிரதேசங்களைக் கைப்பற்றலாம்; ஆனால் அங்கு படையினரால் நிலைத்துநிற்க முடியாது என்று எல்.ரி.ரி.ஈயினர் அடிக்கடி கூறுவதுண்டு.

படையினரை அவர்கள் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து அகற்றுவதற்கு, அல்லது விலகச் செய்வதற்கு கெரில்லா தந்திரங்கள் மட்டுமல்ல, அரசியல் இராஜதந்திரங்களும் தேவைப்படும். அத்துடன் அந்த இராஜதந்திரங்கள் ஓர் நிரந்தரத் தீர்வுக்கும் வழிவகுக்கு மென்பதனையும் எல்.ரி.ரி.ஈயினர் இத்தருணத்தில் உணரவேண்டியவர்களாகின்றனர்.



படிப்பகம்

# கார்லோஸ் மனித வெடிகுண்டு



எழுதுவது — ரசிகன்

**நெ**தர்லாந்தில் ஃபிரான்ஸ் தூதரையும் ஃபிரான்ஸ் எண்ணை நிறுவனப் பிரதிநிதிகள் பத்துப் பேரையும் கார்லோஸின் அதிரடிக் குழுவினர் பிடித்து வைத்திருந்தனர்.

நெதர்லாந்தின் ஃபிரான்ஸ் தூதரகத்தின் நாலாவது மாடியில் பணய நாடகம் அரங்கேறிக்கொண்டிருந்தது.

அதிரடிக் குழுவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ஃபிரான்ஸ் அரசு பணயக்கைதிகளை மீட்கவேண்டும். தனது நாட்டில் இரத்த ஆறு ஓடக் கூடாது என்று நெதர்லாந்து அரசு சொல்லிக் கொண்டிருந்தது.

ஃபிரான்ஸ அரசு பிடிவாதம் காட்டியது. ஃபிரான்ஸ் அரசின் பிடிவாதம் கார்லோஸிற்க்கு கோபத்தை ஏற்படுத்தியது. ஃபிரான்சுக்கு பாடம் புகட்டினால் தான் நிபந்தைனகளுக்கு பணியும் என்று நினைத்தான்.

□□

**மா**லை ஐந்து மணி, பாரிஸ்நகரில் மாடிக்கட்டிடத்தோடு இருந்த கடைத் தொகுதி. ஒரே கூட்டம்.

மேலே மாடியில் சிற்றுண்டிச் சாலையில் யார் கண்டால் நமக்கென்ன என்று தொட்டுக்கொண்டும், தோள்களில் சாய்ந்து கொண்டும் ஜோடி ஜோடியாக காதல் பண்ணிக்கொண்டு, சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டுமிருந்தவர்களுக்கு இன்னும் சில நிமிடங்களில் நடக்கப் போகும் விபரீதம் தெரியாது.

லிஃப்டில் தாவி, சிற்றுண்டிச் சாலைப் பக்கம் சென்ற கார்லோஸ் கூட்டத்தைக் கவனித்தான். முத்தமிட்டுக் கொண்டிருந்த ஜோடிகளைப் பார்த்து மனசுக்குள் சொல்லிக்கொண்டான், "மன்னியுங்கள். இதுதான் உங்களது இறுதி முத்தமாக இருக்கப்போகிறது."

அவ்விடத்தை விட்டு நகர்ந்து, மாடிப் படிக்கட்டுக்கு வந்தான். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு:

கைக்குண்டை வெளியே எடுத்தான். பாதுகாப்பு கிளிப்பைக் கழற்றிவிட்டால் நான்கு நொடிகளில் நிச்சயம் வெடிக்கும்.

அதற்கிடையே மாடிப்படிகள் தாண்டி கார்லோஸ் தெருவிற்கு போய்விட வேண்டும். கரணம் தப்பினால் மரணம்தான். பார்க்கலாம்.

கிளிப்பைக் கழற்றி, கைக்குண்டை மாடிப்படிகளில் உருட்டிவிட்டபடியே பாய்ந்து ஓடி, கடைத்தொகுதி தாண்டி கார்லோஸ் தெருவில் கால்வைத்தபோது,

உள்ளே பெரும் சத்தத்தோடு கைக் குண்டு வெடித்தது. கார்லோஸ் தப்பி விட்டான். ஒரு சிராய்ப்பும் இல்லை.

கட்டிடத் தொகுதிக்குள் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்தது. தசைத் துண்டுகள் எங்கும் சிதறிக் கிடந்தன. ஒரு சிறுவன் கை துண்டிக்கப்பட்டு துடித்துக்கொண்டு வெளியே வந்து விழுந்தான்.

பாரிஸ் நகரமே ஸ்தம்பித்துப் போனது.

கார்லோஸ் ஒரு தொலைபேசிக் கூண்டுக்குள் நுழைந்து சில பத்திரிகை நிறுவனங்களோடு தொடர்பு கொண்டான்.

"சிற்றுண்டிச் சாலையில் குண்டு வெடித்தது தெரியுமா? தெரிந்திருக்கும். ஏன் வெடித்தது தெரியுமா? தெரிந்திருக்காது. தெரியப்படுத்தட்டுமா?"

"யார் நீங்கள்?"

"என் விபரம் தேவையா? என்ன நடந்தது என்ற விபரம் தேவையா?"

"சொல்லுங்கள். தெரிந்ததைச் சொல்லுங்கள்."

"தெரிந்தது என்ன தெரிந்தது? செய்ததே நாம்தானே! குறித்துக் கொள்ளுங்கள், நெதர்லாந்தில் ஃபிரான்ஸ் நாட்டு தூதரை விடுவிக்க நாம் சில நல்ல நிபந்தனைகளை விதித்திருக்கிறோம். ஃபிரான்ஸ் அரசு நிபந்தனைகளுக்கு கட்டுப்படாவிட்டால் இப்படித்தான் ஃபிரான்ஸில் குபு குபுவென்று இரத்தம் பாயும். போதுமா."

"ஹலோ.. ஹலோ..... நீங்கள் யார்?"

"அதெல்லாம் இருக்கட்டும். நான் சொன்ன செய்தி கலப்படமில்லாத மெய். கொட்டை எழுத்தில் போடுங்கள். நன்றி."

பத்திரிகைகளில் செய்திவர ஃபிரான்ஸ் அரசு மறுப்பு விட்டது. நெதர்லாந்தில் ஃபிரான்ஸ் தூதர் பணயம் வைக்கப் பட்டதற்கும், பாரிஸ் குண்டு வெடிப்புக்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்று மறுப்பில் சொல்லப்பட்டது.

ஞாயிற்றுக் கிழமை இரவோடு இரவாக கார்லோஸ் ஒரு காரியம் செய்தான்.

கைக்குண்டுகள் வைக்கும் வெற்றுப் பெட்டிகளை பாரிஸ் நகரின் சில இடங்களில் குப்பைத் தொட்டிகளுக்கு அருகே போட்டு விட்டான் கார்லோஸ்.

வெற்றுப் பெட்டிகள் பொலிசாரின் கண்களில் பட்டுவிட்டன. இரகசியமாக குப்பைத்தொட்டியில் பெட்டிகளை எறிந்து விட்டுப் போய் விட்டார்கள். கைக்குண்டுகளை எங்கு போடப் போகிறார்களோ என்று பொலிசாருக்கு குழப்பம் மேல் குழப்பம்.

கார்லோஸிடம் இன்னும் ஒரே ஒரு கைக்குண்டு மாத்திரமே இருந்தது. வெற்றுப் பெட்டிகளை வைத்து திகிலை பரப்பிவிட்ட கார்லோஸ், ஒரு அரசியல் பிரமுகருக்கு போன் செய்தான்.

"வணக்கம்! உங்கள் அரசாங்கம் நெருப்போடு விளையாடுகிறது, நல்லது, நாமும் விளையாடிப் பார்க்கப்போகிறோம். இன்று மாலை ஒரு பிரபல சினிமாத் தியேட்டரில் குண்டு வெடிக்கும்."

பாரிஸ் நகர திரையரங்குகள் எங்கும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

குண்டு வெடிக்கும் என்று சொன்னது வெற்று மிரட்டல்.

**நெ**தர்லாந்து அரசின் நெருக்கடியால் ஃபிரான்ஸ் அரசு சில நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டது. யப்பான் செம்படைத் தலைவர் யமடாவை விடுதலை செய்யலாம். ஆனால், கடத்தல்காரர்கள் கேட்பது போல பணம் தரமுடியாது என்று சொல்லிவிட்டது ஃபிரான்ஸ் அரசு.

கடத்தல் காரர்கள் கேட்கும் பணத்தை வழங்க முன்வந்தது நெதர்லாந்து அரசு.

முடிவுகள் யாவும் ஃபிரான்ஸ் தூதரகத்தில் உள்ள கடத்தல்காரர்களான அதிரடிக் குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

"ஓகே, ஆனால் எமது தற்பாதுகாப்புக்காக மேலும் ஒரு நிபந்தனை. நாம் தப்பிச் செல்லும் விமானத்தில் பணயக் கைதிகள் சிலரை எம்மோடு அழைத்துப் போக வேண்டும். நாம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்ததும் அவர்களை விட்டுவிடுவோம். அழைத்துச் செல்லப்படுபவர்களில் தூதர் இடம்பெற மாட்டார்."

ஃபிரான்ஸ் அதிகாரிகள் அதற்கு உடன் பட மறுத்தனர். இறுதியில் நெதர்லாந்து அரசு கடத்தல்காரர்களுடன் பேசியது.

"யமடாவை உங்களிடம் ஒப்படைத்து, கேட்ட பணத்தையும் தந்து, பத்திரமாக உங்களை விமானத்தில் ஏற்றி அனுப்புவது எமது பொறுப்பு. பணயக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்துவிடுங்கள்."

உடன்பாடு ஏற்பட்டது. போயிங் விமானத்தில், யப்பான் செம்படைத் தலைவர் யமடா ஏற்றப்பட்டார். பணயக் கைதிகள் நெதர்லாந்து அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

3 இலட்சம் அமெரிக்க டொலர்களை வாங்கிக் கொண்டு அதிரடிக் குழு போயிங் விமானத்தில் ஏறியது.

விமானத்திற்குள் யமடா டொலர் நோட்டுக்களை எண்ணிப்பார்த்தார். ஒரு வேளை கள்ள நோட்டுக்களாக இருக்குமோ? ஆராய்ந்து பார்த்தார்.

அத்தனையும் ஒரிஜினல் நோட்டுக்கள். போயிங் விமானம் நேராக தெற்கு யேமனுக்கு செல்ல வேண்டும் என்று யமடா கூறினார். அங்குதான் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (PFLP) தளபதி வாடி ஹாட்டாட் தங்கியிருந்தார்.

விமானம் தரையிறங்க யேமன் மறுத்துவிட்டது. எனவே சிரியா நாட்டில் தரையிறங்கியது.

விமானம் இறங்கியதும் சிரியாவின் பாதுகாப்பு அதிகாரிகள் சூழ்ந்து கொண்டனர்.

முதலில் பணப் பெட்டி பறிமுதல் செய்யப்பட்டது. யமடாவையும், அதிரடிக் குழுவையும் மட்டுமே சிரியா விடுதலை செய்தது.

பணப்பெட்டி சிரியாவில் உள்ள ஃபிரான்ஸ் தூதரகத்திடம் ஒப்படைக்கப் பட்டது.

அதனை ஃபிரான்ஸ் அரசு நெதர்லாந்திடம் ஒப்படைத்தது. எனினும், ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை ஃபிரான்ஸ் எடுத்துக் கொண்டது. 'கடத்தல் நடவடிக்கையால் தமக்கு ஏற்பட்ட செலவுக்கான பணம்' என்று அதனை எடுத்துக் கொண்டது ஃபிரான்ஸ் அரசு.

ஜப்பான் செம்படைத் தலைவரை விடுவிக்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்தி முடித்ததால் கார்லோஸின் மதிப்பும் உயர்ந்தது.

**அ**டுத்த நடவடிக்கைக்காக தென் யேமனுக்கு வருமாறு கட்டளையிட்டார் தளபதி வாடி ஹாட்டாட்.

கார்லோஸ் புறப்பட்டபோது, பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலும் ஒரு திருப்பம் ஏற்பட்டிருந்தது.

அந்தத் திருப்பத்தை குழப்பும் பொறுப்பும் கார்லோஸின் தலையில் விழக் காத்திருந்தது.

(தொடர்ந்து வரும்)

# ஹலோ டாக்டர்

## மாத்திரைகள் பலன் தருமா?

"**வ**ணக்கம் டாக்டர். இன்று ஜனரஞ்சகமான சில கேள்விகள். அதாவது பலரால் கேட்கப்பட்டு என்னால் தொகுக்கப்பட்டு, தங்களிடம் நீட்டப்படுபவை. என்ன, நீங்கள் ரெடியா?"

"கேளுங்கள் மிரட்டாதீர்கள்."



"சில பிள்ளைகள் நன்றாக மூக்கு முட்டச் சாப்பிடுகிறார்கள். குண்டாகப் போகிறார்கள் என்று நினைத்தால், ம்ஹீம் மெலிந்தே இருக்கிறார்களே, ஏன் டாக்டர்."

"தைராய்டு சுரப்பி மிகவும் அதிகமாக வேலை செய்வதால் அப்படி ஏற்படுகிறது. எவ்வளவு உணவு உட்கொண்டாலும், அது அதிவேகமாக சக்தியாக எரிக்கப்பட்டு விடுகிறது. இவ்வாறு ஏற்படும் பிள்ளைகளுக்கு மார்பு படபடப்பு, கைகால் உதறல், அமைதியின்மை ஆகியவை ஏற்படும். இதனை மருந்தினால் சரி செய்துவிடலாம். சில பேருக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படும். இதனை சிகிச்சை செய்யாமல் விட்டால் இதயம் பாதிக்கப்படும்."

"தைராய்டு ஒப்பரேசன் செய்து கொண்டால் குரல் மாற்றம் ஏற்படும் என்கிறார்களே உண்மையா?"

"தைராய்டு சுரப்பியின் பின்னால் அதை ஒட்டி குரல் பெட்டிக்கு **(Voice Box)** செல்லும் நரம்பு உள்ளது. அதனை அறுவைச் சிகிச்சையின்போது பாதுகாக்காவிட்டால் குரல் மாற்றம் ஏற்பட்டுவிடும். இந்தத் துறையில் உள்ள நிபுணரிடம் அறுவைச்சிகிச்சை செய்து கொண்டால் பயப்படத் தேவையில்லை."

"மற்றொரு கேள்வி. கொசு கடிப்பதனால் அரிப்பு ஏற்படுகிறதே. அதை தடுக்க வழி உண்டா? இதனால் எப்படியான மாற்றங்கள் காணப்படும்?"

"கொசு கடிப்பதனால் தோலில் பல மாற்றங்கள் ஏற்படலாம். மழை பெய்ய ஆரம்பித்து ஒருவார காலத்திற்குப்பின் கொசுக்கடி அலர்ஜி அதிகமாக ஏற்படத் தொடங்கிவிடும். பெரும்பாலும் குழந்தைகளுக்கு அதிகமாக வரும். தோலில் கடித்த இடத்தில் சிறிது சிவந்து அரிப்பு ஏற்படலாம். சிலருக்கு பருவைப்போல தடிப்பு ஏற்படலாம்.

சிலருக்கு நீர் பொக்களங்கள் ஏற்படும். அவை அம்மை நோய் போன்று காணப்படும். மற்றும் சிலருக்கு சீழ் கொப்பளங்களாக மாறும்.

பெரும்பாலும் முன்கையில் முன்புறம், காலின் முன்புறம் போன்றவற்றில் அதிகமாக வரும். இந்த அலர்ஜி மாதக்கணக்கிலும், சிலருக்கு வருடக்கணக்கிலும் தொடர்ந்து இருக்கும். தோல் தடித்து இறுகி, மரப்பட்டை போன்று இருக்கும்."

"நன்றி டாக்டர். இது எய்ட்ஸ் பற்றிய கேள்வி. எய்ட்ஸ் நோய்க்கு மருந்தில்லை என்று கூறுகிறார்கள். அப்படியானால் எய்ட்ஸ் நோய் என்று அறியப்படுகிறவர்களை மருத்துவர்கள் என்ன செய்கிறார்கள்?"

"எச்.ஐ.வி. என்று சொல்லப்படும் வைரசால் எய்ட்ஸ் உண்டாகிறது. அதனை முற்றிலும் அழிப்பதற்கு மருந்தில்லை. மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகெங்கும் மருத்துவ நிபுணர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் நோய் எதிர்ப்புத் திறனை முற்றிலும் இழந்துவிடுகிறது. அதனால் பல்வேறு நோய்கள் அவர்களைத் தாக்குவது வசதியாகிவிடுகிறது. அவற்றை தடுக்கவே மருத்துவர்கள் சிகிச்சை செய்கிறார்கள். அதேவேளை, எய்ட்ஸ் கிருமியின் வளர்ச்சியை ஓரளவு தடைசெய்யும் **Zidovudine** என்ற மருந்தையும் தற்போது பயன்படுத்துகிறார்கள்."

"வீரிய மாத்திரைகள் அப்படி இப்படி என்றெல்லாம் விளம்பரங்கள் வருகிறதே நம்பலாமா டாக்டர்?"

"நம்பவே நம்பாதீர்கள். 'செஸ்', 'செக்ஸ்' இரண்டுக்குமே தேவையான ஒரே மாத்திரை தன்நம்பிக்கைதான். சிலருக்கு ஏதாவது கோளாறு இருக்கலாம். அதற்கு தகுந்த மருத்துவரை நாடி ஆலோசனை பெற்றால் போதுமானது. மீன் குஞ்சுக்கு நீந்தச் சொல்லியா கொடுக்க வேண்டும். தேவையில்லையல்லவா?"

"ஓ.கே. நன்றி டாக்டர்."

# நறுக்-நறுக் பட நாயகன்



**வெ**ரோனிகா பிரேஸில், டிஃப்பானி லார்ட்ஸ் என்னும் மூன்று நடிகைகளுடனும் போஸ்கொடுப்பவர் மிஸ்டர் பாமிட். சில ஆண்டுகளுக்கு முன் முரசில் ஒரு செய்தி வந்தது நினைவிருக்கலாம். அதாகப்பட்டது, கணவன்மீது சந்தேகம் கொண்ட மனைவி திடீரென்று ஒரு நாள் அவரது ஆண் உறுப்பை வெட்டியெறிந்துவிட்டாள். என்ன நினைவுக்கு வருகிறதல்லவா. அந்த உண்மைச் சம்பவம் திரைப்படமாகி விட்டது. பாதிக்கப்பட்ட பாமிட்தான் கதாநாயகன். பாமிட்டுக்கு மீண்டும் உறுப்பை பொருத்தி மருத்துவ உலக சாதனையாக அறுவைச் சிகிச்சை நடந்ததும் குறிப்பிடத்தக்கது.

# வானில் இருந்து மரணம்

## மறக்கமுடியாத தடயங்கள்

**அ**மெரிக்க போர்விமானங்கள் ஹீரோசிமாவில் வீசிய அணு குண்டின் தாக்கம் இன்றுவரை நீடிக் கிறது.

1945 ஆகஸ்ட் 6ம் திகதி காலை எட்டு மணியளவில் மூன்று அமெரிக்க விமானங்கள் ஹீரோசிமா வானில் மிதந்து வந்தன. விமானங்கள் வருவதைக் கண்ட மக்கள் பீதிகொண்டு ஓடத்தொடங்கினார்கள்.

முன்னே வந்த விமானத்தின் அடிப் பாகத்திலிருந்து கரிய முட்டை போன்ற ஒன்று தரையை நோக்கி விழ ஆரம்பித்தது. நடு வானத்தில் சூரியனைவிட பல மடங்கு பிரகாசமான தீக்கோளமாக மாறியது. இந்தத் தீக்கோளம் விசுவரூபம் எடுத்து தரையைத் தொட்டு சுமார் 1 கிலோமீற்றர் வட்டத்தில் இருந்த உயிரினங்களை அழித்தது.

அதன் வெப்பத்தால் ஓடுகள் உருகின. கருங்கல் மணல் போலப் பொடியானது. ராட்சத காளான் போன்ற புகை மண்டலம் வானை நோக்கிக் கிளம்பியது. வெப்பத்தால் காற்று மண்டலம் திடீரென்று விரிவடைய கண்ணுக்குத் தெரியாத மதில் ஒன்று அசுர வேகத்தில் தாக்குவதுபோன்ற அதிர்வலைகள் உண்டாகின. இந்த அதிர்வு கட்டடங்கள், பாலங்கள், கம்பங்கள் என்பவற்றை தரைமட்டமாக்கியது. 2கிலோமீட்டர் தூரத்தில் இருந்த கட்டடங்கள் தரைமட்டமாகின. உதவிக்கு ஓடிவந்தவர்களை அணுகுண்டு வெடிப்பால் ஏற்பட்ட ரேடியோ கதிர் வீச்சு தாக்கியது.



கதிர்வீச்சால் முடியிழந்த சிறுமி. 1955இல் மரணம்

ஒரு கணக்கெடுப்பின் தகவலின் படி, அணுகுண்டு விழுந்தபோது ஹீரோசிமாவில் இருந்த 40 ஆயிரம் இராணுவத்தினர், 8 ஆயிரத்தி 400 பள்ளிமாணவர்கள், 31/2 லட்சம் நகர மக்கள், பலநூறு கொரியர்கள், சீனர்கள், 10 அமெரிக்க யுத்தக் கைதிகள் குண்டு வெடிப்பில் உடனடியாக செத்துப் போனார்கள்.

அதுதவிர-தாக்கத்திற்கு உள்ளாகி பல வருடங்கள் கழித்து மாண்டவர்கள் எண்ணிக்கை சுமார் ஒன்றரை இலட்சம்.

ரேடியோக் கதிர் பாதிப்பால் இன்று வரை நடைப்பிணமாக வாழ்பவர்களின் எண்ணிக்கை சுமார் மூன்று இலட்சத்து முப்பது ஆயிரம்.

எப்படி மறக்கமுடியும் மனித குலத்தால்?




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி





## ஒரு பறவை துடித்தது

தமது வித்தையைக் காட்ட அப்பாவி வாத்துக்களுக்கு அம்பு தொடுத்துப் பார்ப்பது வேட்டைக்காரர்களுக்கு விளையாட்டு. அமெரிக்காவில் உள்ள நியூ ஓர்லீன்ஸ் மாநிலத்தில் குறிதவறாமல் அம்புவிடும் பந்தயம் வைத்தார்கள் சூதாடிகள். ஒரு வாத்து மீது பட்ட அம்பு அதன் இடது கண் வழியாகப் புகுந்து மறுபக்கத்தால் ஒரு முனை வெளியே வந்தது. மறு கண் தப்பியது புண்ணியம். கிடந்து துடித்த வாத்து 'பறவைகள் மறுவாழ்வு நிலைய'த் தலைவி டு பொன்னால் காப்பாற்றப்பட்டது. சத்திர சிகிச்சை நடத்தி அம்பை அகற்றினார்கள். ஒரு பறவைகூட அநியாயமாக சாவதை விரும்பாத டு பொன் நம்நாட்டுக்கும் ஒரு தடவை வந்தால் நல்லதல்லவா!



## ஹலோ சௌக்கியமா?

எதிரில் வந்தால் பூனை பாயும். ஒரே அமுக்காக அமுக்கிவிடும். அது எலிப் பிள்ளைக்கும் தெரியும். எப்படியோ பூனையின் உச்சியில் தாவி அமர்ந்துகொண்டுவிட்டார் எலிப்பிள்ளை. பூனையின் தலையில் இருந்து எலி என்ன கேட்கும்? "ஹலோ சௌக்கியமா எப்படியிருக்குது வெயிட்டு?" யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே என்று சொல்வதும் இதைத்தானோ?! அவுஸ்திரேலிய மிருகக் காட்சிச்சாலையில் 'கிளிக்' செய்யப்பட்ட படம்.



## இடம் பெயர்ந்தோர்

யாழ்-குடாநாட்டிலிருந்து கிளாலி ஏரியைக் கடந்து மக்கள் படகுகளில் செல்வது நம்நாட்டு சோகக் காட்சி. படத்தில் ஜேர்மனியிலுள்ள அல்ஸ்ரர் ஏரிவழியாக இந்த அன்னங்களும் இடம்பெயர்ந்து கொண்டு செல்லப்படுகின்றன. இடம் பெயரும் எண்ணம் அன்னங்களுக்கு இல்லையானாலும் நிர்ப்பந்தத்தை மீறவா முடியும்? வியாபாரத்திற்காக அன்னங்களை படகில் போட்டு கொண்டு செல்லும் காட்சிதான் இது. மனிதனின் சுயநலம் எப்படியெல்லாம், எதையெல்லாம் ஆட்டிப்படைக்கிறது பார்த்தீர்களா?

## ஒரு திருத்தம்

சென்ற வாரம் 20ம் பக்கத்தில் ஒரு தவறு அதிசயப் பூசணியின் எடை 80 கிலோ என்பதற்கு பதிலாக அச்சுப்பிழை காரணமாக 180 கிலோ என்று இடம்பெற்றுவிட்டது. தப்பு!

## எழுபதிலும் ஒரு குமரன்

40,50 வயதைத் தாண்டி விட்டாலே அசதி, சோர்வு என்று அங்கலாய்ப்பது உண்டு. ஆனால் 78 வயதில் ஒருவர் சிங்கம் போல் பாய்கிறார் மோட்டார் சைக்கிளில். பொதுவாக இந்த வயதில் பெரும்பாலானோர் நடமாடவே தடுமாறுவார்கள். ஆனால் இவரோ மோட்டார் சைக்கிளில் பறக்கிறார். மல்லாந்து படுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறார். கைகளை விட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வலம் வருகிறார். இந்தச் சாகச வீரரின் பெயர் ராமசாமி. தமிழ்நாடு கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கே.கே. கொலனியைச் சேர்ந்தவர். இவருக்கு கிங் ஜேம்ஸ் என்ற பட்டப் பெயரும் உண்டு. எழுபதிலும் துள்ள வரும்!



## அதிரடிப் பாய்ச்சல்



அவுஸ்திரேலியாவின் அகுஸ்ட்ரின் கேதி கிரீன் என்ற இந்தப் பெண் ஜாக்கி, உயரம் மற்றும் நீளம் தாண்டுவதில் உலக சாதனை படைத்துள்ளார்.

தன்னுடைய தூய வெள்ளை நிறத்தை உடைய 'மெகுமிர்' என்ற குதிரையில் சவாரி செய்தவாறே எவ்வளவு நீளமானாலும் எளிதாகத் தாண்டி விடுகிறார். தற்போது அவுஸ்திரேலியாவில் 1.6 மீற்றர் உயரம், 1.8 மீற்றர் நீளமுள்ள பெரிய ஜீப் கார் ஒன்றைத் தாண்டிக் காண்பித்து சாதனை புரிவதை இங்கே காணலாம்.

இந்த சாதனை இவர் 1996ம் ஆண்டிற்காக இப்போதே பயிற்சி எடுத்ததாகும். நிஜமான பாய்ச்சலில் மேலும் நெத்தியடியான பாய்ச்சல் காட்டுவாரோ?!



படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## ஆனந்தராஜ் அசத்தல்ராஜ்

'ரகசியப் போலீஸ்' சரத்குமாரின் சொந்தப்படம். கதையென்று பார்த்தால் வழக்கமான மசாலா. அரசியல் சதி. முதல்வரைத் தீர்த்துக் கட்டத் திட்டம். ஜெயலலிதாமீது அபிமானமுள்ள ஒரே ஒரு ஹீரோ சரத்குமார்தான். அதனால் முதல்வராகவும், நல்லவராகவும ராதிகாவை போட்டிருக்கிறார். சதியில் இருந்து அவரைக் காப்பாற்றுவதுதான் கிளைமாக்ஸ். சரத் நன்றாக சண்டை போடுகிறார். ஆவேசம் காட்டுகிறார். ஒரே சூடு. சூட்டைத் தணிக்க நக்மா வருகிறார். நக்மா வந்தாலே பாட்டு வரப்போகிறது என்று தவறாகி விடலாம். படு தாராளம் என்பதைத் தவிர வேறு வார்த்தையில்லை நக்மா பற்றி சொல்ல.

ஆனந்தராஜிக்கு இது நூறாவது படம். பலவித கெட்டப்புக்களில் வந்து கொட்ட மடித்து அசத்திவிடுகிறார். கவுண்டமணிக்கும் வில்லன் வேஷம். திட்டு வாங்க வழக்கம் போல செந்தில்.

வெளிநாடுகளில் பாடல் காட்சிகள் கண்களுக்கு விருந்து. ஒளிப்பதிவு-அசோக்குமார். இசை-லட்சுமிகாந்த்-பியாரிலால். இது துள்ளிசைச் சீசன் என்பதை மறக்கவில்லை. இயக்கம்-இளவரசன். அரசராகும் வாய்ப்புத் தெரிகிறது. விறுவிறுப்பு. பொழுது போக்கு.

## சோத்துக் கட்சி

தனது படங்களுக்கு வித்தியாச விளம்பரம் செய்து அசத்துபவர் பார்த்திபன். சமீபத்தில் தமிழக பத்திரிகை களில் பார்த்திபன் புதிய கட்சி ஆரம்பிக்கப்போகிறார் என்று விளம்பரம் வந்தது. பார்த்திபனுக்கு ஏன் இந்த வேலை? என்று பலரும் பேசிக்கொண்டனர். மூன்றாவது நாள் மீண்டும் ஒரு விளம்பரம் வந்தது. பார்த்திபனின் புதிய படத்தின் பெயர் சோத்துக் கட்சி. படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. பிறகுதான் எல்லோருக்கும் நிம்மதி. சோத்துக் கட்சி படம் பற்றி பார்த்திபன் இப்படிக் கூறுகிறார். இது அரசியல் கட்சியல்ல. அரிசி இயல் கட்சி. படத்தில் ரிக்ஷாக்காரனாக நடிக்கிறார். தற்போதைய தமிழ் சினிமாவுலக சீசன் ஒரு நாயகன் இரு நாயகி. சோத்துக் கட்சியில் பார்த்திபனுக்கும் இரண்டு ஜோடிகள்.

* தனது மகன் வெங்கட்பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'பூஞ்சோலை' படத்தை இயக்கி வரும் கங்கை அமரன், விரைவில் பிரபு நடிக்கும் படமொன்றை இயக்கவிருக்கிறார். ஏற்கனவே கங்கை அமரனின் இயக்கத்தில் 'கோழி கூ... படங்களில் பிரபு நடித்துள்ளார்.

* கமலின் மகளாக 'மகாநதி' ப... அந்தப் படத்தில் 'ஸ்ரீரங்க ரங்க.....' எ... தார். 'மகாநதி' க்கு பின்னர் வேறெந்த... பின்னணி பாடுவதில் கவனம் செ... ஷோபனா மலையாளப் படமொன்... பா்டியுள்ளார்.

* பாரதிராஜா இயக்கத்தில் வி... ரோஜா நடிக்கும் புதிய படத்தில் மேக்...

* 'எல்லாமே என் ராசாதான்... சிஷ்யன் பாண்டியன் இயக்க, டி.சிவா த... படத்தில் நடித்துவருகிறார் ராஜ்கிர... வெற்றிப்படங்களைத் தயாரித்த கோ... படமொன்றில் நடிக்கவிருக்கிறார்.

* மலையாளத்தில் பரதன் இயக்கத்... ஜோடியாக நடித்துவரும் 'தேவராகம்... இந்தி ஆகிய மொழிகளில் மொழிமாற்...

* தமிழில் கஸ்தூரிக்கு புதிய... யென்றாலும் மலையாளத்தில் இரண்... 'நசர்' என்ற படத்திலும், தெலுங்கில் மே... ஒரு படத்திலும் நடித்துவருகிறார்.

*'திருமூர்த்தி', 'காந்தி பிறந்த... நாயகியாக நடித்த ரவளியின் சகோ... என்ற படத்தில் கதாநாயகனாக ந... என்ற பெயரில் இருவர் (எஸ்.எஸ்.சந்திர... விஜய்) நடித்துக்கொண்டிருப்பதால்... பெயர் மாற்றப்படவுள்ளது.

* சல்மான் கானின் சகோதரர்... என்ற இந்திப்படத்தை தயாரிக்கவுள்ளர்... ஜோடியாக நடிக்கும் இப்படத்தில்... ராஜுவும் நடிக்கவுள்ளார்.

*ஆர்.வி.உதயகுமார் இயக்கி ந... பெரிய ராமசாமி' படத்தில் இ... நடிப்பதற்கு ராமராஜனை அணுகி... படத்தில் நடிக்க மறுத்துவிட்டார். த... ஜெயராம் நடிக்க இருக்கிறார்.

* 'கருத்தம்மா' மகேஷ்வரி தெலுங்... ஒரு கன்னடப் படத்திலும் நடித்து...



சுனில் செட்டி-பூஜா பட்ரா

## நட்சத்திர வாரிசுகள்

சன்னிதியோலை அடுத்து பாபிதியோலும் நடிப்பில் கொடிகட்டிப் பறக்கிறார். இருவரும் நடிகர் தர்மேந்திராவின் மகன்கள். 'பர்சாத்' படத்தில் அறிமுகமாகியுள்ள பாபிதியோலுக்கு ஜோடி டிவிங்கிள். அவர் டிம்பிள் கபாடியாவின் மகள். ஆனாலும் படத்தில் பாபிதியோலின் நடிப்புத் தான் பாராட்டப்பட்டுள்ளது.

## காதோடு சொல்லுகிறோம்

'ச'வில் ஆரம்பிக்கும் 'கவி'யில் பெயர் முடியும் நடிகை யார் என்று சொல்லுங்கள். அவரது போக்கு 'பிரேக்' இல்லாத கார்மாதிரி போய்க்கொண்டிருப்பதால் தாய்க்குலம் உஷாராகி விட்டதாம். படப்பிடிப்புக்கு கூடவே வருகிறாராம். 'ச' அப்படி. இப்படி நடிக்கும்போது மட்டும் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்வாராம் தாய்க்குலம்.

'பா' நடிகரின் புதிய படத்தில் சங்கீத நடிகையும் நடிக்க ஏற்பாடு நடக்கிறதாம். அதனால் வீட்டுக் கட்சியில் குழப்பமாம். குழப்பம் இல்லை. சங்கீத நடிகையும், தனது மனைவியும் சமரசமாகிவிட்டனர் என்ற செய்திகளை போடுமாறு சில நிருபர்களுக்கு அன்புக் கட்டளை போட்டுள்ளாராம் நடிகர். இயக்குநரும் அவர்தான்.

'மா' என்ற எழுத்தில் பெயர் முடியும் மூன்றெழுத்து நடிகைக்கு எக்கச்சக்க தொந்தரவாம். தமிழக பெரிய புள்ளிகள் சிலர் அன்பொழுக அழைப்பதால் வெறுத்துப் போயிருக்கிறாராம்.

'த்'வில் பெயர் ஆரம்பிக்கும் இரண்டு எழுத்து நடிகைக்கு சென்னை ரொம்பப் பிடித்துவிட்டதாம். இங்குதான் மதிப்பறிந்து கவனிக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாராம்.

## நிஜக்கதை

துணிகள் பற்றி துளியுண்டும் கவலைப்படாத ஜோடி மது சாப்ரே, மிலிந்த்சோமன். பல சர்ச்சைகளில் சிக்கி, நீதிமன்றம் வரை சென்று வந்தும் மாற்றம் இல்லை. இருவரும் காதலர்கள் என்பதால் அவர்களது கதையை வைத்து, அவர்களையே நடிக்கவைத்து படம் எடுக்கப் போகிறார்கள். கவர்ச்சிக்கு முதலிடம் இருக்கும் என்பது சொல்லாமலேயே தெரியும்.

## இரண்...

இந்தி... பிரசாந்த்... வாசல் பட... இந்தியி... என்று பேச... இரண்டு... தயாரிப்பா... சுனில்... இருவரும்... தாமும் கிற... கிசுக்கின்ற... பூஜாபட்... ஏற்படுமல்ல... "பெயர்தான்... போகிறார்...

## எதுவண...

'ரங்கீலா'... கவர்ச்சி கா... புயலையே... புயலில் பு... ஆடைகள்... கொண்டிருக்... தயாராகும் அ... ஆடைகளைக்... ஆரம்பித்துவிட்... நிற்கப்போகிற...

## கதை-வசனம் ரஜினி?

"நடிப்புத்தான் எனது தொழில்" என்று உறுதியாக சொல்லியிருந்தவர் ரஜினிகாந்த். 'முத்து' நன்றாகப் போய்க்கொண்டிருப்பதால் அடுத்த படத்துக்கான கதையைத் தேடிக்கொண்டிருக்கிறார். ரஜினியிடமே சொந்தமாக ஒரு கதை இருக்கிறதாம். அநேகமாக அடுத்த படத்திற்கு ரஜினியே கதை, திரைக்கதை, வசனம் எழுதலாம் என்று தகவல். படத்தை இயக்கினாலும் கூட ஆச்சரியமில்லை என்கிறார்கள். ஆனால் 'டென்ஷனை' விரும்பாத ரஜினி இயக்குநர் பொறுப்பை ஏற்பாரா என்பது சந்தேகம்தான்.



அர்ஜுன்-ஊர்வசி
படம்-ஆயுத பூஜை

## "எனக்காக ஒருவன்"

நடிகை மீனா தனது திருமணம் பற்றி என்ன சொல்கிறார்? சினிமா சஞ்சிகை ஒன்றுக்கு இப்படிச் சொல்கிறார்: "எனக்காக பிறந்திருக்கும் ஒருவர் ஏதோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருப்பார். அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பு எனது பெற்றோருடையது." இன்னொன்றை சொல்லியிருக்கிறார், "எனக்கு இன்னும் வாக்குப் போடும் வயதே வரவில்லை." பொய்யா பொருந்தச் சொல்.



## பிரபுவின் புதிய ஜோடி

ரஜினிகாந்த், சத்யராஜ், கார்த்திக், அரவிந்தசாமி, சரத்குமார் போன்ற முன்னணி நடிகர்களுடன் ஜோடி சேர்ந்துள்ள நக்மா, அடுத்ததாக பிரபுவுக்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

கமலின் 'சூரசம்ஹாரம்' படத்தின் பின்னர் சித்ரா லட்சுமணன் இயக்கும் இந்தப் புதிய படத்திலேயே முதல் முறையாக பிரபுவுடன் ஜோடி சேருகிறார் நக்மா.

## சரவணனின் சொந்தப் படம்

படுவேகமாக முன்னேறி வந்த சரவணனுக்கு இடையில் சிறு தொய்வு நிலை. இவரது மூன்று படங்கள் பாதியிலேயே நின்று விட்டன. அவற்றின் படப்பிடிப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன என தெரிய வருகிறது.

இருப்பினும் சரவணன் தனது மார்க்கெட்டை நிலை நிறுத்திக் கொள்ள 'விஸ்வநாத்' என்ற பெயரில் படம் ஒன்று தயாரிக்கிறார். இப்படத்தின் நாயகியாக முன்னணி நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

## மின் சீன்

து' 'சின்னவர்' போன்ற

த்தில் நடித்த ஷோபனா
பாடலையும் பாடியிருந்
படங்களிலும் நடிக்காமல்,
ந்தி வந்தார். சமீபத்தில்
ற்காக ஒரு பாடலைப்

யகாந்திற்கு ஜோடியாக
இல்லாமல் நடிக்கிறார்.

படத்திற்குப்பின் தனது
ரித்துவரும் 'மாணிக்கம்'
இதைத் தொடர்ந்து பல
த்தம்பி தயாரிக்கும் புதிய

ல் அரவிந்தசாமி-ஸ்ரீதேவி
படத்தை தமிழ், தெலுங்கு,
வெளியிட உள்ளார்கள்.

வாய்ப்புக்கள் இல்லை
படங்களிலும், இந்தியில்
ன்பாபுவுக்கு ஜோடியாக

ண்' ஆகிய படங்களில்
ர் விஜய் 'லவ் மாஸ்டர்'
க இருக்கிறார். விஜய்
கரன் மகன், 'தலைவாசல்'
வளியின் சகோதரரின்

னகல் கான் 'அவ்சார்'
ஞ்சய் கபூர், ஷில்பாஷெட்டி
தேவாவின் சகோதரர்

கும் 'சின்ன ராமசாமி
ாரு கதாநாயகனாக
ர். ராமராஜன் அந்தப்
பாது அந்த வேடத்தில்

இரண்டு படங்களிலும்,
கிறார்.

## கிடைத்தது வாய்ப்பு

மம்முட்டி, நெப்போலியன் இருவரும் இணைந்து நடிக்கும் மாஸ்டர் படத்தில் மம்முட்டிக்கு ஜோடி சங்கீதா. நெப்போலியனுக்கு ஜோடி ஜோதி மீனா. கவர்ச்சி நடிகை ஜோதி மீனாவுக்கு கதாநாயகி வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சங்கவிக்கு நேரமில்லாததால் ஜோதி மீனாவை ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.

## சரத்–பாரதிராஜா

சரத்குமார் படம் ஒன்றை பாரதிராஜா இயக்கப்போகிறார். 1996 இல் ஜூன் மாதமளவில் படப்பிடிப்புத் தொடங்குமாம். அதுவரை இரண்டு பேருமே பிஸி. தனது படங்கள், இயக்குநர்கள் விடயத்தில் நல்ல தெரிவுகளில் நாட்டம் காட்டுகிறார் சரத்குமார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

## கதை சொல்லமாட்டார்

ராஜ்கிரன் இன்னும் ஒரு மூன்று படங்களை முடித்துவிட்டு, பெரிய பட்ஜெட்டில் ஒரு படம் பண்ணப் போகிறார். படத்தின் பெயர் கூட ரெடி, 'கோல்டுமெடல்' என்று பெயர் வைத்திருக்கிறார். இராணுவவீரராக நடிக்கப்போகிறார். தமிழ், இந்தி, தெலுங்கு என்று மூன்று மொழிகளிலும் தயாராகும் படத்தின் கதையை மட்டும் நெஞ்சுக்குள் வைத்திருக்கிறார்.(மூச்).

## பாக்கி கூடாது

நடிகை வினிதா கேட்கும் சம்பளத்தை ஒரேயடியாக கொடுத்துவிட வேண்டும். பாக்கிவைத்தால் கடுப்பாகி விடுவார். கடுப்பை வெளியே காட்டாமல் சிரிப்பை வீசியே கறந்துவிடுவார். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.

## ஜூராசிக் பார்க் 2

நம்நாட்டிலும் வசூலில் சக்கைபோடு போட்ட படம் ஜூராசிக்பார்க். படத்தை இயக்கியவர் ஸ்ரீபன் ஸ்பீல் பெர்க். படத்தின் கதாசிரியர் மைக்கேல் கிரிக்டன்.

மைக்கேல் கிரிக்டன் அமெரிக்காவின் சூப்பர் ஹிட் எழுத்தாளர். டைனோசரை வைத்து அவர் எழுதிய ஜூராசிக் பார்க், டிஸ்குளோசர் இரண்டும் படமானது. கடந்த ஆண்டு இறுதியில் டிஸ்குளோசர் அமெரிக்காவில் திரையிடப்பட்டது. மைக் கிரிக்டனின் மற்றொரு நாவலான 'காங்கோ'வும் படமாகி சமீபத்தில் வெளியாகியுள்ளது.

இப்போது ஜூராசிக் பார்க் பாகம் இரண்டுக்கான கதையை தயாராக்கி வருகிறார் மைக் கிரிக்டன். 'தி லாஸ்ட் வேல்ட்' என்ற பெயரில் மைக் கிரிக்டன் எழுதிய நாவல்தான் திரைக்கதையாக தயாராகிறது. டைனோசர் பற்றிய கதைதான் அதுவும். இதனையும் ஸ்பீல் பெர்க் இயக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கதாசிரியர் மைக் கிரிக்டனுக்கு 52 வயது. நான்கு தடவை திருமணம் செய்தவர். நான்காவது திருமணம் 1987இல் நடந்தது.

## நகைச்சுவை நடிகருக்கு ராசி

வடிவேலு, கவுண்டமணி, செந்தில் போன்ற நகைச்சுவை நடிகர்கள் ஒரு படத்தில் நடிக்க சராசரியாக 6 இலட்சம் வரை வாங்குகிறார்கள். வருடம் ஒன்றுக்கு 30 முதல் 35 படங்களில் நடிக்கிறார்கள். கவுண்டமணி 6 படங்களுக்கு ஒரு முறை தனது சம்பளத்தை உயர்த்துகிறார். தற்போது அவரது சம்பளம் 15 இலட்சம்.

**முகப்பில்**
ராஜ்சந்தர்
இந்துமதி



கார்த்திக்-கனகா
படம்-கட்டப்பஞ்சாயத்து

## பூஜாக்கள்

டிகை பூஜாபட்
ாடியாக கல்லூரி
ல் நடித்துக் கொண்டிருப்பது தெரிந்த செய்தி.
ஜாபட் திரையிலும், வெளியிலும் தாராளமானவர்
பவர். பூஜாபட்டுக்கு போட்டியாக வந்தவர் பூஜாபட்ரா.
ாக்களும் கடும் போட்டி. அதனால் சில
களும், ஹீரோக்களும் பலன் அடைந்தனர்.
ட்டியோடு பூஜாபட்ராவுக்கு ஒரு தனி ஈடுபாடு.
ணந்து ரசிகர்களை கிறங்கடிப்பதோடு நிற்கவில்லை.
ப் போகின்றனர் என்று பம்பாய் பத்திரிகைகள் கிசு
ாம்பிளுக்கு ஒரு படம் இங்கு தரப்பட்டிருக்கிறது.
பூஜாபட்ரா பெயர் குழப்பம் ரசிகர்களுக்கு
? அதற்கு பூஜாபட்ரா என்ன சொல்கிறார் தெரியுமோ?
ன்று, உடல் வேறு. ரசிகர்கள் பெயரையா பார்க்கப்
' முன்புத்தி!

## பஞ்சாயத்துப் பிரபு

பஞ்சாயத்துப் பண்ணும் கதையுள்ள படங்கள் வெற்றி பெற்று வருகின்றன. சின்னக் கவுண்டர், தேவர்மகன், எஜமான், நாட்டாமை, எல்லாமே என்ராசாதான் என்று பல படங்கள் வந்து விட்டன. 'பசும்பொன்' படத்தில் சிவாஜியும், பிரபுவும் ஊர் பஞ்சாயத்துக்காரர்களாக நடித்திருந்தனர். இப்போது 'சீதனம்' படத்திலும் பிரபு பஞ்சாயத்துப் பண்ணும் பாத்திரத்தில் நடித்திருக்கிறார். சமீபத்திய பிரபு படங்களில் எல்லாம் அவருக்கு இரண்டு ஜோடிகள். 'சீதனம்' படத்திலும் இரண்டு ஜோடிகள் ஒருவர் சங்கீதா. மற்றவர் ரஞ்சிதா. குறும்புகளுக்கு குறைச்சல் இருக்காது.

## நடிக்கமாட்டேன் போ!

தமிழ் திரையுலக என்றும் பதினாறு ஹீரோ சிவகுமார். 'நாட்டுப்புறப்பாட்டு' படத்தில் குஷ்புவோடு நடித்துக்கொண்டிருக்கிறார். 'மனைவி அமைவதெல்லாம்' படத்தில் சிவகுமாருக்கு இரண்டு ஜோடிகள். ஒரு ஜோடியாக நடிக்க பானுப்பிரியாவை கேட்டார்கள். கதையைக்கூடக் கேட்காமல் மறுப்புச் சொல்லிவிட்டாராம். கஸ்தூரியிடம் கேட்டார்கள் 'எப்போது சூட்டிங்' என்று கேட்டாராம். சிவகுமாரின் ஜோடி கஸ்தூரி.

## 50 இலட்சம்

'ஆனந்தம்' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ள ஐஸ்வர்யா ராய் இந்திப் படங்களில் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளார். ஒரு படத்தில் நடிக்க அவர் வாங்கும் சம்பளம் 50 இலட்சம்.


## ...பாகுமோ?

த்தில் ஊர்மிளா
விதம் ஒரு பெரிய
ிவிட்டது. அந்தப்
தி நடிகைகளின்
ாமல் போய்க்
னர். போட்டிக்கு
தில் மளமளவென்று
றத்துக் கொள்ள
கள். எங்குபோய்

## ஷங்கரின் பொறாமை

'ஜென்டில்மேன்', 'காதலன்' போன்ற படங்களின் மூலம் பரபரப்பாகப் பேசப்பட்ட ஷங்கர். தற்போது கமல் நடிக்கும் 'இந்தியன்' படத்தை இயக்கி வருகிறார். அவர் கூறுகையில்,

"இந்தச் சினிமாத்துறையில் நான் பார்த்து மிகவும் பொறாமைப்படும் இயக்குநர் 'கேளடி கண்மணி' புகழ் வசந்த். காரணம், அவர் இயக்குநர் சிகரம் கே.பாலசந்தரிடம் உதவியாளராகப் பணியாற்றியதுதான். நான் சினிமாத் துறையில் நுழைந்தபோது கே. பாலசந்தரிடம் உதவியாளராகச் சேர வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். ஆனால் என்னால் முடியவில்லை. அந்த வாய்ப்பு வசந்திற்குக் கிடைத்தது. அதைப் பார்த்து, வசந்த் மேல் எனக்குப் பொறாமையாக இருக்கிறது" என்று சொன்னலகத்தார்.



விஜயகுமார்-ஜெயசுதா
படம்-அந்திமந்தாரை

## மீன்கறிப் பிரியர்

இந்தியாவில் கேரள மாநிலத்தில் மீன்கறிச் சமையல் படு பிரமாதமாக இருக்கும். 'சொர்ண சாமரம்' படத்தில் நடித்துவரும் சிவாஜி மீன்கறியை ஒரு பிடி பிடிக்கிறாராம். ஐம்பதைத் தாண்டினாலும் ஆசை வரும்.

## துறைமுகம் தாமதம்

தீபாவளி ரிலீசாக துறைமுகம் படத்தை வெளியிட விளம்பரம் செய்திருந்தார்கள். தியேட்டர்கள் கிடைக்க தாமதமாகியதால் நவம்பர் 3ம் திகதிதான் ரிலீஸ் செய்திருக்கிறார்கள்.

அதுபோல தீபாவளிக்கு வெளியிட திட்டமிட்ட 'தாயகம்' படமும் படப்பிடிப்புக்களில் ஏற்பட்ட தாமதங்களால் தள்ளிப் போயிருக்கிறது.



ரகுவரன்-விசித்ரா
படம்-தொட்டாச் சிணுங்கி

## வருகிறது யுத்தம்

இரத்தத்தின் இரத்தமே படத்தை எடுத்துக் கையைச் சுட்டுக்கொண்டு படத் தயாரிப்பை நிறுத்தியிருந்தவர் நடிகர் பாலாஜி. சமீபத்தில் அவரது மருமகன் மோகன்லால் நடிக்க 'ஸ்படிகம்' என்ற பெயரில் ஒரு படத்தை தயாரித்தார். படம் சூப்பர் ஹிட். உடனே அதனைத் தமிழில் 'யுத்தம்' என்ற பெயரில் மொழிமாற்றுகிறார்கள். தெலுங்கிலும் தயாராகிறது. அதில் நாகார்ஜுன் நடிக்கிறார். 'ஸ்படிகம்' படத்தைப் பார்த்த ரஜினி மோகன்லால் நடிப்பை ஓஹோவென்று புகழ்ந்தாராம்.

## கனகாவின் சேவை

கனகா கலைச்சேவையை வாரி வழங்க வளைகுடா நாடுகளுக்கு திக் விஜயம் சென்றுள்ளார். அவரோடு சேர்ந்து சேவை செய்ய குஷ்பு, ரோகிணி ஆகியோரும் சென்றுள்ளனர். இக்கரைக்கு அக்கரைப்பச்சை.

## நக்மாவின் தந்திரம்

புதுப் படங்களில் ஒப்பந்தம் செய்யப் போகிறவர்களிடம் தேதி இல்லையே என்று பந்தா காட்டுகிறாராம் நக்மா. சம்பளத்தை உயர்த்தும் தந்திரமாம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.



படிப்பகம்

www.padippakam.com

## சுயபரிசோதனை

# நகைச்சுவை உணர்வு உள்ளவரா நீங்கள்?



**பெ**ண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி ஒருவரது வாழ்க்கையில் நகைச்சுவை உணர்வு மிகவும் அவசியம். எப்போதும் 'உம்' என்ற முகத்துடன் சீரியசாக இருப்பவர்களை யாரும் விரும்ப மாட்டார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்? பிறர் அடிக்கும் ஜோக்குகளை விளையாட்டாக எடுத்துக் கொள்பவரா அல்லது சீரியசாக எடுத்துக் கொள்பவரா? இதோ உங்களைப்பற்றி நீங்களே தெரிந்து கொள்ள ஒரு குவிஸ். கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என பதில் அளித்து வாருங்கள்.

1. என்னைச் சுற்றி உள்ளவர்கள், என்னைப்பற்றி சொல்லும் கமெண்ட்கள் உண்மையா அல்லது ஜோக் அடிக்கிறார்களா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

2. நல்ல ஜோக்கை ரசித்து கேட்பேன். ஆனால், சிறிது நேரத்திலேயே மறந்து விடுவேன். எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அதை என்னால் நினைவுக்கு கொண்டு வர முடிவதில்லை.

3. காமிக்ஸ் புத்தகங்கள் மற்றும் சார்லி சாப்ளின், லாரல் அண்ட் ஹார்டி, மிக்கி மவுஸ், டாம் அண்ட் ஜெர்ரி போன்ற சிரிப்பு படங்களுக்கு ஏன்தான் இவ்வளவு செல்வாக்கு உள்ளது என்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

4. சினிமா 'டி.வி' போன்றவற்றில் சீரியசான கதாபாத்திரத்தில் நடிப்பவர்கள், சொந்த வாழ்க்கையிலும் அப்படித்தான் இருப்பார்கள் என்று நினைத்துக் கொள வேன்.

5. சின்ன சின்ன, அபத்தமான ஜோக்குகளுக்கெல்லாம் கூட காட்டுமிராண்டிகள் தான் கூச்சல் போட்டு, அமர்க்களம் செய்வார்கள்!

6. எனக்கு பிடித்த விடுமுறை நாட்களில், ஏப்ரல் முதல் தேதியான முட்டாள்கள் தினமும் ஒன்று!

7. எனது வாழ்க்கையில் இதுவரை சொந்தமாக ஒரு நல்ல ஜோக் கூட அடித்தது கிடையாது. அப்படிப்பட்ட எண்ணமும் எனக்கு இல்லை.

8. திடீரென எனது பேன்ட் ஜிப் அவிழ்ந்து அனைவரும் என்னைப் பார்த்து சிரித்தால் தனிமையில் மிகவும் வருத்தப் படுவேன்.

9. நான் எப்போதும் மிகவும் சீரியசாக இருப்பதாகவும், நகைச்சுவை உணர்வை கொஞ்சமாவது எனக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று நண்பர்கள் என்னிடம் அடிக்கடி கூறுவார்கள்.

10. யாராவது என்னைப் பார்த்து அர்த்தமில்லாமல் சிரித்தால் எனக்கு கோபம் வந்துவிடும்.

11. யாராவது எனக்கு ஜோக் கதை சொன்னால் அதன் பொருள் என்ன என்பதையும் எனக்கு புரியவைக்க வேண்டும்.

12. ஜோக்கர்கள் நிகழ்ச்சியை பார்க்க முதல் வரிசையில் அமர மாட்டேன். காரணம், என்னை திடீரென அவர்கள் மேடைக்கு அழைத்தால் எனக்கு உயிரே போய்விடும்.

### மதிப்பெண்

*9 முதல் 12 வரை: ஆம் என இருந்தால்* நீங்கள் சோகமான பேர்வழி என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் சரியான உம்மனா மூஞ்சி ஆசாமி. ஜோக்கை ரசிக்கவே தெரியாது உங்களுக்கு. அழுதால் கூட கண்ணீர் வராது. சிரிப்புதான் சிறந்த மருந்து. எனவே, தனிமையை உதறுங்கள். நண்பர்களுடன் அரட்டை அடியுங்கள். முகத்தில் புன்னகையை தவழ விடுங்கள்.

**5-8 வரை ஆம்:** யாரும் ஜோக் அடித்தால் சீரியசாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள். அதை ரசிப்பீர்கள். அதே நேரத்தில் மற்றவர்களையும் ஒரு பிடி பிடிப்பீர்கள். நீங்கள் வந்தாலே அந்த இடம் கலகலப்பாக மாறிவிடும் என மற்றவர்கள் நினைப்பார்கள்.

**0-4 வரை ஆம்:** நீங்கள் கோமாளி இளவரசன் தான். நல்ல சிரிப்பு வர வேண்டும் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வீர்கள். நல்ல ஜோக்கை உதிர்ப்பது எப்படி என தெரிந்து வைத்திருப்பீர்கள். அதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களை எப்படி சிரிக்க வைப்பது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

# இதுவும் ஒரு பயங்கரவாதம்



**வ**ரலாறுகளில் பயங்கரவாதங்கள் மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் அல்லது ஒரு தேசத்தின் பெயரால் பல காலமாக நடைபெற்று வந்திருக்கின்றன. அதே போல தாம்பத்திய வாழ்க்கையிலும் மனைவிகளின் மேல் கணவன்களால் வன்முறைகள் கட்ட விழ்த்துவிடப்படுகின்றன.

சில வன்முறைகளுக்கு வரதட்சனைகள் காரணமாக இருக்கின்றன. சில வன்முறைகளுக்கு கணவன்மாரின் சந்தேகக் குணம் காரணமாய் அமைந்துவிடுகிறது.

கற்பு என்பதை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாய் வைப்போம் என்ற முழக்கங்கள் காகித வார்த்தைகளாக, வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக நம் கலாசார வாசல்களில் தோரணமாய் தான் தொங்கவிடப்படுகின்றன.

தாலி ஒரு அடையாளம்தான். ஆனால் உயிரோட்டம் உள்ள உறவின் அடையாளமல்ல. உயிரோட்டம் உள்ள உறவின் இலட்சனம் ஜீவனுள்ள அன்பும், நேசமும்தானே தவிர உயிரற்ற வேறு ஜடப்பொருள் அடையாளமல்ல. உறவை உறவுதான் காப்பாற்றும். உரிமை எத்தனைகள் இருந்தாலும் அவை உறவைக் காப்பாற்றாது.

ஆதவன்களுக்கு மேனகாக்களுக்கு திருமணத்தின் முன்பு மறந்தும் காதல் அனுபவம் இருக்கக்கூடாது. ஆனால் ஆதவன்களுக்கோ திருமணத்தின் பின்னரும் தேன்மொழிகளோடு காமத் தொடர்பு இருக்கலாம். ஆனால் இந்த மேனகாக்களோ ஜென்மம் எடுக்கும் போதே ஆதவனின் தர்மபத்தினிகளாகத்தான் பிறந்து வாழ்ந்திருக்க வேண்டும். மேனகாக்கள் ஆதவன்களுக்கு மனைவி மட்டும்தான். மனிதப் பிறவிகள் இல்லை.

இதை விஞ்ஞான பூர்வமாகச் சொன்னால் ஆண் என்ற கம்யூட்டரில் அவனுக்கு ஏற்றவாறு புரோக்கிராம் செய்து வைக்கப் பட்ட வடிவம்தான் அவனின் மனைவி.

(ஸ்டெல்லா புரூஸ் எழுதிய 'ஆயிரம் கதவுகள் திறக்கட்டும்' நாவலில் இருந்து )

## லேடீஸ் ஸ்பெஷல்

# கடைக்குப் போகுமுன் கவனிக்க

* விற்பனையாளரை அதிகாரம் தொனிக்கும் குரலில் அழைக்கக் கூடாது.

* தேவையென்றால் மட்டுமே கடையினுள் நுழையவும். வேடிக்கை மட்டும் பார்க்கலாம் என்று எண்ணிக் கடைகளில் நுழைந்து, ஊழியர்களின் நேரத்தை வீணடிக்காதீர்கள்.

* குறையாக இருந்தாலும், புகார் கூறுவதாக இருந்தாலும் நேரடியாகக் கடை முதலாளியிடம் கூறிவிடுங்கள். விற்பனை செய்து கொண்டிருக்கும் ஊழியரிடம் வாக்குவாதம் செய்வது அநாகரிகமான செயல்.

* சன நெருக்கடி அதிகமாக இருக்கும் கடைகளில் சென்று தேவையில்லாத பொருட்களையெல்லாம் எடுத்துக் காண்பிக்கச் சொல்ல வேண்டாம்.

* கடைக்காரருக்கு முதலில் வந்தவரைக் கவனிக்க வேண்டும் என்ற உரிமை உண்டு. அதனால் உள்ளே நுழைந்தவுடன் கடைகளில் இன்னொருவரின் வியாபாரத்தைக் கவனிக்கும் போது குறுக்கிடக் கூடாது.

* பொருட்களைப் பிடிக்கவில்லை என்றால் பேசாமல் இருந்து விடவேண்டும். இல்லாவிட்டால் பிறர் வாங்குவது பாதிக்கப் படும்.

* கடைக்குள் நுழையும் போதே நமக்குத் தேவையான பொருட்கள் என்ன என்பதைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்து தருவது சுகந்தினி**

## முட்டைக் குருமா



**தேவையான பொருட்கள்:**

முட்டை - 03
வெங்காயம் - 100 கிராம்
தக்காளி - 100 கிராம்
எண்ணெய் - 20 மில்லி லீற்றர்
மிளகு - சிறிதளவு
கடுகு - சிறிதளவு
கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - அளவாக

**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்து அதில் சிறிதளவு உப்பைப் போட்டுக் கலக்கி வைத்துக் கொள்ள வேண்டும். வெங்காயம், தக்காளி ஆகிய வற்றைச் சிறிது சிறிதாக நறுக்கித் தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். மிளகையும் சிறிதளவு உப்பையும் தனித் தனியாக தூளாக்கிக் கொள்ள வேண்டும்.

பிறகு அடுப்பில் பாத்திரத்தை வைத்து அதில் எண்ணெய், கடுகு, பருப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு சிவப்பாகும் வரை வறுத்துக் கொள்ள வேண்டும். அதில் தனியாக நறுக்கி வைத்துள்ள வெங்காயம், தக்காளியைப் போட்டு நன்றாக வேகும் வரை கிளற வேண்டும். பிறகு முட்டைக் கலவையை அதில் கொட்டி உப்பையும், மிளகுத் தூளையும் சேர்த்துக் கிளற வேண்டும். முட்டை லேசாக வேகும் வரை அடுப்பில் வைத்து இறக்கி விடவும்.

ரொட்டி, சப்பாத்தி, பூரி, சோறு போன்றவற்றுடன் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். இதனைக் குறைந்தது பத்து நிமிடத்தில் தயார் செய்து விடலாம்.

## ஸ்போட்ஸ்

# துடிப்பான பையனின் சுருக் சுருக் பேட்டி

## வேகம் தேவையானால் வேகம் தேவை

**இ**ந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் டெண்டுல்கர். நட்சத்திர மதிப்பிருந்தும் அடக்கம்தான் டெண்டுல்கருக்கு மகுடம். அவரது பேட்டியிலும் அடக்கம் பளிச்சிடுகிறது. கூடவே தன்நம்பிக்கையும்.

**கேள்வி: உலகக் கோப்பைக்கான போட்டிகள் ஆரம்பமாகப் போகின்றன. இந்தியாவால் வெற்றியை வசப்படுத்த முடியுமா?**

டெண்: அதற்கு இன்னும் மூன்று, நாலு மாதங்கள் இருக்கின்றன. உலகக் கோப்பைப் போட்டிகள் மிகப் பெரிய சவால்தான். அதனால்தான் மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். சகல அணிகளும் சிறப்பானவைதான். ஒரு நாள் போட்டிகளில் எந்தவொரு அணியையும் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது. இந்த நூற்றாண்டின் இறுதி அம்சமாக உலகக் கோப்பைப் போட்டி இருக்கப்போகிறது. அதனால் நாங்களும் அவதானமாக இருக்கவேண்டியிருக்கும். இந்த நூற்றாண்டின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று நாமும் விருப்பம் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி: உலகக் கோப்பை போட்டிகளில் இந்தியா பாகிஸ்தானுடன் மோத நேரலாம். ஏற்கனவே பல தடவைகள் பாகிஸ்தானுடன் மோதி வெற்றிவாய்ப்பை மயிரிழையில் தவறவிட்டிருக்கிறதல்லவா இந்தியா?**

டெண்: உண்மையில் இது எமது மனோநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது எமது அணி போதுமான ஆயத்தங்களை செய்துள்ளது. நம்பிக்கையோடு தயாராக இருக்கிறோம். சில போட்டிகளில் தோல்வி கண்டபோதும்,



அப்பாதையை மாற்றமுடியும். உண்மையைச் சொல்வதானால் நூறு வீதத்துக்கும் அதிகமாக முயற்சிக்க வேண்டியுள்ளது.

**கேள்வி: மேற்கிந்திய வீரர் பிரைன் லாரா தனது துடுப்பாட்டத்தில் பந்துகளை தரையை ஒட்டியதாக அடித்து விரட்டுகிறார் நீங்கள் தரைக்கு மேலே எழக்கூடிய வகையில் அடிப்பதாக சிலர் அபிப்பிராயப்படுகின்றனரே?**

டெண்: அதுதான் என் ஆட்டம். தரையை ஒட்டி அடிப்பது லாராவின் பாணி. நான் எனது பாணியில்தான் ஆடுவேன். லாரா தனது பாணியைத் தொடரட்டும்.

**கேள்வி: மேற்கிந்திய தீவு பந்து வீச்சாளர்களில் யார் ஆபத்தானவர் என்று நினைக்கிறீர்கள்?**

டெண்: கோட்னி வோல்ஷ் என்று கருதுகிறேன்.

**கேள்வி: அவரது பந்து வீச்சை ஆபத்தானதாக்கி உள்ளது எது?**

டெண்: அவரது அனுபவமும், வேகமும் தான். அவர் ஒரு சூழ்ச்சியான பந்து வீச்சாளர். சில சந்தர்ப்பங்களில் அதிகம் களைப்புற்று விட்டாரோ என்று கருதும் வகையில் பந்து வீசுவார். அவ்வாறு மூன்று முறை வீசிவிட்டு நாலாவது, ஐந்தாவது வீச்சுக்களில் அதிக வேகத்தைக் காட்டுவார். பந்து விக்கெட் கீப்பரிடம் போய்ச் சேர்ந்து விட்டதை உணரமுடியாதிருக்கும்.

**கேள்வி: சிறிய வயதில் நிறையச் சாதனைகள் செய்து விட்டீர்கள். அப்படியிருந்தும் எல்லாவற்றிலும் வேகம் காட்டுவதேன்?**

டெண்: வேகமாக எதையும் செய்ய முடியுமானால் வேகமுடன் செயற்படுவதில் தவறில்லையே!

**கேள்வி: சிறந்த துடுப்பாட்டத்துக்கான அடிப்படை என்ன?**

டெண்: உங்கள் தலை உறுதியாக இருக்க வேண்டும். அதுவே உங்கள் உடலை வழிநடத்த வேண்டும். உங்கள் இடது பாதத்தை அசைக்கும் போது உங்கள் தலை பின்பக்கமாக இருக்க வேண்டும். பாரம் பகிர்வதில் கவனம் வேண்டும். அமைதியோடு மன ஒருமைப்பாடும் அவசியம்.

**கேள்வி: அர்ஜுன் விருது உங்களுக்கு ஒரு உந்து சக்தியாக விளங்கியிருக்குமே?**

டெண்: ஜனாதிபதியிடமிருந்து அந்த விருதைப் பெற்றுக்கொண்டது எனக்குப் பெருமை.

# அழகு என்றால் என்ன?

**உ**லக அழகியாக தெரிவுசெய்யப்பட்ட சுஷ்மிதா சென் இப்போது நடிகையாகிவிட்டார். இந்திப்படங்களில் நடிக்க ஆரம்பித்துவிட்டார்.

சுஷ்மிதா சென்னுக்கு கவிதையும் எழுதவரும். சுஷ்மிதாவின் கவிதையில் இருந்து ஒரு பகுதி:

*"நம்மில் ஒவ்வொருவருக்கும் கடவுள்*
*விசேஷமான அழகைப் பரிசாக அளித்திருக்கிறார்.*
*சிலர் அதை முகத்தில் காட்டிக்கொள்கிறார்கள்.*
*சிலர் இதயத்திலுள்ள அன்புடன்*
*இணைத்துக் கொள்கிறார்கள்.*
*முகத்தின் அழகு காலத்தினால் அழியக் கூடியது.*
*கண்களின் ஒளி எப்போதுமே*
*பிரகாசித்துக் கொண்டிருப்பதில்லை.*
*மீதமுள்ளவைகளில் காலத்தால்*
*அழிக்க முடியாதவை*
*இதயத்தில் உள்ள நல்ல எண்ணங்கள்தான்.*
*ஆம்; அதுதான் உண்மையான அழகு.*
*எப்போதுமே விட்டு விலகாதவை!"*

# காதலில் ஒரு சங்கதி

**அப்துல்ரகுமான்**



அவளைப் பார்ப்பவர்கள் அவளைக்
காதலிக்காமல் இருக்க முடியாது.

கண்ணும் இதயமும் இல்லாதவர்கள் தாம்
அவளைக் காதலிக்காமல் இருக்கமுடியும்
அப்படி ஓர் அழகு!

அவனும் அவளைக் காதலித்தான். ஆனால்,
அவளிடம் அதைச் சொல்லும் துணிவு
அவனுக்கில்லை.

அவளைக் காதலிக்கும் தகுதி தனக்குண்டா?
ஒரு வேளை தன் காதலை அவள் ஏற்றுக்
கொள்ளாவிட்டால்? இந்த அச்சமே அவன்
நாவைக் கட்டிப் போட்டு விட்டது.

நிராகரிக்கப்படும் காதலை விட
நெஞ்சில் மறைத்து வைக்கும் காதல்
நல்லதல்லவா?
காதல் காயம் படாமல் இருக்குமே!

அதனால் அவன் தன் காதலை ஒரு ரகசியம்
போல் உள்ளத்தில் ஒளித்து வைத்துக்
கொண்டான்.

ஆனால், காதலை ஒளித்து வைக்க முடியுமா?
மலர் தன் மணத்தை மறைத்து வைக்க
முடிவதில்லையே.

அவன் ஒளித்து வைத்தது காதலா?
இல்லை; நெருப்பு! அது உள்ளே இருந்தே
அவனை எரித்தது.

அவன் நாளுக்கு நாள் மெழுகுதிரி போல்
உருகி மெலிந்தான்.

அவனைப் பார்த்தவர்கள் அவனுக்கு
என்ன நோய் என்று தெரிந்துகொண்டார்கள்.
அது மட்டுமல்ல அவனுடைய நோய்க்கு யார்
காரணம் என்பதையும் அறிந்து
கொண்டார்கள்.

அது ஒன்றும் கடினமாக இல்லை.
ஏனெனில்
அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவன்
பிரகாசமடைந்தான்.

அவள் பெயரை யாராவது
சொல்லக்கேட்டால்
நாணய ஒலியைக் கேட்ட கருமியைப்போல்
திரும்பினான்.

அவன் வாய் பேசவில்லை. ஆனால் அவன்
கண்ணீர் பேசியது; பெருமூச்சு பேசியது.
அவனே ஒரு உரத்த வார்த்தையாக
இருந்தான்.

அவன் யார் என்று எல்லோருக்கும் தெரிந்து
விட்டது.

*என்னைப் பார்ப்பவர்கள்*
*உன் பெயரைச்*
*சொல்லி விடுகிறார்கள்;*
*நான் மௌனமாகத்தான்*
*இருக்கிறேன்*
*என் நிலைமை*
*மௌனமாயில்லை.*


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 12

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அறுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

# தேன் கிண்ணம்

## சின்னச் சின்ன கவிகள்

முத்தமிட்டேன்
குத்திப் போட்டாள்;
ரோஜா!

ஆடை களற்றினேன்
நிர்வாணமானாள்;
தயிர்!

பயணிகளில்லாத ரெயில்
புகை கக்கிப் போனது–
மேகம் அல்ல சிகரட்!

கதிர் முற்றியது
தலை குனிந்தான்;
ஞானி!

எம்.முர்தளா

## சிலுவையில் தொங்கும் நியாயம்!

புலியைப் பிய்த்து
மாணிக்கம் எடுத்தாற் போல்
ஒரு ஜனனம்
சுகப்பிரசவம்தான்!
++
ஆனால் ஏனோ?
பூபாளம்
இசைக்க வேண்டிய இடத்தில்
முகாரி...
++
உம்மாவும்
உம்மம்மாவும்
வாப்பம்மாவும்
ஒன்றுகூடி
கவலையை நீராய் மாற்றி
பார்வைக் கானால்
வடியவிட்டு...
++
என்ன நடந்தது
இவர்களுக்கு...?
++
குழந்தை அழுவது நியாயம்!
இவர்கள் அழுவது...?
++
தொடர்ந்து வந்த
தொழில் நஷ்டங்களுக்கே
மசிந்த போகாத தந்தை
ஏன் இன்று
கசிந்து போகிறார்?
++
ஊரார் வாய்கள் ஏன்
அவ(ள்)மானத்தை
உமிழ்கின்றன?
++
ஆமாம்......!
துப்புக் கெட்ட
நம்மவருக்கு
பசிபோக்க தாயும்
உடற் பசிபோக்க
மனைவியும்
வெளிநாடு சென்று
கடன் தீர்க்க மகளும்
கட்டாயம் வேண்டும்!
ஆனால்
பெண்குழந்தைமட்டும்
பிறக்கக்கூடாதே!

மீராவோடை எஸ்.நளீம்.

## பற்றியெரியும் .....

வெளிச்ச சலனமின்றிய
இருள் காவல் செய்யும்
இரவில் என் பயணம்...
..
பிரதேச நிகழ்வுகளின் கொடூரத்தை
ஏற்கும் சக்தி இழந்து
கலங்கும் சதைக்கட்டிகளுக்கிடையில்
துலக்கம் இல்லாத என் இருதயம்...
..
பாலைவன கானலை ஒத்த
இருப்பு நிச்சயமற்ற
என் கனவுகளின் எதிர்காலம்...
..
இதய சாளரங்கள் மூடப்பட்டு
மனிதம் இழந்த மனிதர்கள்
தரிசனம் காணும்
கிழிந்த என் கிராமம்..
..
பல தடவை எதிரிகளை
மன்னிப்பதனையும்; தண்டிப்பதனையும்
மனம் கொள்ளாத என் சிந்தை...
..
எப்போதும் எதிர்காலம் பற்றிய
இருப்பு உறுதிப்படுத்தப்படாத
சோகம் ஒட்டிய என் சொப்பனம்...
..
தேச திண்ணையில்
இடர்படும் பிரேதங்கள் பார்க்கிறேன்.
இவர்கள் என் சொந்தங்கள்...
..
என் கண்களை நான்
பலாத்காரம் செய்வேன்
'கண்ணீர் உகுத்து...
'கண்ணீர் உகுத்து...
ஒரு மாரி கால மழைமாதிரி..
..
பற்றி எரியும்–என்
பிரதேசம் அணைந்து போகலாம்!
அதனால்...

இஸ்லாஹிய்யா கே.முனாஸ்.

## நிழலும் நிஜமும்

தேவலோகக் கன்னியவள்
தரையிறங்கி வந்து நின்று
கண்கள் விரிய வந்து
என்னைக் கேட்டாள்....
++
நாட்டிய மாட
மயிலை அழைத்தேன்
ஓட்டமாய் ஓடி
ஒழிந்து கொண்டதே!
குயில் கூட கூவ மறந்து
கூக்குரலிட்டதே
காப்பாற்றச் சொல்லி....
++
தெருவோர நாய்கூட
திமிராய் சொல்கிறது
உன்னிலும் நான்
பெரியவனென்று...
++
நரியும் கழுகும்
மெதுவாய்த்தான்
நடக்கின்றன;
காலம் கடந்தாலும்
காத்திருக்கும் உணவென்று;
++
மனித உடல் கூட
மலிவாகிப் போனதின்று
பார்த்தாயா என்றாள்!

அன்பார்ந்த அரம்பையே!
மனிதம் மரணித்து
வெகு நாட்களாயிற்றே
தெரியாதா உனக்கென்றேன்!

சுகந்தி-கருவாஞ்சிகுடி.

## அவளொரு....

அவள்...
அந்நிய கிரகத்து
அதிசயப்பறவையல்ல......,
♣
அடுப்படிச்சாம்பலில்
இறக்கை விரித்த
புதிய ஃபினிக்ஸ்........,
♣
மலருக்கும் மானுக்கும்
நிலவுக்கும் நீருக்கும்
கயலுக்கும் மயிலுக்கும்
உவமிக்க உருவான
இலக்கியப் பிறவியல்ல......,
♣
சித்திரத்தில் கலையாகி
சீதனத்தில் விலையாகி
சிந்தனையில் குறுகலாகி
நடைமுறையில் பழமை பேணும்
பண்பாட்டுப் பதுமையுமல்ல.....,
♣
அவலத்தை சபதமாய்
அஸ்தமிப்பை விடியலாய்
சிருஷ்டிக்கப் புறப்பட்ட
புதிய பிரம்மா...,
♣
தலைவிதியைப் பறிகொடுத்த
சமூகத்திற்கொரு
புதுவிதியை நிர்ணயித்த
புதிய பாரதி...,
♣
புரையோடிய வேர்களை
ஊடறுக்கப் புறப்பட்ட
புதிய எக்ஸ்கதிர்!

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

## வலித்துப்போன வாலிபம்

உன்
தெருவில் மட்டுமே
நடந்து நடந்து
வலித்துப்போனது–என்
வாலிபம்.
..
என்னை – உன்
விழிகள்
விசாரித்த போதுதான்
நான்–அலைந்தேன்
விலாசங்கள்
கிடைக்காமல்....!
..
என்றாலும்–என்
கவிதைகள்–என்னை
காண்பித்தன......!
நீதான்–இன்னும்
கண்டு கொள்ளவே
இல்லை.....!
..
ஒருமுறையாவது
பார்க்கக்கூடாதா
நீ.....
முறைத்துக் கொண்டாவது?
..
என்னில்
நினைவு விதைகளை
தூவிவிட்டு,
தோட்டக்காரனாகவா
நியமித்துவிட்டுச்
சென்றாய்–என்னை.....?
..
விதைகள்–முளைத்து
விருட்சமானது–என்
கண்ணீரை மட்டுமே
உறிஞ்சி.....!
..
கைக்குழந்தையுடன்
அலைவதான
அனுபவமெனக்கு– உன்
நினைவுகளைச்
சமப்பதில்....!
..
இந்தப் பூமியின்
விளிம்புவரை–உன்
முன்னேதான்
பயணிக்கிறேன்
என்றாலும்–உன்
விழிகளுக்குள் மட்டும்
தரித்திருக்கும்–தகுதி
எனக்கு
தரப்படவேயில்லை.....!
..
பறவாயில்லை–நீ
சிரித்துக் கொண்டேயிரு
நான்–சீரழிந்து
போகுமட்டும்!

அக்கரைப்பற்று–ஏ.ஜீ.சேகர்.

## இன்னொரு பகல்

ஒரு
பட்டப்பகல்
ஊதிப்போய்
வெடித்து
சூரியன் சிதறி
மஃரியாகிப்போனது.
..
வானம் பிதுங்கி
உள்ளிருந்து
நிலா வெளியாகி...
மேகம் கரைந்து
நட்சத்திரங்கள்
கட்டி கட்டியாய்
கிடக்கும்
ஒரு பட்டப்பகல்
மீண்டும் ஈணப்பட்டது.
..
அது
காகங்கள் கத்தாத
கிளிகள்
கீச்சிடாத
சூரியப்பகலை
பிரித்தறிய முடியாத
பகல்.
..
சுடாத
நிலாப்பகல்.
பசுமுலையால்
பால்
பீச்சுவது போலான
வெள்ளைப் பகல்.
..
இனி
வாசலில்
ஒரு
பெண்மடி
இல்லாது போனால்
இந்தப் பகலை
ரசிப்பதில்
அர்த்தமில்லை.

பொத்துவில்–பௌர்ணமி நிலா(பைசல்)

## இது தாண்டா யதார்த்தம்!

வார்த்தைகளால்
சுட்டுக் கொண்டிருந்தார்கள்;
ஜன்னலோர பயணி
பொட்டு பொட்டு வைத்த
பெண்!
▫▫
முறைத்துப் பார்த்தார்கள்;
வாயை மூடிக்கொண்டார்கள்
தமிழில்
கதைத்தவர்கள்.
▫▫
பத்திரிகை விரித்து
பரவசப்பட்டார்கள்;
தம்மவர்
தப்பியமைக்கல்ல–போரில்
இறந்தவர்கள்
இனம் வெறென்பதற்காக!
▫▫
சமாதானம் பற்றி
யோசித்து
பஸ்ஸேறியவன்–கடைசியில்
சண்டையை
நினைத்துக் கொண்டிறங்கினான்.

ஷர்மிளா இஸ்மாயில்–கண்டி

## [illegible]

எனக்கொரு
கவிதை எழுத ஆசை!
கற்பனைகளையல்ல
உண்மைகளை!
–0–
நான்
உண்மைகளை
உடுத்திக்கொண்டு
உடைகளை தொலைத்த
நிர்வாணி!
–0–
கனவுகள்
நிறைய வைத்திருந்தேன்;
அவனோடு
அவையும்
தொலைதூரம்
சென்றன...
–0–
எவெரஸ்டையும்
மரியானாவையும்
இணைத்து வரைந்த
நேர்கோட்டு
இலட்சியங்கள்...
–0–
எத்தியோப்பியனின்
வயிறு போல
எனது 'பொக்கற்'
ஒரு அகதியின்
துயரம் போல
எனது
ஏக்கம்!
–0–
நேற்று சூரியன் கூட
வந்து சுகம் கேட்டான்;
ஆனால்
நிலவுக்கு
நேரமில்லையாம்.
–0–
திரையிட்டு– திரையிட்டு
வசூலிக்காத ஒரு திரைப்படம்
'ஆஸ்கார்' வாங்கியதாய்
ஒரு ஆறுதல்;
நான்
'மனிதனாக' இருப்பதை
சொல்கிறேன்!

பாலகமலன்–வலினியூர்.

## யாவும் கற்பனை

"காத்திருக்கிறேன்"
என்ற காதலியை
சில காலத்திற்குப்பின்
சந்தித்தேன்.....
கழுத்தில் தாலியும்
கையில் குழந்தையுமாக
நின்றாள்.
என்னைக் கண்டதும்
முகத்தை சோகமாக்கி
கண் கலங்கி
"என்னை நீங்கள்
துரோகி என்று
நினைத்துக் கொண்டிருப்பீர்கள்,
ஆனால்
உண்மையில்
நடந்தது என்னவென்று
உங்களுக்குத் தெரியுமா..."
அவள் ஆரம்பிக்க
நான் இடைமறித்தேன்–
"நண்பி! எனக்கும்
அரசியல் தெரியும்!!"

எம்.சுரேஷ்



## இந்த வாரம் உங்கள் பலன் (12.11.95 முதல் 18.11.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும் | காலை 6 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், உறவினர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், கௌரவக் கேடு. | காலை 6 மணி |
| வெள்ளி - | தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | பயனுள்ள செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. 2 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், செய்தொழில் நன்மை. | காலை 8 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்ச்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, செலவு. | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்ச்சி, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண்மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 8 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், கௌரவம். | பி.ப 2 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, பலவித நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பி.ப, 2 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், பயனற்ற செயல். | காலை 7 மணி |
| புதன்- | உயர்ந்த நட்பு, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | செய்தொழில் மந்தம், காரியக்கேடு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | வீண் குறைகேட்டல் மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | தொழிலில் பிரச்சனை, கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், தொழில் மேன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| சனி- | வீண் குறைகேட்டல், தொழில் நன்மை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| துலாம் | - | சூரியன் |
| விருட்சிகம் | - | வியாழன், புதன், செவ்வாய், வெள்ளி |
| கும்பம் | - | சனி |
| மீனம் | - | கேது |
| கன்னி | - | இராகு |

சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | இனசன விரோதம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- | துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, பாராட்டு. | காலை 6 மணி |
| சனி- | வீண் கவலை, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், மனக்கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், காரியக்கேடு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | மனக்கவலை நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன் - | பயனுள்ள செயல், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் குறைகேட்டல், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் பகை, வீண் தொல்லை. | பகல் 12 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம் | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, மனக்குறைநீங்கும். | பி.ப, 2 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப, 1 மணி |
| புதன்- | வீண் பயணம், பொருள் இழப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 6 மணி |
| சனி- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள்வரவு, காரியானுகூலம் . | பி.ப 2 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப 2 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பணக்கஷ்டம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்தநிலை, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, பணச்செலவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | மனக்கலக்கம், உறவினர் பகை. | காலை 6 மணி |
| புதன்- | பயனற்ற செயல் கௌரவக்கேடு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், துயர் அதிகம். | காலை 6 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கௌரவம் மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- | பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழல் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பணச்செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| சனி- | உயர்ந்த நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4





## சின்னக் குருவி

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இனிய காலை நேரத்தில்
கீச் கீச் சத்தம் போட்டிடும்
சின்னச் சின்னக் குருவியே!

வட்டமிட்டுப் பறந்து நீ
வண்ண வண்ணப் பூக்களில்
தேன் குடித்து மகிழ்வாயே
சின்னச் சின்னக் குருவியே!

கூடு கட்டிக் குஞ்சுடன்
கொஞ்சி விளையாடும் குருவியே
பாட்டுச் சொல்லிக் கொடுப்பாயே
சின்னச் சின்னக் குருவியே!

நாவல் மர உச்சியில்
நல்ல பழம் பறித்து நீ
உண்ண எனக்குத் தருவாயே
சின்னச் சின்னக் குருவியே!

எஸ். நாகராஜன், காரைதீவு

"கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்
கோல்கைக் கொண்டு வாழ்
கல்வியதை விடேல்."
– சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

அடர்ந்த காடொன்றுக்குப் பக்கத்தில் ஓர் ஏரி இருந்தது. அந்த ஏரியில் ஒரு மீனும், ஒரு நண்டும் நண்பர்களாக இருந்து வந்தன. அந்த ஏரிக்கு ஒரு குருவியும் அடிக்கடி வந்து செல்லும்.

ஒருநாள்– அந்த ஏரிக்கு இரண்டு மீன் பிடிப்பவர்கள் வந்தார்கள். அவர்கள் ஏரியைச் சுற்றிப் பார்த்தனர்.

"ஏரியில் தண்ணீர் நிறைய இருக்கிறது. கொழுத்த மீன்கள் ஏராளமாக இருக்கின்றன. நமக்கு நல்ல வேட்டைதான். நாளைக்கு வந்து அத்தனை மீன்களையும் பிடித்துச் செல்லலாம்!" என்றான் ஒருவன்.

"நண்டுகள் கூட எக்கச்சக்கமாக இருக்கின்றன. நாளைக்கு அவற்றையும் பிடித்துவிடலாம்" என்றான் மற்றவன்.

பிறகு இருவரும் அந்த இடத்தை விட்டுச் சென்றனர்.

இவர்கள் பேசியதையெல்லாம் நீரில் நீந்தியபடி கேட்டுக்கொண்டிருந்த குருவி, உடனே மீனையும், நண்டையும் அழைத்து விபரத்தைச் சொன்னது.

அதைக்கேட்ட மீனும், நண்டும் சிரித்தன.

"நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. நாங்கள் இந்த ஏரியில் பரம்பரை பரம்பரையாக வசிக்கிறோம். எங்களுக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து இந்த ஏரிக்கு எந்த மீன் பிடிப்பவனும் வரவில்லை. அப்படியே நீ சொல்வது போல் அவர்கள் நாளை வந்தாலும், நாங்கள் அவர்களிடமிருந்து தப்பிக்கொள்வோம்" என்றது மீன்.

அதை நண்டும் ஆமோதித்தது.

"நண்பர்களே! மனிதர்கள் பொல்லாதவர்கள். அவர்களிடமிருந்து நாம் தப்பிக்கவே முடியாது. எனவே வாருங்கள் இப்போதே வேறு இடத்திற்குச் சென்று விடுவோம்!" என்றது குருவி.

"நீ மிகவும் பயப்படுகிறாய். எங்களுக்குப் பயம் என்பதே கிடையாது. அப்படியே எங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தாலும், எங்களால் தப்பிக் கொள்ள முடியும். தவிர, இந்த ஏரியில் இருக்கும் சௌகரியம் வேறு எந்த ஏரியிலும் இருக்காது. ஆகவே இந்த ஏரியை விட்டு நாம் வேறு எங்கும் வரவே முடியாது." என்றன மீனும் நண்டும்.

"நண்பர்களே! வரவிருக்கின்ற ஆபத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். நீங்கள் எனது நண்பர்களாய் இருப்பதால் தான் உங்களை இந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றத் துடிக்கிறேன். தயவு செய்து என் பேச்சைக் கேளுங்கள். முதலில் வேறு ஏரிக்குச் சென்று ஆபத்து விலகியதும் மறுபடி இந்த ஏரிக்கே வந்துவிடலாம்!" என்றது குருவி.

"இதோ பார்! எந்த ஆபத்தையும் நாங்கள் சமாளிப்போம். உனக்குப் பயமாக இருந்தால் இங்கே வராதே. அநாவசியமாக எங்களைப் போட்டுக் குழப்பாதே!" என்று முகத்திலடிப்பது போன்று மீனும் நண்டும் பேசின.

குருவி மிகவும் கவலையுடன் அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றது.

மறுநாள்–

அந்த இரண்டு மீனவர்களும் ஏரிக்கு வந்தனர். மிகவும் கனமான வலையை ஏரிக்குள் வீசினர்.

முந்தைய நாள் வீராப்பாகப் பேசிய மீனும் நண்டும் தான் முதலில் அந்த வலையில் மாட்டின. அவற்றோடு ஆயிரக்கணக்கான மீனுகளும் நண்டுகளும் மாட்டிக் கொண்டன.


மீனுக்கு மரணப்பயம் தொற்றிக் கொண்டது.

"ஐயோ! நம் நண்பன் குருவியின் பேச்சைக் கேட்டும், அதை மதிக்காமல் மாட்டிக் கொண்டோமே. இப்பொழுது எப்படித் தப்பிப்பது?" என்று அழுது புலம்பியது.

அதற்கு நண்டு மீனைப்பார்த்து, "வீணாக ஏன் புலம்புகிறாய்? தப்பிக்க நான் வழிசெய்கிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தன் கொடுக்கு போன்ற உறுப்புக்களால் வலையைக் கடித்துத் துண்டிக்க முயற்சித்தது.

ஆனால் வலை சற்றுக் கடினமாக இருந்ததால் நண்டின் முயற்சி தோல்வியடைந்தது. அடுத்தடுத்து எவ்வளவோ முயன்றும் வலையை துண்டிக்க முடியவில்லை. இதனால் நண்டிற்கும் மரணபயம் தொற்றியது.

தங்கள் நண்பனான குருவி சொன்ன அறிவுரையை அலட்சியம் செய்ததால் இப்படி மாட்டிக் கொண்டோமே என்று அழத் தொடங்கின. இனி அழுது என்ன பயன்? இனி அவை மரணத்தைச் சந்திக்க வேண்டியதுதான்.



## அலட்சியம் செய்யாதே!

## வாரம் ஒரு நாடு

## ஈரான்

**தலைநகர்** - டெஹ்ரான்
**பரப்பளவு** - 16,48,000 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை** - 6.32 கோடி
**மொழி** - பேர்சியன், துர்க், குர்திஷ், அரபி.
**எழுத்தறிவு** - 54%
**சமயம்** - இஸ்லாம்
**நாணயம்** - றியால்
**தனிநபர் வருமானம்** - 2320 டொலர்.



**வரலாறு:**

ஈரான் பாரசீகம் (பேர்ஷியா) என்றழைக்கப்பட்ட மிகப் புராதனமான நாடு. 1935 வரை பேர்ஷியா என்றே அழைக்கப்பட்டது. சக்ரவர்த்தி ஷா 1906ல் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினார். 1925ல் தேசிய சபை (நாஷனல் அசெம்பிளி) ஷாவை பதவி நீக்கம் செய்தது. பிரதமர் ரசாகானிடம் பதவியை ஒப்படைத்தது. இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனிக்கு உதவியளித்ததைத் தொடர்ந்து பிரிட்டனும், சோவியத் ரஷ்யாவும் ஈரானைக் கைப்பற்றின. பஹ்லவியின் மகனான முகமது சாக்கிற்கு ஆட்சியுரிமையை மாற்றியது. முஸ்லிம் கலவரங்களைத் தொடர்ந்து 1979ல் மன்னராட்சி முடிவுற்றது. தற்போது முஸ்லிம் மத ஆட்சி.

**பொருளாதாரம்:**

விவசாயம் மக்களின் முக்கிய தொழில். கோதுமை, பார்லி, அரிசி, பழவகைகள், சீனி, கம்பளி ஆகியன முக்கிய உற்பத்திப் பொருட்களாகும். கஸ்பியன் கடலிலிருந்து கிடைக்கும் ஸ்டாஜியன் மீன் நாட்டின் முக்கிய வருமான மூலமாகும். மத்திய கிழக்கில் அதிக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஈரானும் ஒன்று. மரகதமும், இரத்தினங்களும் வெட்டியெடுக்கப் படுகின்றன. கைத்தறியிலான பாரசீகக் கம்பளங்கள் உலகப்புகழ் பெற்றவை.

## மாண்டரின்


மாண்டரின் வாத்து எனப்படும் வாத்துக்கள் பல வர்ணங்களில் பளபளவென்று பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இந்த அழகு வாத்துக்கள் சீனா,



ஜப்பான ஆகிய நாடுகளில் வசிக்கின்றன. இவை மரங்களில் கூடுகட்டி வாழும். தட்டையான கால்களால் எப்படி மரத்தில் ஏறமுடியும் என்று ஆச்சரியமாக இருக்கிறதா? இந்த மாண்டரின் வாத்துக்களின் கால் நகங்கள் மிகவும் வலிமையாக இருப்பதால், நகங்களால் மரக்கிளைகளை இறுகப்பற்றிக்கொள்ளும். (படத்தைப் பாருங்கள்).

இந்த வாத்துக்கள் முட்டையிட்டவுடன், ஆண் வாத்துக்களும் முட்டைகளின் அருகிலேயே இருந்து குஞ்சு பொரிக்கும்வரை பெண் வாத்திற்கு உதவி செய்யும். கணவன்-மனைவியிடம் காட்டும் அன்பைப் பார்த்துச் சீனர்கள் சந்தோசமான மணவாழ்க்கைக்கு அடையாளமாக இந்த வாத்துக்களைக் கருதுகின்றனர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.11.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 116
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 113

பரிசுக்குரியவர்:
ரகுராஜா பவானந்
இந்துக்கல்லூரி கொழும்பு–4

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஆர். தீபிகா கோபிகாந், நிவேதா ஆங்கிலக்கல்லூரி, நாமக்கல், இந்தியா. | நா.பிரேந்திரா, மட்/ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், மண்டூர். |
| அ.த.முகம்மட் றயீஸ், மருதமுனை ஸம்ஸம் மத்திய கல்லூரி, கல்முனை. | செல்வன். எம்.ஐ. முகம்மட் முனீஸ், புஹாரி வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை. |
| அ.அ. முஹம்மத் அஸாம் ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | ஜே. அன்ரன் சுரேஷ் கடுமையான் குளம் வீதி, புத்தளம். |
| எஸ். முரளிதாஸ், இராமகிருஷ்ணமிஷன் மகாவித்தியாலம், அக்கரைப்பற்று–07. | செல்வன். பீ. சுரேன், க/கதிரேஷன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி. |
| நஸீர் பாத்திமா நதா, அல்–ஹிலால் மகா வித்தியாலயம் முதூர்–1. | செல்வி. ஜியோலின் ஜோன்சன், கிளரன்டன் எஸ்டேட், நானுஓயா. |

## விடுகதைகளும் விடைகளும்

1. கிட்டக் கிட்டத் தெரிகிறது, எட்ட எட்டப் போகிறது. அது என்ன?
2. வெட்டலாம், கட்டலாம், கொண்டு வர இயலாது. அது என்ன?
3. கோடி கோடி வெள்ளிப் பணம், ஓடி விடுகிறது காலைப் பயணம். அது என்ன?
4. இருந்த இடத்தை விட்டு நகராமல் தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறது. அது என்ன?
5. கூட்டினாலும், பெருக்கினாலும் ஒன்றே வரும். அது என்ன?
6. இணை பிரியமாட்டார்கள் நண்பர்களல்ல, ஒன்று சேர மாட்டார்கள் பகைவருமல்ல. அது என்ன?
7. இரவில் சுமந்திடுவான்; பகலில் சுருண்டிடுவான். அவன் யார்?
8. முகத்திலே மூக்கில்லாமல், கையிலே மூக்குடையவன். அவன் யார்?

விடைகள்.

1. வானம் 2. வரம்பு. 3. நட்சத்திரங்கள் 4. வேலி 5. குப்பை. 6. தண்டவாளம் 7. பாய் 8. யானை

தொகுப்பு இரா.நிர்சன், இறக்குவானை.

1. முத்துக் குகைக்குள் மூன்று பேர் நுழைந்தனர். இரத்தம் வடிய இறந்தனர். அவை என்ன?
2. வித்தகன் கண்ட மெத்தப்பறவை எத்தனையோ இடமெல்லாம் சென்று வரும் பறவை. அது என்ன?
3. உரித்த தோழன் ஊரெல்லாம் சுற்றுவான். அவன் யார்?
4. சிவத்தப்பையில் சில்லறைக் காசு. அது என்ன?
5. காட்டிலே பச்சை, கடையிலே சிவப்பு, வீட்டிலே கறுப்பு. அது என்ன?
6. வெள்ளை மனிதனுக்கு சிவப்புக் கோட்டு. அது என்ன?
7. ஒரு தட்டில் ஆயிரம் பாம்புகள். அது என்ன?
8. செம்பு நிறைய நீர். அது என்ன?
9. ஓசி நடை வீசி வரும். அது என்ன

விடைகள்

1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு. 2. ஹெலிக்கொப்டர். 3. தேங்காய் 4. செத்தல்மிளகாய் 5. விறகு 6. ரம்புட்டான் 7. இடியப்பம் 8. இளநீர் 9. காற்று

## விலங்குகளில் அதிசயங்கள்

1. பல் அற்ற பிராணி – தேவாங்கு
2. நாக்கு அற்ற பிராணி – முதலை
3. பித்தப்பை அற்ற முலையூட்டி – எலி
4. சுவாசப்பை அற்ற பூச்சி – தேனி
5. நீண்ட நாக்கையுடைய பிராணி – பச்சோந்தி
6. செவிப்புலன் அற்ற பிராணி – பாம்பு
7. சிறிய இதயம் கொண்ட பிராணி – சிங்கம்
8. வேகமாக நீந்தும் மீன் – சுறா
9. அதிக நீர் அருந்தும் பறவை – புறா
10. சத்தமிடாத பிராணி – ஒட்டகச்சிவிங்கி

க.ஹரிகராஜ். ஆரையம்பதி.

## சுவையான சங்கதி



இங்கிலாந்து அரச குடும்பத்தினர் பயன்படுத்துவதற்காக முதல் அரண்மனை கார் ஜூன் 11ம் தேதி குதிரை லாயத்துக்குக் கொண்டு வரப்பட்டது. 'டைம்லர் மொடல் ஏ' என்ற இந்தக்கார் இங்கிலாந்து இளவரசர் எட்வேட் பயன்படுத்தக் கொண்டு வரப்பட்டது. அதுவரை ஆடம்பரமான குதிரை வண்டிகளில் தான் ராஜகுடும்பத்தினர் பிரயாணம் செய்வர். 'பல ஆண்டுகளாக அரைண்மனைக் குதிரைகளைப் பொறுப்பாக கவனித்து வந்தவர்கள் யாரும் கார் வந்தவும் தங்கள்தொழில் பாதிக்குமே என்று எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை,' என ஒரு பத்திரிகை அப்போது செய்தி வெளியிட்டது.

குதிரை சாரட்டுகளைத் தயாரிக்கும் ஒருவர் கார் கூண்டுகளை வடிவமைப்பாளராக மாறினார். ஒரு முறை, கவனக் குறைவாகக் கார் ஓட்டுனருக்குக் குதிரை ஓட்டிக்குத் தேவைப்படும் சேணத்தைக் காரில் பொருத்தினார்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

**"சரி"** என்றான் செல்வம்.

"எதுக்கும் ஜாக்கிரதைக்கு மடியில ஒரு கத்தி வச்சிக்க. நான் புறப்படறேன். நாளைக்கு வர்றேன். காரை சர்வீஸ் சென்டர்ல நிறுத்திட்டு ஆட்டோல வருவேன்."

சுபா புறப்பட்டு காரில் தன் உத்சவ் ஹோட்டல் வந்தான்.

ரிசப்ஷன் அருகில் எஸ்.டி.டி கால்களுக்காக அமைக்கப்பட்டிருந்த பூத்துக்குள் அனுமதி பெற்று செல்வதற்கு முன் பம்பாய் என்று சொல்லி கிஷன்சந்தின் வீட்டு எண்ணைச் சொன்னான். குறித்துக் கொண்ட பெண் பூத்துக்குள் போகச் சொன்னதும்,வந்து கதவைச் சாத்திக் கொண்டு, போனில் மணியடித்ததும் எடுத்து,

"யாரு,கிஷன்சந்தா பேசறது?"

"ஆமாம்,. நீங்க யாரு?"

"சிங்கந்தர்ன்னு பேரு. பெங்களூர் ராஜன் நீங்க சொன்ன வேலையை என்கிட்டே ஒப்படைச்சிருக்கார்."

"என்ன ஆச்சி?"

"சக்ஸஸ். என் கைவசம் வந்தாச்சி. காலைல பேப்பர் பார்த்து வேணும்னா உறுதி செஞ்சுக்கங்க. ஆனா ரேட் அஞ்சு லகரம் ஆகும். சம்மதமா?"

""நான் பேசினது ரெண்டு தான்."

"உண்மை. இப்ப அஞ்சுக்கும் மேல வேற பார்ட்டி கேக்குதே."

"இது முறை இல்லை!"

"இல்லைதான். இப்ப கேள்வி வேணுமா, வேணாமா?"

"எப்ப ஒப்படைப்பே?"

"நீங்க சம்மதிச்சதும் புறப்பட வேண்டியது தான்."

"நான் இன்னொரு பார்ட்டியை கேட்டுதான் முடிவு செய்யணும்."

"தாராளமா. நாளைக்கு சொல்லுங்க போதும். ஹோட்டல் உத்சவ்ல ரூம் நம்பர் 417ல இருக்கேன். போன் நம்பர் குறிச்சிக்கங்க. கூப்புடுங்க." என்று எண் சொல்லி வைத்தான்.

வரவேற்பாளினியிடம் நன்றி சொல்லி அறைக்கு வந்து,வாங்கி வைத்திருந்த விஸ்கி அருந்தி விட்டுக் கட்டிலில் படுத்து உறங்கிப் போனான் சுபா.

**கா**லை எட்டு மணிக்கு அறைக்கதவு தட்டப்பட்டபோது ஆனி குளித்துக் கொண்டிருந்தாள். பார்க்கர் ஸ்மித் ஷேவ் செய்து கொண்டிருந்தார். பாதியில் நிறுத்தி விட்டு வந்து கதவைத் திறந்து, "குட்மோனிங் மிஸ்டர் கண்ணபிரான்" என்றார்.

"குட்மோனிங் எல்லாம் கிடக்கட்டும். நான் சூரனாக்கும்னு அமெரிக்காவிலேர்ந்து புறப்பட்டு வந்தியே.... உனக்கு முன்னாடி எவனோ முந்திக்கிட்டான். நீ வந்ததுக்கு கும்பகோணம், சிதம்பரம், பழனின்னு கோயில் எல்லாம் சுத்திட்டு ஊர் போய்ச் சேரு."

"வாட்?"

"டேய் , மார்டின், வாடா சீக்கிரம். இவனுக்குச் சொல்லு, புரியற மாதிரி."

மார்டின் தன் கையில் வைத்திருந்த தமிழ்ப் பேப்பரை விரித்து ஒரு செய்தியைக் காட்டி,"மிஸ்டர் பார்க்கர், நேற்று நிகழ்ச்சி முடிந்ததும் சரவண குமாருக்கு மயக்கம் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள் அல்லவா? அதெல்லாம் நாடகம். அப்படி நாடகமாடி சாமர்த்தியமாக யாரோ இருவர் சரவணகுமாரைக் கடத்திச் சென்றுள்ளனர்."

"ஜீஸஸ்!" என்ற பார்க்கர் ஸ்மித், "ஆங்கிலப் பேப்பரிலும் வந்துள்ளதா?" என்று கேட்டு டீப்பாய் மேலிருந்த இன்னும் பிரிக்கப்படாத ஆங்கிலப் பேப்பரை எடுத்து அவசரமாகப் புரட்டினான்.

"இருப்பா. பதறாதே. இப்ப இவன் சொன்னதையேதான் இங்கிலீஷ்ல போட்டிருப்பான். ஆமாம். ஆனி எங்கே."

"குளிக்கிறாள்."

"ஆனி! துண்டு ஏதாச்சும் வேணுமா?" என்றார் கண்ணபிரான் பாத்ரூம் திசையில். பார்க்கர் ஸ்மித் ஆறாம் பக்கத்தில் அந்த செய்தியைத் தேடிப் பிடித்துப் படித்து, "நோ. அதை விடப் போவதில்லை நான். பார்க்கர் ஸ்மித் ஏமாற மாட்டான்."

"போலீசே நாயெல்லாம் கொண்டாந்து வச்சு தினறுது. நீ என்னய்யா பண்ண முடியும்? நீ சொன்னியேன்னு டூப்ளிகேட் ஐடெண்டிஃபிகேஷன் சர்டிபிக்கேட் எல்லாம் தயாரிச்சி வச்சாச்சி. கணேசன்ற பேர்ல சரவணகுமாரோட போட்டோ ஒட்டி.. இந்த செட்டப்புல பாஸ்போர்ட், விசா, டிக்கெட் எல்லாம் ஏற்பாடு செய்யச் சொன்னே. இப்ப அதை ட்ராப் செஞ்சிட வேண்டியது தானா?"




"இல்லை. கூடாது. எங்கள் பயணத்திற்கு ஏழு நாட்கள் இருக்கின்றன. அதற்குள் அந்தப் பொடியனை என் கைவசப்படுத்தி விடுவேன். நான் சொன்னபடி எல்லாவற்றையும் தயார் செய்து விடுங்கள்"

"என்னடா மார்டின் இவன் கிறுக்குத்தனமா பேசிட்டிருக்கான். பையன் எங்கே இருக்கான்னே தெரியல. இவன் பாஸ்போர்ட் ஏற்பாடு செய்யிங்கிறானே..."

"நீங்கள் காட்டின தமிழ் பேப்பரிலும் சரி, இந்த ஆங்கிலப் பேப்பரிலும் சரி, சரவணகுமாரின் புகைப்படத்தோடு செய்தி வரவில்லை. வெறும் செய்தி மட்டும் வந்திருப்பது எனக்குச் சாதகம். மிஸ்டர் கண்ணபிரான், நீங்கள் போய் உடனடியாக ஏற்பாடுகளை செய்யுங்கள். மார்டின் இருக்கட்டும். நான் யார் என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன்."

"சரி, சரி. நீ என்னத்தான் செய்றே, பார்த்துடலாம். என்னைத் துரத்தாதே. கொஞ்சம் இருந்து குளிச்சிட்டு வர்ற ஆனியை ஒரு பார்வை பார்த்துட்டுப் போயிடறேன். விசாரிச்சுப் பார்த்தியா மார்டின்?"

"எங்க பாசுக்கு உன்னை ரொம்ப பிடிச்சுப் போச்சுன்னு சொல்லி வச்சிருக்கேன் சார்."

"அப்ப சரி. இன்னும் ஒரு வாரம் இருக்கே...."

பாத்ரூமிலிருந்து ஆனி ஒரு முழு கவுனில் வெளிப்பட்டு, தலை நனையாமல் குளிக்கக் கட்டியிருந்த ரப்பர் தொப்பியைக் கழற்ற.... "ச்சே! எங்க பொண்ணு மாதிரி துண்டு கட்டிக்கிட்டு வருவேன்னு நினைச்சேன்."

"வாட்," என்றாள்.

"பார்க்கறப்பல்லாம் என்னை வாட்டிக்கிட்டிருக்கே. ஊருக்குப் போறதுக்கு முத நான் வச்சிக்கறேன் உன்னை."

"வாட்?"

"அறை சௌகரியமா இருக்கிறதா என்று கேட்கிறார்" என்றான் மார்டின்.

"மிக சௌகரியம்."

கண்ணபிரான் போனதும் மார்டின் அமர்ந்து, "என்ன செய்யப் போகிறீர்கள்?"

என்றான். அவனைக் கையமர்த்தின பார்க்கர் ஸ்மித், செய்தித் தாளில் செய்தியை பேனாவில் வட்டமிட்டு ஆனியிடம் படிக்கத் தந்துவிட்டு மெண்டால் சிகரட் பற்றவைத்துக்கொண்டு காட்டமாக யோசித்தார்.

"மார்டின், போலீஸ் அறியாத ஒரு தகவல் என்னிடம் உள்ளது."

"என்ன சார்?"

"இந்தக் கடத்தலில் சம்பந்தப்பட்டது இருவர். ஒருவர் டாக்டர் வேடத்தில், இன்னொருவர் புகைப்படக்காரரர் வேடத்தில் இதில் புகைப்படக்காரரர் என் அருகில் ஆரம்பத்திலிருந்து அமர்ந்திருந்தார்."

"அதனால்?"

"அவர் முகம் என் மனதில் தெளிவாக இருக்கிறது. கடந்து சென்ற காரில் மறுபடி அந்த முகத்தைப் பார்த்தேன்."

"சரி உங்களைப்போல எத்தனையோ பேர்கள் கவனித்திருக்கலாம். அதை வைத்து என்ன செய்ய முடியும்?"

"போதாதுதான். ஆனால் அவன் முட்டாள்தனமாக ஒரு காரியம் செய்ததை நான் கவனித்தேன். அதுதான் இப்போது உதவப் போகிறது நமக்கு."

"அப்படி என்ன செய்தான்?"

"நிகழ்ச்சி துவங்கும் முன்பு தன்னை யாரும் கவனித்து விடுவதைத் தவிர்க்க பேப்பர் படிக்கிற பாவனையில் இருந்தான்."

"இதில் என்ன முட்டாள்தனம் இருக்கிறது?"

"முட்டாள்தனம் அவன் செயலில் இல்லை. அந்த செய்தித்தாளில் இருந்தது."

"புரியவில்லை."

"அது இந்தியன் எக்ஸ்பிரஸ் பேப்பர். தலைப்பில் 'GOOD MORNING' என்று பச்சை நிற ரப்பர் ஸ்டாம்ப் குத்தி, ஓரத்தில் 417 என்று பால்பாயிண்ட் பேனாவால் வட்டமிடப்பட்டிருந்தது. இன்னும் புரிய வில்லை? இதோ பார், பெரிய ஹோட்டல்களில் அறைக்கு தினம் செய்தித்தாள் போடுவது வழக்கம். ஆகவே, அவன் ஏதோ உயர்தர ஹோட்டலின் 417ஆவது அறையில் தங்கினவன், அல்லது தங்கியிருப்பவன். இதை வைத்துக் கொண்டு அவனை நெருங்கியாக வேண்டும்."

ஆனி உற்சாகமாக சிடி கெய்ட் புத்தகத்தை எடுத்து வந்து விரித்துக் கொள்ள....

"ஆனி, ஒவ்வொரு ஹோட்டல் எண்ணாக அழை; உங்கள் ஹோட்டலில் 417 வது அறையில் உள்ள பீட்டருடன் பேச வேண்டும் என்று சொல், எங்கள் ஹோட்டலில் 417 என்று அறையே இல்லை என்பார்கள். அல்லது பீட்டர் என்று யாரும் அங்கே இல்லை என்பார்கள். இந்த பதில் சொல்கிற ஹோட்டல்களை முதலில் பிரித்துக் கொள்ளலாம்."

ஆனி டயல் செய்ய ஆரம்பித்தாள்.

**ஜீ**வானந்தம் இரவு முழுக்க சரியான தூக்கம் இல்லாமல் இன்ஸ்பெக்டர் நியூட்டனின் கேள்விகளுக்கு பதில் சொல்லி, என்னென்னமோ கற்பனை செய்து பயந்து கொண்டு, நள்ளிரவில் போலீஸ் நபர்கள் விலகினதும், மனைவிக்கு ஆறுதல் சொல்லி, புரண்டு புரண்டு எழுந்து, விடிந்ததும் வாசலுக்கு வந்த போது....

போர்டிகோவில் நின்றிருந்த காரின் முன் கண்ணாடி மேல் ஒரு பெரிய காகிதம் ஒட்டப்பட்டிருக்க.... கிட்டே வந்து பார்த்த போது எழுதியிருந்தது தெரிந்தது.

'உங்கள் காரின் டேப்ரெக்கார்டரை PLAY செய்யவும்.' காரின் கதவு திறந்திருந்தது 'மை காட்! யார்? எப்போது வந்தான், எப்படித் திறந்தான்?'

அவசரமாக உள்ளே அமர்ந்து ப்ளே செய்ய.... உத்தரவிடும் தொனியில் ஆண் குரல்!

"காலை வணக்கம். அஞ்சு லட்சம் ரெடியா? போலீஸ் பேச்சை கேட்டு பையனைத் தலைமுழுகி திவசம் பண்ணப் போறீங்களா? இல்லை என் பேச்சைக் கேட்டு பையனை காப்பாத்திக்கப் போறீங்களா? சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். எப்படி வேணும்னாலும் நடந்துக்கங்க. ஜீவானந்தம் சார், நூறுரூபா பழைய கட்டா ஒரு அம்பது கட்டு எடுத்து தாசி தட்டி ஒரு பார்சல் பண்ணிக்கங்க. ராத்திரி 8 மணிக்கு உங்க கார்ல நீங்க மட்டும் புறப்படுங்க. பார்சலை முன் சீட்ல திடீர்னு எடுத்துக் கொடுக்க வாகா வச்சிக்கங்க. எங்கே வேணாலும் போங்க, நிறுத்துங்க. போங்க-உங்க இஷ்டப்படி நடந்துக்கங்க. போலீஸ் தொடரலைங்கறதை நிச்சயப் படுத்திக்கிட்டதும் என் ஆளு உங்க கிட்டே வந்து சரவணன் சௌக்கியம்னு சொல்வான். அவன்கிட்டே பார்சலை கொடுத்துடுங்க. வீட்டை விட்டு புறப்பட வேண்டிய நேரம் ராத்திரி எட்டு."

டேப்பை அணைத்த ஜீவானந்தம் இந்த சமாச்சாரத்தை போலீசில் தெரிவிப்பதில்லை என்று தீர்மானித்தார். இறங்கி காரின் கண்ணாடியில் ஒட்டியிருந்த காகிதத்தைப் பிய்த்தார்.

பங்களாவுக்குள் வந்து மனைவியிடம் "இந்திரா, கவலைப்படாதே. போலீசை நம்பப் போறதில்லை நான். சரவணகுமாரை காப்பாத்த நானே ஏற்பாடு செஞ்சிக்கிறேன்" என்றார்.

**பு**ரண்டு படுத்த சுபா போனை சோம்பலுடன் எடுத்தான்.

"ஹலோ" என்றான் கொட்டாவி நடுவில்.

"பெங்களூர்லேர்ந்து ராஜன் பேசறேன்."

"நமஸ்தே சார்."

"கிஷன்சந்த் போன் செஞ்சார். என்ன ஆச்சி உனக்கு? ஏன் இப்படி திடீர் பல்டி?"

"சார் சந்தர்ப்பம் வர்றப்போ சம்பாதிக்கிறதில என்ன தப்பு? கவலைப்படாதீங்க அஞ்சி கேட்டிருக்கேன். ஒத்துக்கிட்டா பாதி உங்களுக்கு தருவேன். அதெல்லாம் நியாயமா நடந்துக்குவேன்."

"அது சரி சுபா. ஏன் இப்படி பேராசை? பையன் எங்கே?"

"பத்திரமா இருக்கான். நீங்க கிஷன் சந்துக்கிட்ட பேசி, நம்மாளு பிடிவாதமா இருக்கான்னு சொல்லி ஒத்துக்க வைங்க."

"எக்ஸ்ட்ராவா பணம் வருதுன்னா சந்தோஷம் தான் சுபா. ஆனா பேச்சு மாறக்கூடாதுன்னு பார்த்தேன். நீ பிடிவாதமா இருக்கிறப்போ நான் என்ன செய்ய முடியும். சரி, அப்படியே சொல்லிடறேன்."

"சொல்லுங்க. கிஷன்சந்த்கிட்டேர்ந்து ஒப்புதல் வந்ததும் நான் புறப்படுவேன்."

"என்னமோ செய், ஜாக்கிரதையா நடந்துக்க."

சுபா சிரித்து விட்டு எழுந்து, பல் துலக்கி,செய்தித்தாளில் தங்கள் சாகஸ செய்தி படித்துவிட்டு குளித்துப் புறப்பட்டான்.

ரிஷப்ஷனில், "நான் ஒரு மணி நேரத்தில் திரும்பிவிடுவேன். அதற்குள் யாரிடமிருந்து போன் வந்தாலும் ஒரு மணி நேரம் கழித்து தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள்" என்று விட்டு பார்க்கிங் பகுதி வந்து காரை எடுத்தான்.

ஒரு சர்வீஸ் சென்டரில் நிறுத்தி வாட்டர் சர்வீஸ் செய்யச் சொல்லிவிட்டு டாக்ஸி பிடித்து செல்வத்தின் வீட்டிற்கு வந்து சங்கேத முறையில் கதவு தட்டினான்.

செல்வம் திறந்து, "வாடா, அந்தப் பயலை சமாளிக்கிறதுக்குள்ளே போதும் போதும்னு இருக்கு. ரூமுக்குள்ளேயே பெட்பான் வச்சி, கத்தியை காமிச்சி செய்யச் சொல்லி, ரெண்டு பன்னு, டீ கொடுத்து, தூக்க மாத்திரையும் கொடுத்து தூங்க வச்சிட்டேன். முன்போல கண்ணு, காலு, கை, வாய் எல்லாம் கட்டிட்டேன்." என்றான்.,

சுபா சாவி வாங்கி அறையைத் திறந்து கட்டிலில் கட்டுக்களுடன் சுருண்டிருக்கும் சரவணகுமாரைப் பார்த்து விட்டு, "வெரிகுட்" என்று பூட்டிவிட்டு, "இன்னைக்கு ராத்திரி பத்து மணிக்கு மேல அநேகமா பையனுக்கு பம்பாய் ட்ரிப் அமையலாம்."

"சரி என்ன பண்ணி வச்சிருக்கே?"

"அதிகாலை மூணு மணிக்கு புறப்பட்டு ஜீவானந்தம் கார்ல மேசேஜ் கேசட் செருகி, செய்தி ஒட்டிட்டு வந்து படுத்து தூங்கிட்டேன். இப்பத்தான் எழுந்தேன். ராஜன் போன் செஞ்சார். கிஷன்சந்துக்கு சொல்றேன்னாரு. ராத்திரி எட்டு மணிக்கு ஜீவானந்தத்தை பணத்தோட வரச் சொல்லியிருக்கேன். நீ இவனை பத்திரமா பார்த்துக்க. நான் ஹோட்டல் போறேன். எந்த நிமிஷமும் கிஷன்சந்தோட போன் காலை எதிர்பார்க்கிறேன். வரட்டுமா?"

சுபா வெளியேறி முக்கிய சாலையை நோக்கி நடந்தான்.

## பட்டுக்கோட்டை பிரபாகர்



**க**ண்ணை மறைக்கும்படி விழுந்த முடிக்கற்றையை ஒதுக்கிக் கொண்டு சொன்னாள் ஆனி, "மொத்தம் ஏழு ஹோட்டல்களில் 417 என்கிற எண்ணில் அறை இருக்கிறது."

பார்க்கர் ஸ்மித் ஷேவிங்கை முடித்துத் திரும்பி, "மார்டின், இப்போதே நாம் புறப்படுகிறோம். ஆனி குறித்துள்ள ஏழு ஹோட்டல்களுக்கும் போகிறோம். அந்த 'குட்மானிங்' என்னும் பச்சை நிற ரப்பர் ஸ்டாம்ப் செய்தித்தாள்களில் குத்துகிற பழக்கம் எந்த ஹோட்டலில் என்று பார்க்கிறோம். அதிலும் அறை எண்ணை பால்பாயிண்ட் பேனாவால் எழுதி வட்டமிட்டிருக்கும் முறையை கடைப் பிடிப்பது எந்த ஹோட்டல் என்றும் பார்க்க வேண்டும். இந்த இரண்டு பாயிண்டுகளை வைத்து ஹோட்டலைக் கண்டுபிடித்து விடலாம் என்று தான் நினைக்கிறேன்" என்றார்.

"நிச்சயம் முடியும்" என்றான் மார்டின்.

"ஆனி நீ இங்கேயே இரு. நாங்கள் போய் வருகிறோம்" என்ற பார்க்கர் ஸ்மித் ஒரு சிறிய சூட்கேஸ் எடுத்துக் கொண்டார், "இதில் சில உபகரணங்கள் வைத்திருக்கிறேன்" என்றார். நேராய் ஆனி கொடுத்த லிஸ்டில் முதல் ஹோட்டல் வந்தார்கள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். மங்களராஜன்
வயது: 20
முகவரி: 15, புளியடி ஒழுங்கை, 3ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எஸ். நிஸார்தீன்
வயது: 18
முகவரி: 7 ஜே, பிரதான வீதி, கெக்கிராவை.
பொழுது போக்கு: புத்தகம் வாசித்தல், ஓவியம் வரைதல்.



பெயர்: பி. ராமச்சந்திரன்
வயது: 30
முகவரி: 181, லெயாட்ஸ் புரோட்வே, கொழும்பு-14.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: என். அகிலன்
வயது: 25
முகவரி: P.O.BOX-23936, DUBAI, U.A.E.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: எம். சுக்ரின்
வயது: 25
முகவரி: HERA GENERAL HOSPITAL, I.D.G. CO. LTD, MAKKAH, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, பேனாநட்பு.



பெயர்: எம். பாத்திமா
முகவரி: 505/8, பள்ளஞ்சேனை வீதி, தலுபொத்த, நீர்கொழும்பு.
பொழுது போக்கு: வழமையானவை

பெயர்: எம். அமானுல்லாஹ்
வயது: 22
முகவரி: 80. அளுத்கம, மனன்வத்தை, மாத்தளை.
பொழுது போக்கு: டி.வி. பத்திரிகை.

பெயர்: ஏ. பெர்னாண்டோ
வயது: 17
முகவரி: மன்ராசி எஸ்டேட், ஆக்கரப்பத்தனை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். ஜவ்பர்
வயது: 22
முகவரி: 29, பிரதான வீதி, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, டி.வி.

பெயர்: எஸ். அருள் சேகரன்
வயது: 36
முகவரி: KORNBAKKEN 11 2 TV, 4700, NAESTVED, DENMARK.
பொழுது போக்கு: முத்திரை, நாணயங்கள் சேகரித்தல்.

பெயர்: எம். நியாஸ்
வயது: 19
முகவரி: 66, பிரதான வீதி, பிபில.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எஸ். சிவராஜா
வயது: 25
முகவரி: 42,கொழும்பு வீதி, கிட்டங்கி, காலி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



படிப்பகம்

# மக்சீம் கார்க்கி

# தாய்

"உங்களிடம் ஏதாவது பணம் காசு இருக்கிறதா?"

என்று கண்களைத் தாழ்த்திக்கொண்டு கேட்டான் அவன்.

"இல்லை"

உடனே அவன் தன் பைக்குள் கையைவிட்டு, தன் மணிப்பர்சை எடுத்து, அதைத் திறந்து பணத்தை எடுத்து நீட்டினான்.

"இதோ இதைத் தயைசெய்து பெற்றுக்கொள்ளுங்கள்" என்றான்.

தாய்க்குத் தன்னையறியாமலேயே இளஞ் சிரிப்பு வந்தது. அவள் தலையை அசைத்துவிட்டுச் சொன்னாள்;

"உங்களிடம் எல்லாமே புதுமாதிரியாகத்தான் தோன்றுகிறது. பணம் கூட உங்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. சிலர் அந்தப் பணத்துக்காகத் தங்கள் ஆத்மாக்களையே விற்றுவிடுகிறார்கள்; ஆனால் உங்களுக்கோ அது ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே நீங்கள் பணத்தை வைத்திருக்க ஒப்புவது போலத் தோன்றுகிறது."

நிகலாய் மெதுவாகச் சிரித்தான்.

"பணமா, அது ஒரு நச்சுப்பிடித்த பொருள். வாங்குவதானாலும் சரி, கொடுப்பதானாலும் சரி, மனத்துக்கே பிடிப்பதில்லை."

அவன் அவள் கையைப்பற்றி அதை லேசாகப் பிசைந்தான். பிறகு மீண்டும் சொன்னான்:

"சீக்கிரம் கிளம்பி விடுங்கள்!"

பிறகு அவன் வழக்கம் போலவே அமைதியாகச் சென்றான்.

அவன் செல்வதை அவள் வாசல் வரை சென்று பார்த்தாள். அப்போது தனக்குள் நினைத்துக் கொண்டாள்;

"எவ்வளவு அன்பான மனம்! ஆனால் அவன் எனக்காகப் பரிதாபப்படவே இல்லை."

இந்த எண்ணம் அவளுக்குப் பிடிக்கவில்லையா, அல்லது அதிசயத்தைத் தந்ததா? என்பதை அவளால் உணரக் கூட முடியவில்லை.

□□ □□ □□

அவன் வந்து சென்ற நாலாவது நாளன்று அவள் அவனுடைய வீட்டுக்குக் குடிபோனாள். அவளது இரண்டு பெட்டிகளோடு, அவள் ஏறிச்சென்ற வண்டி அந்தத் தொழிலாளர் குடியிருப்பை விட்டு வெளி வந்து, ஊருக்குப் புறம்பேயுள்ள வெம்பரப்புக்கு வந்து சேர்ந்தது. உடனே அவள் பின்னால் திரும்பிப் பார்த்தாள். எங்கே இருள் படிந்த, இடையறாத துன்பம் கலந்த வாழ்வை அவள் அனுபவித்தாளோ, எங்கே புதிய இன்பங்களும் துன்பங்களும் நிறைந்த வாழ்வுக்கு ஆளாகி, நாட்களை அவள் மின்னல் வேகத்தில் கழித்தாளோ அங்கிருந்து, அந்த இடத்தைவிட்டு நிரந்தரமாக, ஒரேயடியாகப் பிரிந்து விலகிச் செல்வது போன்று அவள் திடீரென் உணர்ந்தாள்.

கரி படர்ந்த பூமியின்மேல் ஆகாயத்தை நோக்கி புகை போக்கிகளை உயர நீட்டிக் கொண்டு கருஞ்சிவப்புச் சிலந்தியைப் போல நின்றது தொழிற்சாலை. அதைச் சுற்றிலும் தொழிலாளர்களின் மாடியற்ற ஒற்றைத்தள வீடுகள் மொய்த்துச் சூழ்ந்திருந்தன. அவை சிறிதும் பெரிதுமாக நிறம் வெளிறிக் குழம்பிப் போய், சேற்றுப் பிரதேசத்தை அடுத்து நின்றன; அந்த வீடுகள் தமது ஒளியற்ற சிறு சிறு ஜன்னல்கள் மூலம் அடுத்தடுத்த வீடுகளைப் பரிதாபகரமாகப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அந்த வீடுகளுக்கு மேலாக, தொழிற்சாலையைப் போலவே கருஞ்சிவப்பாகத் தோன்றும் தேவாலயம் உயர்ந்து நின்றது. அதனுடைய ஊசிக் கோபுரம் புகை போக்கிகளின் உயரத்தைவிட குட்டையாயிருந்தது.


பெருமூச்செறிந்து கொண்டே, தனது கழுத்தை இறுக்கி, திணறச் செய்வது போலத் தோன்றிய தனது ரவிக்கையின் காலரைத் தளர்த்திவிட்டுக் கொண்டாள் தாய்.

"போ இப்படி!" என்று முனகிக் கொண்டே வண்டிக்காரன் குதிரையின் கடிவாளத்தைப் பற்றி இழுத்தான். அவன் ஒரு கோணல்கால் மனிதன், குட்டையானவன், வயதை நிதானிக்க முடியாத தோற்றமுடையவன். அவனது தலையிலும் முகத்திலும் வெளிறிய மயிர்கள் சில காணப்பட்டன. கண்களில் வர்ணஜாலம் எதுவுமே இல்லை. அவன் வண்டிக்குப் பக்கமாக நடந்துவரும்போது அசைந்து அசைந்து நடந்தான். வலப்புறம் போவதோ, இடப்புறம் போவதோ, அவனுக்கு எல்லாம் ஒன்றுதான் என்று தெளிவாகத் தெரிந்தது. "சீக்கிரம் போ" என்று உணர்ச்சியற்ற குரலில் குதிரையை விரட்டிக் கொண்டே, தனது கோணல் கால்களைத் தூக்கித் தூக்கிவைத்து நடந்தான்; அவனது பூட்சுகளில் சேறு ஒட்டி அப்பிக் காய்ந்து போயிருந்தது. தாய் சுற்று முற்றும் பார்த்தாள். அவளது இதயத்தைப் போலவே வயல் வெளிகள் அனைத்தும் வெறிச்சோடிக் கிடந்தன.

கொதிக்கும் மணல் வெளியில், குதிரை தலையை ஆட்டிக் கொண்டு கால்களை கனமாக ஊன்றி நடந்தது. மணல் சரசரத்தது; அந்த லொடக்கு வண்டி கிரீச்சிட்டது. வண்டிச் சக்கரத்தால் ஏற்படும் ஒலி புழுதியுடன் பின் தங்கிவிட்டது......

நிகலாய் இவானவிச் நகரின் ஒரு கோடியில் ஒரு அமைதி நிறைந்த தெருவில் குடியிருந்தான். பழங்காலக் கட்டிடமான ஒரு இரண்டடுக்கு மாடி அருகில், பச்சை வர்ணம் அடிக்கப்பெற்று சிறு பகுதியில் அவனது வாசஸ்தலம் இருந்தது. அந்தப் பகுதிக்கு முன்னால் ஒரு சிறு தோட்டம் இருந்தது. அந்த தோட்டத்திலுள்ள பன்னீர்ப் பூ மரக்கிளைகளும், வேல மரக் கிளைகளும் வெள்ளிய இலைகள் செறிந்த இளம் பாப்ளார் மரக்கிளைகளும் அந்த பகுதியிலிருந்த மூன்று அறைகளின் ஜன்னல்களிலேயும் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. அறைகளுக்குள்ளே எல்லாம் சுத்தமாகவும் அமைதியாகவும் இருந்தன. மோன நிழல்கள் தரைமீது நடுநடுங்கும் கோலங்களைத் தீட்டிக்கொண்டு இருந்தன. சுவர் ஓரங்களில் புத்தக அலுமாரிகள் வரிசையாக இருந்தன; அவற்றுக்கு மேல், சிந்தனை வயப்பட்டவர்கள் மாதிரித் தோன்றும் சிலரின் உருவப்படங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

"இந்த இடம் உங்களுக்கு வசதியானது தானே?" என்று கேட்டுக்கொண்டே, நிகலாய் தாயை ஒரு சிறு அறைக்குள் அழைத்துக் கொண்டு சென்றான். அந்த அறையிலுள்ள ஒரு ஜன்னல் தோட்டத்தை நோக்கியிருந்தது: இன்னொரு ஜன்னல் புல் மண்டிக் கிடந்த முற்றத்தை நோக்கி இருந்தது. அந்த அறையின் சுவரோரங்களிலும் புத்தக அலுமாரிகள் இருந்தன.



"நான் சமையல் கட்டிலேயே இருந்து விடுகிறேனே, சமையல் கட்டே வெளிச்சமாகவும் சுத்தமாகவும் நன்றாகவும் இருக்கிறதே...." என்றாள் தாய்.

அவளது வார்த்தைகள் அவனைப் பயமுறுத்துவது போலிருந்தன. அதன்பிறகு அவன் அவளிடம் எப்படியெல்லாமோ சுற்றிவளைத்துப் பேசி, அவளை அந்த அறையில் வசிக்கச் சம்மதிக்கச் செய்த பிறகுதான் அவனது முகம் பிரகாசமடைந்தது.

அந்த மூன்று அறைகளிலுமே ஒரு விசித்திரமான சூழ்நிலை நிரம்பித் தோன்றியது. அங்கு நல்ல காற்றோட்டம் இருந்தது. சுவாசிப்பது இலகுவாய் இருந்தது. எனினும் அந்த அறையில் யாருமே உரத்த குரலில் பேசுவதற்கு தயங்குவார்கள். சுவர்களில் தொங்கிக்கொண்டு குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருக்கும் அந்த சித்திரங்களில் உள்ள மனிதர்களின் அமைதி நிறைந்த சிந்தனையை கலைப்பது அசம்பா விதமானது போலத் தோன்றியது.

"இந்தச் செடிகளுக்கெல்லாம் தண்ணீர் விட வேண்டும்" என்று ஜன்னல்களில் இருந்த பூந்தொட்டிகளின் மண்ணைத் தொட்டுப் பார்த்துவிட்டு சொன்னாள் தாய்.

"ஆமாம்" என்று வீட்டுக்காரன் தனது குற்றத்தை உணருபவன் போலச் சொன்னான். "எனக்கு இவையெல்லாம் ரொம்பப் பிடித்தமானவை. ஆனால், எனக்கு இதற்கெல்லாம் நேரமே இருப்பதில்லை."

தனது விசாலமான அந்த வீட்டில் கூட, நிகலாய் மிகவும் பதனமாகவும் நிதானமாகவும் யாரோ ஒரு அன்னியன் மாதிரி நடமாடித் திரிவதை தாய் கண்டாள். அவன் அந்த அறையிலுள்ள பல பொருள்களையும் குனிந்து உற்றுப்பார்த்தான்; அப்படிப் பார்க்கும் போது தன் வலதுகையின் மெல்லிய விரல்களால் தனது மூக்குக் கண்ணாடியை சரிசெய்து கொண்டும், கண்களை சுருக்கிக் கூர்மையாக்கிக் கொண்டும் தனக்கு அக்கறையுள்ள பொருள்களை பார்த்தார். சில சமயங்களில் அவன் ஒரு சாமனை தன் முகத்தருகே கொண்டுபோய் கண்களால் தொட்டு உணர்வது போலப் பார்த்தான். தாயைப் போலவே அவனும் அந்த அறைக்கு முதன் முதல் வந்திருப்பவன் போலவும், அதனால் அங்குள்ள பொருள்களெல்லாம் அவனுக்கு புதியவனவாக -அவனுக்கு பழக்கமற்றனவாக இருப்பன போலவும் தோன்றியது. இந்த நிலமை தாயின் மன நிலையை தளர்த்தி ஆசுவாசப்படுத்தியது. அவள் நிகலாயைத் தொடர்ந்து அந்த இடத்தை முற்றும் சுற்றிப் பார்த்தாள்; எங்கு என்ன இருக்கிறது என்று கண்டறிந்தாள்; அவனது பழக்க வழக்கங்களை கேட்டறிந்தாள். அவன் ஏதோ ஒரு குற்றவாளியைப் போல் கள்ளக்குரலில் பதில் அளித்தான். அவன் பதில் சொல்லிய பாவனையானது ஒரு காரியத்தை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்யாமல் ஆனால் வேறு மாதிரியாகச் செய்யவும் தெரியாதவன் சொல்வது போலத் தொனித்தது.

அவள் பூஞ் செடிகளுக்குத் தண்ணீர் விட்டாள்; பியானோ வாத்தியத்தின் மீது சிதறிக்கிடந்த இசை அமைப்புத் தாள்களை ஒழுங்காக அடுக்கி வைத்தாள். தேனீர் பாத்திரத்தின் மீது பார்வையை செலுத்திய வாறு பேசினாள்:

"இந்த பாத்திரத்தை விளக்க வேண்டும்."

அவன் அந்த மங்கிப்போன பாத்திரத்தைத் தொட்டுத் தடவிப் பார்த்தான். தன் விரலை முகத்தருகே கொண்டுபோய் கவனித்தான். தாய் இலேசாகச் சிரித்துக் கொண்டாள்.

அன்றிரவு அவள் படுக்கைக்குச் செல்லும் போது அன்றைய தினத்தின் சம்பவங்களை நினைத்துப் பார்த்தாள். தலையைத் தலையணையிலிருந்து உயர்த்தி வியப்போடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள். வேறொருவருடைய வீட்டில் இரவைக் கழிப்பது என்பது அவளது வாழ்க்கையிலேயே இதுதான் முதல் தடவை. எனினும் அவளுக்கு அதனால் எந்தவிதச் சிரம உணர்ச்சியும் தோன்றவில்லை. அவள் நிகலாயைப்பற்றி அக்கறையோடு நினைத்துப்பார்த்தாள். அவனது வாழ்வை முடிந்தவரை மேன்மை உடையதாக்கி, அவனது வாழ்க்கையில் மென்மையும் கதகதப்பும் சேருவதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றும் அவளுக்கு ஒரு உணர்வு தோன்றியது. அவனது லாகவமின்மை வேடிக்கையான சாமர்த்தியமின்மை, மற்ற மனிதர்களிடம் இருந்து மாறுபட்ட அவனது விசித்திர நடத்தை, ஞான ஒளிவீசும்-எனினும் குழந்தை நோக்குக் கொண்ட அவனது பிரகாசமான கண்கள் முதலியன வெல்லாம் அவளது இதயத்தைத் தொட்டு விட்டன. பிறகு அவள் மனம் அவளது மகன்பால் திரும்பியது; மீண்டும் மேதின வைபவத்தின் சம்பவங்கள் அவள் கண்முன் நிழலாடிச் சென்றன. எனினும் அந்தச் சம்பவத்தின் நினைவுச் சித்திரத்தில் இப்போது ஒரு புதிய அர்த்தமும், புதிய குரலும் அவளுக்குத் தொனித்தன. அன்றைய தினத்தைப் போலவே, அந்த தினத்தைப் பற்றிய சோக உணர்ச்சியிலும் ஏதோ ஒரு விசேஷத் தன்மை இருந்தது. என்றாலும் அந்தச் சோக உணர்ச்சி முஷ்டியால் ஓங்கிக் குத்தித் தரையிலே மோதி விழச்செய்யும் உணர்ச்சிபோல் இல்லை. அந்த உணர்ச்சி இதயத்துக்குள் பன்மடங்கு வேதனையோடு துளைத்துத் துருவிப் புகுந்து, கோப உணர்ச்சியை மெதுமெதுவாகத் தூண்டி, முதுகை நிமிர்த்தி நேராக நிற்கச் செய்யும் உணர்ச்சியாக இருந்தது.

"நமது குழந்தைகள் உலகினுள்ளே புகுந்து புறப்பட்டு விட்டார்கள்!" என்று அவள் நினைத்தாள். அப்போது அவள் திறந்துகிடக்கும் ஜன்னலின் வழியே, இலைகளின் சலசலப்போடு கலந்து வரும் தனக்குப் பழக்கமற்ற பட்டணத்து இரைச்சலைக் காது கொடுத்துக் கேட்டாள். அந்தச் சப்தங்கள் எங்கோ தொலைவிலிருந்து மங்கித் தேய்ந்து களைத்துச் சோர்ந்து போய் வந்தன; அந்த அறைக்குள்ளே வரும்போது அந்தச் சப்த அலைகள் அநேகமாகச் செத்துத் தான் ஒலித்தன.

மறுநாள் காலையில் அவள் தேநீர்ப் பாத்திரத்தைத் தேய்த்துத்துலக்கி, தேநீருக்காக வெந்நீர் காய வைத்தாள். அரவமின்றி மேஜையைச் சரி செய்தாள்; பிறகு நிகலாய் எழுந்து வருவதை எதிர் நோக்கிச் சமையலறையில் காத்திருந்தாள். அவன் இருமிக் கொண்டே கதவைத் திறந்தான். ஒரு கையால் தன் மூக்குக் கண்ணாடியை பிடித்துக்கொண்டும் மறு கையால் சட்டைக் காலரைப் பிடித்துக்கொண்டும் அவன் வந்தான். காலை வணக்கம் கூறிக்கொண்ட பிறகு, அவள் தேநீர்ப் பாத்திரத்தை அடுத்த அறைக்குள் கொண்டு போனாள்; அதற்குள் அவன் தரையெல்லாம் தண்ணீரைக் கொட்டி முகம் கை கழுவினான். தனக்குத்தானே முனகிக் கொண்டு, தனது பல் விளக்கும் பிரஷையும் சோப்பையும் கீழே நழுவ விட்டான்.

சாப்பிடும்போது அவன் தாயைப் பார்த்துச் சொன்னான்: "நான் விவசாய இலாகாவில் எனக்குப்பிடிக்காத வேலையொன்றைப் பார்த்து வருகிறேன். நம்முடைய விவசாயிகள் எப்படி நாசமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கிறதுதான் என் வேலை."

ஒரு குற்றப் புன்னகையோடு அவன் மேலும் பேசினான்; "பட்டினிதான் விவசாயிகளை அகாலத்திலேயே கல்லறைக்குள் தள்ளிச் செல்கிறது. அவர்களது குழந்தைகளும் பிறக்கும்போதே சோனி

**50**

யாகப் பிறந்து, இலையுதிர் காலத் தின் ஈசல் பூச்சிகளைப்போல் மாண்டு மடிகின்றன. எங்களுக்கும் இது தெரியும். இந்தக் காரணத்தின் வளர்ச்சியைப் படிப்படியாகக் கவனித்துக்கொண்டு இருப்பதற்கு எங்களுக்குச் சம்பளம் கூட கொடுக்கிறார்கள். ஆனால், இப்படியே இது போய்க்கொண்டிருந்தால்..."

"நீங்கள் ஒரு மாணவரா?" என்று கேட்டாள் தாய்.

"இல்லை நான் ஆசிரியர், என் தந்தை வியாத்காவிலுள்ள ஒரு தொழிற்சாலையில் மானேஜர். ஆனால், நானோ ஆசிரியர் வேலைக்குத்தான் படித்தேன். கிராமத்திலே இருந்தபோது நான் முஜீக்குகளுக்குப் புத்தகங்களை கொடுத்து உதவினேன்; அதன் காரணமாக என்னைச் சிறையில் போட்டார்கள். தண்டனைக்காலம் முடிந்தபிறகு நான் ஒரு புத்தகக் கடையில் விற்பனைக் காரனாக வேலைபார்த்தேன். ஆனால் எனது ஜாக்கிரதைக் குறைவினால் மீண்டும் என்னை சிறையில் போட்டார்கள். கடைசியாக என்னை அர்ஹாங்கெல்சுக்கு நாடு கடத்தி விட்டார்கள். அங்கும் அங்கிருந்த கவர்னரின் வெறுப்புக்கு நான் ஆளானேன். அதன் காரணமாக மீண்டும் என்னை வெண்கடல் கரையிலுள்ள ஒரு சிறு கிராமத்துக்கு நாடு கடத்தினார்கள். அங்கு ஒரு ஐந்துவருச காலம் வாழ்ந்தேன்."

(தொடர்ந்து வரும்)

# வெள்ளைமணல் வேப்பமரம்!

கிளன்னியா அம்ரலி



வேப்பமர உச்சியில் நின்னு பேய் ஒண்ணு ஆடுதுன்னு விளையாடப் போகும் போது சொல்லி வைச்சது.... பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்த அந்த வேப்பமரத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் நினைவுக்கு வரும்.

என்னை ஆசையோடு ஈன்றவளுக்கு மகிழ்ச்சியாக நானும் வளர்ந்து விட்டேன். வளர்ந்தாலும்-

இன்னும் அதே கிளியடித்த-பட்டம் விட்ட சின்னப் பொடியன் கால ஞாபகங்கள்தான்.....

இந்த வேப்ப மரம் "பட்ட மரம்-" அதாவது நான் விட்ட...பட்டம் சிக்குப்பட்ட மரம். 'குடை'யைக் கையில் எடுக்கும் போதெல்லாம்-எங்களூர் எஸ்.எஸ். பாவாவும், கவிஞர் கலைவாதி கலீலும்-ஞாபகம் வந்த மாதிரி....

வேப்ப மரத்தைப் பார்க்கும் போதெல்லாம்-

வேள்ளை மணல் சலீமா டீச்சரின் ஞாபகம் வருகிறது....

கல்லூட்டுக் கவிராயர் ஹலீம்தீன் சேரைக் கண்டுவர-எனது மாமனாருடன் கல்ஹின்னைக்குச் சென்றிருந்தேன்.

ஞாபகம் வரக் கேட்டேன்;

"இங்கே சலீமா'ன்னு ஒரு டீச்சர் படிப்பிச்சாங்களே...? எங்க வீட்டில தான் தங்கி இருந்தாங்க...." "இந்தா நிற்குதே இது அவங்க கொண்டு வந்து தந்த வேப்ப மரம் தான்....!" - என்றார்கள் கவிஞரும் மனைவியும்.

மரத்தைப் பார்த்தேன் வைரமுத்து வின் 'வேப்ப மரம்' ஞாபகம் வந்தது.

எல்லோரும் 'வேப்பிலை' கேட்டு இங்கே தான் வர்றாங்க

மாமாவும் நானும் சிரித்தோம். 'சலீமா டீச்சரை நாங்க மறக்க முடியாது'

கவிஞரும் மனைவியும் வேப்ப மரத்தைக் காட்டிச் சொன்னார்கள்.

கசப்பான மரமும் இனிப்பான நினைவும் தந்து போன சலீமா டீச்சரை நலம் விசாரித்தார்கள். (தினமுரசுக் கதை படித்து ஹலீம்தீன் வீட்டாருக்கு மடலிட்டால் மகிழ்ச்சி)

எங்கோ... பிறந்து எங்கோ.... வளர்ந்து.. எங்கோ..வாழ்க்கைப் படுகின்ற பெண் மாதிரி.... இந்த வெள்ளை மணல் வேப்பமரம் கல்ஹின்னை மண்ணில் நிழல் கொடுக்கின்றதே.... இதற்குப் பெயர் தான் விதியா....

இனி-

காலா காலமாக- 'முந்தி சலீமா டீச்சர்னு ஒரு டீச்சர் இங்கே படிப்பிச்சாங்க.... அவங்க கொண்டு வந்து தந்த வேப்ப மரம்தான் இது'ன்னு.... ஹலீம்தீன் சேரின் பேரப்பிள்ளைகளும் இனித்தம் பிள்ளைகளிடம் சொல்லுவார்கள்.

இப்படித்தான்-

வேப்ப மரங்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு-

வெள்ளைமணல் சலீமா டீச்சரின் ஞாபகம் தான் வருகிறது.

நேயங்கள் நெஞ்சில் ஆழமாக வேரிட வேண்டுமா......? மரங்களை அன்பளிப்போம்.

வந்தவர்கள் போனாலும்-

மரம்

வாசலிலேயே நிற்கும்!

-□□□-

www.padippakam.com

# வெறுமை

**மாதுமை சிவசுப்பிரமணியம்**

ஆர்த்திகா அவசர அவசரமாக குளிப்பதற்கு விழுந்தடித்துக் கொண்டு கிணற்றடி சென்றாள். 4.30 ஆகிவிட்டது. நாலு மணிக்கு பொருளியல் வகுப்பு. இப்போது தினமும் இரு முறையாவது குளிக்காவிட்டால் இந்த வெக்கை தாங்க இயலாது.

குளிப்பதற்கு இருவாளி தண்ணீர் ஊற்றியிருப்பாள் பக்கத்து வீட்டில் பெரிய சத்தம். நாலைந்து பெடியன்கள் மட்டும் இருப்பதை உறுதிப்படுத்தியது. இரு வளவிற்கும் பொதுவான கிணறு சுவரால் பிரித்து கட்டப்பட்டிருந்தது. கிணற்றடியில் நின்றால் பக்கத்து வீடு ஒன்றும் தெரியாது. ஆனால் மூலையைப் பார்த்தால் மட்டும் ஒரு பெரிய மாமரம் தெரியும். அவ்வளவுதான்.

சிறிது நேரத்தில் சத்தம் பெலத்து மாமரம் நோக்கி வந்தது. பார்த்தால் அவ்வளவு பேரும் இங்கேயே பார்ப்பது புரிந்தது. ஒரே ஓட்டமாக ஓடியவள் வெளியே வரவே இல்லை.

"அம்மா, ஏனம்மா இங்கால இத்தனை பெடியன்களும் எப்ப வந்தவங்கள். கிணற்றடியில் நின்று குளிக்கவே முடியேல்ல."

"அந்த பெரியவீட்டில ஒரு சின்னக் குடும்பம்தான் இருந்தது. அதனால் படிக்க வந்த நாலைந்து பெடியன்களை இருக்க விட்டிருக்கினம். சமீனா அன்ரி வந்து சொல்லிப் போட்டு போனவ" என்றாள் அம்மா.

"தொலைஞ்சு போச்சு. அப்ப இனி ஒரே கரைச்சல் தான்." என்றவாறு வகுப்பிற்குக் கிளம்பினாள் ஆர்த்திகா. வெளியே சைக்கிளை கொண்டு வந்தபோது அவ்வளவு பேரும் பக்கத்து வீட்டு வாசலில் நின்றார்கள். என்ன தான் துடியாட்டமான பெண்ணான போதும் குளிக்கேக்க பார்த்தால் அவளிற்கு ஒரு மாதிரியாக இருந்தது. பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு சென்று விட்டாள்.

அவர்களும் ஒன்றுமே சொல்லவில்லை. இப்போ தெல்லாம் வெறிச்சோடிப் போய்க்கிடந்த பக்கத்து வீடு பெரிய கலகலப்பாக வந்து விட்டது. கிணற்றடியில் வாளிச்சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. ஆனால் ஆர்த்திகாவிற்கு ஒரு தொல்லையுமே செய்யவில்லை. அவள் எதிர்பார்த்தது போல் வேறுவிதமாக. ஆனால் நடந்ததோ வேறுவிதமாக. அவர்கள் அன்று பார்த்ததிலும் பதிலாக பின்பு திரும்பிக் கூடப்பார்க்கவில்லை.

விடுமுறை விட்டு பள்ளியும் தொடங்கிவிட்டது.... இப்பொழுது காலையில் குளிப்பதற்கு ஒரே சண்டை பக்கத்து வீட்டில். ஏனெனில் இந்தப் பக்கம் குளிக்கும் சத்தம் கேட்டவுடன் அவர்களும் அந்தப் பக்கம் வந்து விடுவார்கள். அவர்களின் சுவாரசியமான சண்டையைக் கேட்ட வண்ணம் குளித்து பாடசாலைக்குச் சென்று விடுவாள்.

ஆனால் நித்தமும் தொல்லை ஒன்று வந்துவிட்டது. காரணம் 7 மணிக்கு அவர்கள் வாசலில் நிற்பதால் அவர்களுக்கு தரிசனம் கொடுத்து விட்டு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. நாளாக நாளாக அது சகமான கஷ்டமாக இருந்தது.

மதியம் பாடசாலை விட்டு வந்தாலும் ஐவர்க்கும் தரிசனம். ரியூசன் போனாலும் அந்த ஐவரையும் தரிசனம் பண்ணத் தவறுவதில்லை. இவ்வாறு நாட்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது.

ஒருநாள் விடியக் குளிக்கும் போது பக்கத்து வீட்டில் பெரிய சண்டை. என்ன வென்று அறிய அவளிற்கு ஆவல்தான். ஒன்றும் செய்ய முடியாது என்பதால் மெதுவாக குளித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று யாரோ ஒருவன் "டேய், நீ போய் அங்கால அக்காவோட குளி. இங்கால உனக்கு இடமில்லை." என்று சொன்னது காதில் கேட்டது. உடனே இன்னொரு குரல் "டேய், உனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கிறன் என்னைப் பற்றி என்னவும் கதை. பக்கத்து வீட்டு அக்காவை என்னோட இழுக்க வேண்டாம்" என்று சொல்வது காதில் கேட்டது.

ரியூசன் வகுப்புக்களில் விசாரித்ததில் அவர்கள் அவளைவிட ஒரு வருடம் கூடியவர்கள் என்றும், இந்த வருடம் பரீட்சை எடுப்பவர்கள் என்றும் அறிந்து கொண்டாள்.

இப்போதெல்லாம் விடிய விடிய லைட் எரியும். சீரியசாகப் படிக்கிறார்கள் என்பது தெரிந்தது. அதனால் முந்தி இருந்து வந்த பகிடிகள் படிப்படியாக குறையத் தொடங்கியது....

ஆனால்...

ஐவரில் சற்றுக் கூடுதலாக சிரிப்பவனின் நடத்தையில் சின்னச் சிறு மாற்றம். ரியூசன் வகுப்பிற்கு போகும் போதும் வரும் போதும் பின்னாலேயே தொடர்ந்து சென்றான். ஆர்த்திகாவிற்கு ஒன்றும் சொல்லவும் முடியாது. காரணம் அவன் ஒன்றுமே செய்யவில்லை. ஆனால் அவன் முகம் மீட்டும் ஏதோ கதைக்க வேண்டும் என்பதை அவளிற்கு சொல்லியது. பெயர் கூடத் தெரியாத ஒருவனுடன் இவளாகப் போய் என்னத்தைக் கதைப்பது என்று பேசாமல் விட்டுவிட்டாள்.



ஒருநாள் பாடசாலைக்குச் செல்லும் போது வழியிலே வந்தவன் திடீரென 'குட்மோனிங்' சொன்னான். எதிர்பாராத இந்த தாக்குதலால் அவளிற்கு பேச்சே வரவில்லை. தன்னை சுதாகரித்துக் கொண்டு அவள் பதிலுக்கு 'குட்மோனிங்' சொன்ன நேரம் அவன் தன்னைக் கடந்து விட்டதை உணர்ந்தாள். வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது.

பாடசாலை விட்டுவிட்டது. மெதுவாக சைக்கிளில் வந்தவளிற்கு தூரத்தில் அவனின் பச்சை சேட் தெரிந்துவிட்டது. எவ்வளவு தான் ஸ்லோ-ரேஸ் ஓடிய பொழுதும் அவனிற்கு கிட்டே சைக்கிள் வந்துவிட்டது.

"ஹலோ உங்களைத்தான் கொஞ்சம் நிக்கிறீங்களா"

"யார், நானா" இது ஆர்த்திகா. சொன்னவள் பிரேக் போட்டு சைக்கிளை நிப்பாட்ட,

"நாளைக்கு நாங்க ஊருக்குப் போறம். அதான் உங்களிட்ட சொல்லிட்டு போக எண்டு தான் மறிச்சன்"

"ஆ! அப்படியா? அப்ப நான் போயிட்டு வாறன்" என்ற ஆர்த்திகா எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்று அவளிற்கே தெரியாது. வீடு வந்தபின்தான் நிறைய கதைக்க மறந்தது தெரிந்தது.

ரியூசனுக்கு பின்னேரம் வெளியே வந்தாள். ஒவ்வொரு நாளும் வெளியே நிற்பவர்கள் இன்று மருந்துக்குக்கூட காண முடியவில்லை. ரியூசனால் வந்து கிணற்றடியில் நின்று மாமரத்தைப் பார்த்தாள். ஒரு குருவி கூட தென்படவில்லை.

ஆர்த்திகாவிற்கோ என்ன செய்வதென்று புரியவில்லை. போக முதல் எல்லோர்க்கும் இல்லாவிட்டாலும் தன்னுடன் கதைத்த அவனிற்கு மாத்திரமாவது விஷ் பண்ணி கதைத்து விட வேண்டும் என்று ஒரே ஆசை. எங்கே அவனைக் கண்ணால் கூட காணவில்லையே.

மாலை 7.30 மணியிருக்கும். மீண்டும் அவள் கிணற்றடி அருகில் வந்து மதிலால் எட்டிப் பர்த்த வண்ணம் நின்றாள். ஒருவரையும் காணவில்லை. கையில் ஆட்டோகிராப் தூங்கி வழிந்தது.

15 நிமிடங்களின் பின் அவர்களில் ஒருவரை தூரத்தில் கண்டாள்.

"அண்ணன், அண்ணன்...." என்றாள்.

அவனுக்கோ அதிர்ச்சி "என்னையா கூப்பிர்றீங்க"

"ஓம், உங்களைத்தான் இங்க ஒருக்கா வாங்களேன்"

"என்ன விஷயம்."

"அண்ணன், உங்களோட இருக்கும் ஒருவர், எனக்கு பெயரும் தெரியாது. கண்ணாடி போட்டவரில்ல, இன்னொருத்தர். வெள்ளை......" என்று ஆர்த்திகா இழுக்கவும் "அஸ்வரையா தேடுறீங்க.....?"

"டேய் அஸ்வர்... அஸ்வர்" என்று உள்ளே பார்த்துக் கூப்பிட்டவன்,

"டேய், உன்னைத்தான் மச்சான் அக்கா தேடுறாங்க" என்று சொல்லி விட்டு சென்றான். அவனது அக்கா என்ற வார்த்தையில் இருந்த நக்கலை அவள் அவதானிக்கத் தவறவில்லை.

"ஹலோ என்னையா தேடினீங்க" என்றபடி வந்தான் அஸ்வர்.

"சொறி, நீங்க மத்தியானம் கதைக்கேக்க கதைக்க வரேல்ல. உங்களை விஷ் பண்ணக் கூட மறந்திட்டன். விஷ் யுவர் ஓல் த பெஸ்ற். இத்தாங்க என்ர ஆட்டோகிராப். சயின் பண்ணீட்டு விடிய தாங்க" என்று கூறி விட்டு சிரித்தபடியே வந்து படிக்க புத்தகத்தை விரித்தவளிற்கு,

"இதயமே... இதயமே உன் மௌனம் என்னைக் கொல்லுதே" என்ற பாடல் பக்கத்தில் ஒலிப்பதாய் விளங்கியது.

அடுத்த நாள் பாடசாலை செல்லும்போது வழியில் அவனைக் கண்டு இறங்கிவிட்டாள் ஆர்த்திகா.

"குட்மோனிங்" என்றவளிற்கு, "இந்தாங்க உங்கட ஆட்டோகிராப். இது என்ர. சயின் பண்ணிட்டு மத்தியானம் தாங்க. நாங்க மூண்டு மணிக்கு போறம்" என்றான் அஸ்வர்.

ஆர்த்திகாவிற்கோ அழுகை அடங்காமல் வந்தாலும் அடக்கிக் கொண்டு சிரித்தபடி விடை கொடுத்தாள். திரும்பி வந்து கட்டிலில் சாய்ந்தவளிற்கு அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. மெல்ல எழும்பி கசட் றேடியோவில் "இதயம்" படப்பாடல்களை மெதுவாக ஒலிக்கவிட்டாள். "இதயமே... இதயமே" பாட்டு கேட்ட போது முன்னால் அஸ்வர் வந்து பாடுவது போல இருந்தது. அம்மாவிற்கு தெரியாமல் கண்ணீரை துடைத்துக் கொண்டாள் ஆர்த்திகா.

5 மணிக்கு பொருளியல் வகுப்பு. 4.15 மணிக்கு குளிப்பதற்காக சென்றவளிற்கு மாமரத்தைப் பார்த்தவுடன் நெஞ்சுக் கூட்டுக்குள் என்னவோ செய்தது. இனி வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை என்பது போல இருந்தது. மாமரத் தடியை மீண்டும் பார்த்தாள் ஆர்த்திகா. வெறுமையாக இருந்தது அவளது மனத்தைப் போல. கன்னங்களில் வழிந்த கண்ணீரை மறைக்க மெதுவாக குளிக்கத் தொடங்கினாள் ஆர்த்திகா.

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

அன்பின் கனவு நாயகனுக்கு!

கனவிலும் நனவிலும் கலந்து விட்ட அன்பாளரே!நல்ல பண்பாளரே! அதிக வம்பாளரே!

இவைகள் "தலைப்புச் செய்திகள்" தங்களின் நடமாட்டம் குறித்து கண்காணிக்கும் இக்காரிகையின் நினைவுப் புலம்பல்கள்! கண்ணியமானவரே!

தாங்கள் செல்லும் பாதையில், தங்களின் தரிசனத்திற்காகக் காலம் பூராவும் கால் கடுக்கக் காத்திருக்க நான் தயார்!....

தற்போது புரிகிறதா நான் யாரென்று? தங்களுக்கெங்கே புரியப்போகிறது?.... தரிப்பிடத்தில் தரித்திருக்கும் செடி கொடிகளையும் பாதசாரிகளையும் சக பயணிகளையும் கேட்டுப்பாருங்கள்....ம்... அவர்களுக்குப் புரியும் என் கடுந்தவம்!



**ஜெயபாரத்தாசன் - திருகோணமலை**

என் கொழுத்த மாம்பழமே! கன்னியாவில்தான் உண்டானது வெந்நீர் ஊற்று. ஆனால் தவறி கிண்ணியாவிலல்லோ வெந்நீர் ஊற்று உண்டாகி இருக்கிறது! காரணம், என் பார்வைக்குரியவர் சுடு தண்ணி மாதிரி கடுகடுப்பானவரும் சுறுசுறுப்பானவரும் என்று காது வழிச்செய்தி!

என் புலம்பலுக்குரியவரே! நீ ஆபிரிக்காவிலும் ஜப்பானிலும் பிறந்திருக்க வேண்டியவர். ஏனெனில் உனது சுருள் கேசமும், சின்னக் கண்களும் வெண்மையான முகமும் அவற்றைப் பறைசாற்றுகின்றன.... உறக்கத்தின் கனவில் உன்னுடன் நான் கைகோர்த்துக்கொண்டு டூயட் பாடிக்கொண்டு ஹொங்கொங் தேசத்துப் பூங்காவில் சுற்றித் திரிவது போல் ஈஸ்மன் கலர்க் கனவுகள் ஏராளம்!

மீண்டும் விளம்பரத்தைத் தொடர்ந்து புலம்பல் தொடரும்..... உனது பிறந்த நாள் விழாவுக்காய் பப்.... பப்.... லெமன்பப் மெலிபன் லெமன் பப்.... வானிலை பற்றிய அறிவித்தல்...

நீ வராவிடில் என் கிழக்குப் (இடது) பக்கத்தில் உள்ள இதயத்தில் இடியுடன் கூடிய கண்ணீர் மழை பெய்யும் என்று எனது மன வானிலை நிலையம் அறிவித்துள்ளது..... நீ இதுவரை கேட்ட புலம்பல்களின் சாராம்சம்!

மீண்டும் பஸ் தரிப்பு!
மீண்டும் கடுந்தவம்!
மீண்டும் புலம்பல்!

இத்துடன் இன்றைய புலம்பல்கள் யாவும் நிறைவு பெற்றன... மீண்டும் புலம்பல்கள் அடுத்த பிறந்த நாளைக்கு இடம் பெறும்! வணக்கம்.....

# நித்யா ≠ சராசரிக் காதலி

நித்யா ஏகமாய் அதிர்ந்து போனாள்.

"ரமணன், நீங்க என்ன சொல்றீங்க?"

"யெஸ் நித்யா. நீ தினகரை கல்யாணம் பண்ணிக்கணும். அவன் ரொம்ப நல்லவன். பெரிய பணக்காரன். நல்ல பதவியில் இருக்கிறான். கார், பங்களா என்று...."

"நிறுத்துங்க ரமணன். பணம் மட்டுமா வாழ்க்கை? மனசு என்று ஒன்று இருக்கே....."

வேதனையுடன் கூறினாள் நித்யா. ரமணன் பதில் கூற முடியாது மௌனித்தான். அவள் ஆத்திரத்துடன் தொடர்ந்தாள்.

"அவர் தான் அப்படிக் கேட்டார்னா உங்களுக்கு புத்தி எங்கே போச்சு? நாங்க ரெண்டு பேரும் ஒருத்தர ஒருத்தர் லவ் பண்றோம்னு அவர்கிட்ட அப்பவே சொல்லியிருக்கலாமே?"

"அதெப்படி முடியும் நித்யா? தினகர் என் உயிர் நண்பன். நான் அவனுக்கு ரொம்பவே கடன்பட்டிருக்கேன். இந்த உதவியைக்கூட நான் அவனுக்குச் செய்யலேன்னா...."

"சீ... உங்க கடனை அடைக்க நானா அகப்பட்டேன்? ரமணன், உங்க கொடுக்கல் வாங்கல்களுக்கு உபயோகப்படுத்த நான் ஒன்றும் பொம்மையில்லை. உணர்ச்சிகளுள்ள ஒரு பெண். அத மறந்துடாதீங்க" ஆவேசத்துடன் கூறினாள்.

"ஷட் அப் நித்யா. கொடுக்கல் வாங்கல்னு சொல்லி எங்க நட்பை கொச்சைப்படுத்தாதே. தினகர் உன்னை விரும்பறான். கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறான். ஒரு நண்பனா நான் அவனுக்கு விட்டுக் கொடுத்துத்தான் ஆகணும்".

"நோ ரமணன். நான் இதுக்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்." அவள் குரலில் உறுதி தெரிந்தது. சட்டென்று ரமணனின் முகம் கறுத்தது.

"அப்படியா? அப்போ சரி. என்னோட முடிவையும் கேட்டுக்கோ. என்மேல உனக்கு உண்மையான அன்பு இருந்தா-நீ என்னை காதலிச்சது நிஜம்னா தினகரைக் கல்யாணம் பண்ணித்தான் ஆகணும். அப்படி இல்லன்னா இந்த நிமிஷமே என்னை மறந்துடு". கடுமையான குரலில் கூறினான். அவள் இமைக்கவும் மறந்துபோய், கல்லாய்ச் சமைந்து நின்றாள். அவன் பிரயோகித்த ஆயுதத்தில் அவள் நிலைகுலைந்து போய் நிற்பது புரிந்தது. அவன் உதடுகளில் மெலிதாய் ஒரு புன்னகை. எத்தனை தமிழ் சினிமாக்கள் பார்த்திருக்கிறான்! ஒரு சராசரிக் காதலியை மசிய வைப்பது எப்படி என்று கூட அவனுக்குத் தெரியாதா? என்ன?

"நித்யா, நல்லா யோசிச்சு இன்னும் ரெண்டு நாள்ல உன் முடிவைச் சொல்லு". கூறிவிட்டு நகர்ந்தவனை அவளின் குரல் இடைமறித்தது.

"ஒரு நிமிஷம் மிஸ்டர் ரமணன்".

அவள் குரலில் இருந்த வித்தியாசம் புரிய தயக்கத்தோடு திரும்பினான் அவன்.

"நான் உங்களை காதலிச்சது உண்மை. எதுக்கு காதலிச்சேன் தெரியுமா? உங்களை கல்யாணம் பண்ணிக்கணும்; உங்ககூட வாழணும் என்கிறதுக்காக. தவிர இன்னொருத்தனுக்கு கழுத்தை நீட்டுறதுக்கு இல்ல. என் நேசம் உண்மை என்கிறத உங்க நண்பர கல்யாணம் பண்ணிக்கிட்டு தான் நிரூபிக்கணும் என்கிற அவசியம் எனக்கு இல்லை.



**வானதி இளமுருகனார் - கொழும்பு**

புரிஞ்சுதா?". ரமணன் அடிபட்ட உணர்வோடு தலைகுனிந்து நின்றான்.

"இதோ பாருங்க மிஸ்டர் ரமணன். ஒரு பெண்ணோட உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காத உங்களைப் போன்ற ஒருத்தர நேசிச்சதுக்காக நான் ரொம்பவே வெட்கப்படுறேன். இப்போ மட்டுமல்ல, கல்யாணத்துக்கு அப்புறம் உங்க நண்பர் என்னை கேட்டிருந்தா கூட செஞ்சோற்றுக் கடன் தீர்க்கிறதுக்காக என்னை தாரை வார்த்துக் கொடுக்க நீங்க தயங்கியிருக்க மாட்டீங்க. உங்க சுயரூபத்தை இப்போ தெரிஞ்சிக்கிட்டேன். உங்கள மாதிரி ஆம்பிளைகளைக் காதலிக்கிறதுக்கு... காலம் பூரா தனியாவே வாழ்ந்துடலாம்...."

மூச்சு விடாமல் கூறியவள், அவனின் 'சராசரிக்காதலி' என்ற எண்ணத்தைப் பொய்யாக்கி, திரும்பிப்பாராமல் நடந்தாள். ரமணன் விக்கித்து நின்றான்.

# இவன்

சனிக்கிழமை கிழக்கின் வெயில் 'சுள்' ளென்று முதுகைத் துளைத்துக் கொண்டிருந்தது. குடை பிடித்து வெயிலைத் தட்டிக் கேட்க முடியவில்லை. ஒன்று, குடை பிடிக்க வேண்டும்; அல்லது நான் சைக்கிள் ஓட வேண்டும். இரண்டும் செய்தால் விழவேண்டியதுதான். சைக்கிள் எனக்கு புதுப்பழக்கம்.

நான் ஜீ.ஏ.கியூ. படித்துக் கொண்டிருந்த காலம். சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே ரியூசன் நடந்தது. என்றாலும், எனது வீட்டிலிருந்து ரியூட்டரிக்குச் செல்லும் தூரம் அதிகம் என்பதால் நான் லேடீஸ் பைக்கிலேயே செல்வது வழக்கம். போகும் வழியிலேயே என் நண்பியின் வீடும் இருந்தது. இருவருமாக சேர்ந்தே செல்வோம்.

நண்பியின் வீடு நெருங்கிக் கொண்டிருந்தது நான் வேகமாக சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தேன். அந்த முந்திரித் தோட்டத்துக் குள்ளிருந்து யாரோ ஒருவன் ஓடி வருவது தெரிந்தது. குனிந்து பார்த்தேன். இடுப்பில் சாரத்தை தவிர உடம்பில் எதுவுமே இல்லாமல் என்னை நோக்கித்தான் ஓடி வருகிறான். இதற்கு முன் பல தடவை அந்த வீதியில் அவனைக் கண்டிருக்கிறேன். ஆனால் பேசியோ சிரித்தோ பழக்கமில்லை. அதனால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் நான் வந்து விட்டேன். பின் அதைப்பற்றி நான் சிந்திக்க வேயில்லை. அடுத்த நாளும் அவ்வழியிலேயே போய்க் கொண்டிருந்தேன். என்னுடன் பக்கத்து வீட்டு மாமியும் வந்தார். சைக்கிளை உருட்டிக் கொண்டே அவருடன் வந்து கொண்டிருந்தேன். தற்செயலாக திரும்பிப் பார்த்தேன் முந்திரி மரத்தில் சாய்ந்தபடி என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். எதையோ இழந்தவன் போல பார்த்த பார்வை எனக்கு சிரிப்பைத்தான் தந்தது. நண்பியைக் கண்டவுடன் முதல் கதையாக அவனை பற்றித்தான் பேசினேன், அவனுக்காக என் நண்பி வாதாடினாள். "அவனுக்கு நம்ம விட நாலு வயதாவது குறைய இருக்கும். அவனுக்கு அப்படியொரு எண்ணம் இருக்காது. பின்ன ஏன் பார்க்கிறான்?" நான் கேட்ட கேள்வியை என்மீதே திருப்பினாள். என்றாலும் அவள் கூறுவதிலும் நியாயம் இருப்பதாகவே தோன்றியது எனக்கு. மீசை முளைப்போமா வேண்டாமா என்று எட்டிஎட்டிப்பார்க்கும் இளமுகம். அவனுக்கு அந்த எண்ணம் இருக்காது என்று மனதை சமாதானப்படுத்தினாலும் அவன் பார்வைக்கு காரணம் கண்டு பிடிக்கமுடியவில்லை. இருவரும் முழுதாக குழம்பிப்போய் விட்டோம்.

அடுத்த கிழமையும் போகும் போது எனக்கு முன்னாலும் பின்னாலும் சிலர் சென்று கொண்டிருந்தனர். மெதுவாக சைக்கிளை மிதித்தபடி மரங்களூடே நோக்கினேன். அவன் மரத்தில் சாய்ந்தபடி நின்றான். பார்வை மட்டும் என்மீதே இருந்தது வெகுதூரம் வந்த பின் திரும்பிப்பார்த்தேன். றோட்டில் நின்று என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது எனக்கு ஆத்திரம் தான் வந்தது.

"இவன் வயதென்ன? என்ர வயதென்ன? தன்னைப் பற்றி என்ன நினைச்சிற்றான் இவன்? தேவதாஸ் மாதிரி பார்க்கிறதும் பின்னால ஓடிவாறதும்" நான் முடிக்கும் முன் நண்பியும் தன் பங்குக்கு திட்டித்தீர்த்தாள். திட்டிய படியே ரியூட்டரியை அடைந்தோம். "காயத்ரி....." நண்பி தான் பாம்பை மிதித்தது போல் அலறினாள். திடீரென்று, அவளைப்பார்க்க நிமிர்ந்த அதே நேரம் எனக்கும் அவளைவிட இருமடங்கு 'ஷாக்'. எதிரே ரியூட்டரி வாயிலில் அவன்தான் சைக்கிளில் நின்றபடி எங்களையே பார்த்துக் கொண்டிருந்தான். பல்லைக் கடித்துக் கொண்டு நண்பியின் கையை இறுகப் பிடித்து குனிந்த தலை நிமிராமல் வகுப்புக்குள் விடுவிடுவென்று நடந்தேன்.

ரியூசன் முடிந்து அவ்வழியாகவே வந்து கொண்டிருந்தேன். அவனது வீடும் கடந்து வெகு தூரம் வந்தபின் "அக்கா....." என்றொரு சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தேன். அவன்தான் கையை அசைத்தபடி ஓடிவந்து கொண்டிருந்தான். சாரத்தைக் காணவில்லை. காற்சட்டை மட்டும் போட்டிருந்தான். அக்காவாம் அக்கா அத்தனை மரங்களும் என்மீதே விழுந்து என் பிடரியைத் தாக்க தொடங்கியதுபோல் கனமாக இருந்தது தலை. அதை அவனிடமிருந்து எப்படி வாங்கினேனென்று எனக்கே தெரியவில்லை. ஒரு வாறு சமாளித்து "தம்பி.... என்ன மன்" முடிக்கவில்லை. நிமிர்ந்து பார்த்தேன். அவன் அவ்விடத்தில் இல்லை. வெகு தூரத்தில் போய்க் கொண்டிருந்தான்.

நானும் என் 'போய் பிரண்ட்' டும் சேர்ந்து எடுத்த போட்டோவை என் நண்பியிடம் காட்டிவிட்டு கொப்பிக்குள் வைப்பதாக நினைத்து கரியரிலேயே செருகி விட்டது இப்போதுதான் நினைவுக்கு வந்தது.



வரட்டும் என்று மனதிற்குள் கறுவிக் கொண்டு ஒரு காலை நிலத்தில் ஊன்றியபடி நின்று விட்டேன். அவன் மூச்சிழுக்க என் அருகில் வந்ததும் வராததுமாக காற்சட்டை பைக்குள் கையை நுழைத்து ஒரு 'என்வலப்' ஒன்றை வெளியில் எடுத்தான். எனக்கு 'பகீர்'என்றது. ஒரு நிமிடம் இரத்தம் உறைந்து, பின் சுய நினைவடைந்து ஒரேயடியாக சைக்கிளை விட்டு இறங்கினேன், அடுத்த நிமிடத் தாக்குதலுக்குத் தயாராக.

நான் கையை நீட்டவில்லை. அவன் என்னிடம் நீட்டியபடியே பேசத்தொடங்கினான். "அக்கா.... இது உங்கட சைக்கிள்ள இருந்து விழுந்தது. பிரிச்சுப்பாத்தன், நீங்க இரண்டு பேரும் எடுத்த படம். அதான்... தரலாமெண்டு நினைச்சன். நீங்கதான் என்ன முறைக்கிறீங்க...." அவன் பேசிக் கொண்டே சென்றான். எனக்கு தலை விறைத்தது.

அவன் தொடர்ந்தான், "உங்களோட வேற ஆக்கள் வந்ததாலதான் என்னால தரஏலாம இருந்தது. இந்தாங்க." அவன் விடாமல் பேசி முடித்தான். எனக்கு மயக்கம் தீரவில்லை.

**சுகந்தி**

"ஆண்டவா.... நீயாவது என்னை மன்னித்து விடு" உலகிலுள்ள அத்தனை தெய்வங்களையும் மனமுருக வேண்டிக் கொண்டேன், பாவ மன்னிப்புக் கேட்டுத்தான். அப்போது தலையில் விழுந்த பழுத்துப் போன முந்திரி இலையொன்று, நின்று பலனில்லை போ என்பது போல் காலிலும் பட்டு கீழே விழுந்து சிரித்தது.

நாட்களை விழுங்கி ஏப்பம் விட்டது ஒரு வருடம். கடந்தவாரம், இன்றைய சூழ்நிலையைக் காரணம் காட்டி, ஒரு இரவுப்பொழுதில் அவனைப் பிடித்துக் கொண்டு போனார்களாம். விடிந்ததும் விசாரித்ததில் அப்படியாரையும் பிடிக்கவில்லை என்கிறார்களாம். கூட்டிக் கழித்துப்பார்த்ததில் இன்று அவன் உயிருடன் இல்லையென்றே முடிவாகிவிட்டது. அன்புள்ள முரசின் அபிமானிகளே! அவனுக்காக ஒரு நாள் மட்டும் என்னுடன் சேர்ந்து அழுங்கள் அது போதும் எனக்கு.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## நினைவால் ஒரு குற்றம்

**கொ**டியுண்டு. முடியுண்டு. அயலிலுள்ள பல நாடு பிடியிலுண்டு. ஆனாலும் மனதில் ஒரு துடிப்புண்டு.

பட்டத்து ராணியாக ஒருத்தி இருந்தாலும் மலருக்கு மலர் தாவும் தேன்யாகும் எண்ணம் மன்னன் மனதிலுண்டு.

'வா' என்று அழைத்தால் மடியில் வந்து விழ பலர் இருந்தும் மன்னவன் கனவில் ஒருத்தி மட்டுமே வந்து கொண்டிருந்தாள். அவனை வதைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் பூங்குழலி. கள் ஊறும் வதனம் பார்வையால் கொல்லுகின்ற நளினம். பலாச்சுளையோ என்று பற்றத் துடிக்கின்ற அதரம்.

மன்னவன் மயங்கிப் போனதில் வியப்பில்லை.

கனவில் ஒரு மாளிகை.

அங்கும் அவனே நாயகன். நாயகி மட்டும் பட்டத்து ராணியல்ல, அவன் மனதில் வட்டமிடும் பூங்குழலிதான் அங்கே நாயகி.

"நீர் வீழ்ச்சி தேவையில்லை, நின் விழிகள் போதுமடி. தென்னம்கள் எனக்கெதற்கு, உன் கன்னம் கள் போதுமடி. அன்னம் எனக்கெதற்கு, பசியாற உன் அதரங்கள் இருக்கையிலே!"

விழி மூடிப் புலம்புவான். மனதில் இருந்து, மாளிகையில் இறங்கி நின்று பூங்குழலி புன்னகைப்பாள்.

"புன்னகையோ- போர்க்கணையோ, தவமிருந்து வரம் பெற்ற அஸ்திரமோ? ஏவாதே எரிந்து போவேன். நோகாமல் என் கையணைக்கத் தாவாயோ என் நெஞ்சின் மேலே!"

அழைப்பது மன்னன்; அதுவும் மனமுருகி, அவள் பேரழகு முன் கையேந்தி! மறுக்கவில்லை, ஊஞ்சலாய் அவன் மார்பை நினைத்துத் தாவினாள்.

"நினைத்த வரம் தந்தவளே, வளைந்த புருவத்தால் என் மனதைக் கவர்ந்தவளே; உயர்ந்த பேரெழில்கள் மோதியதால் என் நெஞ்சம் நொருங்கிப் போய்விடுமோ?! போகட்டுமேன். போர் என்ற புயலடித்தும் சாயாதவன், ஒரு பூ மோதிப் போனான் பார் என்று மதன காவியம் நாளை சொல்லட்டுமேன்! மத யானை வந்தாலும் புறம் காட்டாப் புரவலனை, மதன கணையிரண்டு மாய்த்ததென்று பார் அறிந்து வியக்கட்டுமேன்!"

புலம்பல் தொடர்ந்தது. பூங்குழலியின் வழங்கலும் தொடர்ந்தது. வாங்கிக் கொண்டேயிருந்தான். "அரச சபையில் நான் வள்ளல். சரச சபையில் நீயே வள்ளல். இதுவரை என்னிடம் களஞ்சியம் இருந்தது. அள்ளக் குறையாத வளங்களும் இருந்தன. ஆயினும் மனதில் வறுமையிருந்தது. இனம் காண முடியாத வெறுமையுமிருந்தது. வந்தாய் நீயே வானம் வெளுத்தது. என் மனக் குகையெங்கும் வெளிச்சம் பாய்ந்தது. உன் மடி எனக்கு நிம்மதியானது. பொன் பொருள் வேண்டாம். இந்தப் பொன் மகள் போதும்."

துகிலினை விலக்கினான், "துயில்கின்ற மேடை" என்று சொல்லி அவளின் மார்பினில் சரிந்தான்.

மஞ்சம் அதிர, மாளிகை நகைத்தது. கொஞ்சும் கனவில் குறுக்கே யாரது?

சொர்க்கபுரியிலும் ஒற்றர்கள் உண்டோ?



எட்டிப் பார்த்து நகைப்பெறிவது அவரோ?

நகைப்பு என்று மன்னன் நினைத்தது பொய்த்தது. அழுகுரல் ஓசை செவியில் பாய, மன்னவன் விழிகள் திறந்தன.

யானையின் பிடியில் சிக்கிய கரும்பாய் திணறிய பணிப்பெண் விடுபட்டு விலகி அழுவதைத் தொடர்ந்தாள்.

பூங்குழலி மயக்கத்தில் பூங்கொடி வேறென்று தெரியாமல் போனதே!

மன்னவன் புத்தியில்போதை தெளிந்தது.

மன்னிப்புக் கேட்டாலும் மறையாத மாசு படிந்துவிட்டதே.

மன்னிப்புக் கேட்கவும் அவள் அங்கில்லை. வெறுப்பை வாளாய் வீசிவிட்டு வெளியேறிப் போனாள்.

மன்றம் கூடிற்று. கொற்றவன் மீதே குற்றச்சாட்டு.

வேலியே பயிரை மேய்ந்தது என்று கேவிக்கேவி அழுதபடி சொன்னாள், அவையோர் வாயடைத்தனர்.

ஒப்புக்கொண்டால் ஒளிர் புகழ் ஒடுங்கும்.

குற்றம் செய்தவன் செங்கோல் பிடிப்பது வெற்று நடிப்பு என்று தானே எல்லோரும் பழிப்பர்.

பதவி வெறுக்க அவன் மனம் மறுத்தது.

பழியைத் தூக்கித் திருப்பி வீசினான்.

"பணிப்பெண் உனக்கு பட்டத்து ராணியாகும் மட்டற்ற ஆசை மடைதிறந்த வெள்ளமானதோ?"

அமுதவள் சீறினாள்.

"ஆசையிருந்திருந்தால் உன்னைக் குற்றம் சாட்டவா வந்திருப்பேன், கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாலே போதுமே, நீ கொட்டிக் கொடுத்திருப்பாயே!"

"புரிகிறது. படை எடுத்து வெல்ல முடியாத பகை நாட்டார் கைகள் ஆட்டுவிக்கும் பாவை நீ! அதுதான் ஆணவம். பெண்ணுக்கு தேவை பணிவு. வார்த்தைகளில் கனிவு இரண்டுமில்லை உன்னிடம்!"

"அரச சபையில் உமக்கு அடக்கம் தேவைப்படுகிறது. சரச சபையில் மட்டும் உமது ஆசைக்கு ஆடும் பெண் தேவைப்படுகிறது. அச்சம் வேண்டும் பெண்ணுக்கு என்பீர், துச்சமாக மதித்தாலும், துகிலுரிந்து பார்த்தாலும் எட்டி உதைக்காமல், எவன் வருவான் அபயம் தர என்று கதறுவதுதான் காவிய நாயகியின் தரம் என்பீர்."

பூ என்று நினைத்தது பொய்த்தது.

புயலாக வார்த்தைகள் பாய்ந்தன.

"சித்தப் பிரமையோ. அதுதான் வார்த்தைகளில் சுத்தமில்லையோ?"

நகைத்தான் மன்னன்.

முடியுடை வேந்தனுக்கு முன்னால் நீதியுரைக்க சபை தயங்கியது.

"சபையோரே, அறம் பிழைத்த வேந்தனுக்கு வெண்சாமரம் வீசுவதுதான் உங்கள் வேலையோ?"

எதிர்பாராத இடத்திலிருந்து குரல் எழுந்தது. கேட்டவள் பட்டத்து ராணி. அதிர்ந்த மன்னன் சினந்து கொண்டான்

"வரம்பு மீறுகிறாய்."

"நானல்ல, நீங்கள் தான் மீறி விட்டீர்கள் வரம்பை. உங்கள் செங்கோலை வசதிக்கேற்ப வளைத்துக் கொள்கிறீர்கள். வாடிய பயிருக்கு நீர் ஊற்றாது போனாலும் மன்னிக்கலாம். நீங்களோ நெருப்பள்ளிக் கொட்டுகிறீர்கள்!"

"வாய் நீளுகிறது!"

"என்ன செய்வது வாள் நீட்டும் துணிச்சலைப் பெறவில்லையே நான்!"

மன்னவன் பொறுமையைத் தொலைத்தான்.


"போ வெளியே சபையை விட்டு!" என்று கூவினான்.

"போகிறேன் சபையை விட்டு மட்டுமல்ல, உமது உறவை விட்டும்!"

விரைந்து வெளியேற சபை திகைப்பில் உறைந்து போனது.

பணிப்பெண்ணும் புறப்பட்டாள். புறப்பட முன் விழி உயர்த்தி, தலை நிமிர்த்தி, நேர் கொண்ட பார்வையோடு சபை நோக்கிச் சொன்னாள்:

"மன்னா! நியாயம் தருவாய் என்று நின் சபைக்கு வரவில்லை நான்! பூவைப் பறித்துவிட்டாய், நீயே எடுத்துச் சூடிக் கொள் என்று சொல்லவும் வரவில்லை நான்! நீயே பிரியப்பட்டாலும் நான் அதற்கு சம்மதியேன்! ஆனால் செய்த செயல் எண்ணி நாணுவாய் என்று நம்பி வந்தேன். ஏமாந்தேன்."



நிறுத்திவிட்டு சபையை நோக்கிவிட்டு பூங்குழலி தொடர்ந்து சொன்னாள்:

**"நாணப்படவேண்டிய நீ நாணத்தைக் கைவிட்டாய். நீ நாணாவிட்டாலும் தர்மம் நாணித் தலை குனிந்தது. நாணம் கொண்ட தர்மம் உன்னைக் கைவிட்டது."**

பூங்குழலி போய்விட்டாள். பூங்குழலி சொன்னது பொய்யல்ல என்று சபைக்குப் புரிந்தது. சபை மன்னனை நோக்கியது. மன்னவன் உயிர் போய்விட்டிருந்தது.

பூங்குழலி சொன்னதை திருவள்ளுவரும் ஒரு குறளாக சொல்லியிருக்கிறார்.

**"பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து."**

*அதிகாரம்–102, குறல்–1018.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல–126

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | ■ | 3 | | 4 | | |
| 5 | | | ■ | | | ■ |
| | ■ | ■ | 6 | | | ■ |
| | 7 | ■ | | | ■ | 8 |
| ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | | | | ■ | | |

### இடமிருந்து வலம்

01. வேலைத்தலத்தில் நடைபெறும் பணிகளை மேற்பார்வையிடுபவர்.
02. ஒருவருடைய மூப்பைப் பறை சாற்றும் அடையாளம்.
03. மிருகங்களில் நரியும் பறவைகளில் காக்கையும் கைக்கொள்ளும் வழி முறை இது.
05. அந்தணர்களை அடையாளம் காட்டுவது.
06. பாரதத்திலிருந்து வெள்ளையனை விரட்ட காந்தியடிகள் இதனையும் தனது சாத்வீகப் போராட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தார்.
09. இராமாயணத்தில் ஒரு பாத்திரம்.
11. பொருட்கள் ஏற்றுமதியில் கொள்கலன்கள் புகுந்த பின்னர் இவற்றுக்குரிய மதிப்புக் குறைந்து விட்டது.

### மேலிருந்து கீழ்

01. சைவ ஆலயங்களில் பயன்படுத்தப்படும் இப் பொருள் ஒரு சிறந்த கிருமி நாசினியும்கூட.
02. உயிரினங்களின் இயக்கத்துக்கு உதவுவது.
04. இலங்கை கிரிக்கெட் அணி பெற்றுவரும் வெற்றி பலருக்கு இதனை ஏற்படுத்தியுள்ளது.
06. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல்லாயிரம் மக்கள் இன்று இது இல்லாமல் திண்டாடுகின்றனர்.
07. உழைத்துக் களைப்புற்றோருடைய உடல் இந்நிலையடையவும் கூடும்.
08. வீட்டில் ஏதாவது பொருள் காணாமற் போய் விட்டால், வீட்டு வேலைக்கு வரும் பெண்ணுக்கு உடனடியாகக் கிடைக்கும் பட்டம்.
10. கதிரவனிடமிருக்கும் கதிர் வீச்சுக்களில் ஒரு வர்ணம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 18.11.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-126
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-124ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஊ | ர் | 2 வ | சி | ■ | 3 ஆ | ■ |
| க் | ■ | ர | ■ | 4 தா | ர | ம் |
| 5 க | ல | ம் | 6 ப | க | ம் | ■ |
| ம் | ■ | 7 பு | ல | ம் | ப | ல் |
| ■ | 8 க | ■ | க | ■ | ம் | ■ |
| ■ | 9 ப | ண் | ணி | கை | ■ | 10 க |
| 11 அ | டி | மை | ■ | 12 கை | யு | றை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 124இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. முஹமட் பர்ஹான், ஹேனமுல்லை.
2. என். பிரேம்குமார், டிக்கோயா.
3. திருமதி. எஸ். கலைவாணி, மோதரை.
4. ஆர். சற்குணானந்தன், கல்குடா.
5. திருமதி. பூமா பாரூக், மாத்தளை.
6. ஐ. தௌபீக், கல்முனை.
7. செல்வி. எஸ். சிவாஜினி, இரத்தினபுரி.
8. செல்வி.ஏ. பரீனா பேகம், அப்புத்தளை.
9. வி. பாஸ்கரன், வவுனியா.
10. கே. அன்பரசன், மஸ்கெலியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

**★ அரசியல் தீர்வு எப்போது வரும் என்று ஒரு குத்துமதிப்பாக சொல்ல முடியுமா?**

வி.திவாகரன், வவுனியா.

*குத்துமதிப்பெல்லாம் இருக்கட்டும் திவாகரன்; கொத்துக் கொத்தாக இடம் பெயர்ந்துள்ள அகதிகள் பிரச்சனைக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும். அரசியல் தீர்வெல்லாம் பெரிய வார்த்தை; பெரிய காரியம்.*

••

**★ டியர் சிந்தியா! உலக சாதனை புரிய ஆசைப்படுகிறேன். நீங்கள் கூறும் புத்திமதி என்ன?**

ஆர்.வை.யெஸ்மின் சிபாயா, புத்தளம்.

*ஏங்க சிபாயா! எனக்கொரு சந்தேகம். புத்தி-மதி இரண்டும் ஒரே அர்த்தம்தானா? (சிந்தியா கேள்வி கேட்கவும் தணிக்கையோ!) இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர முயற்சியுமேன்.*

••

**★ டியர் சிந்தியா! நான் பருவத்தின் முதல் படியில் நிற்கிறேன். தாங்கள் கூறும் அறிவுரை என்னவோ?**

எஸ்.விஜயன், அக்கரைப்பற்று–07

*மனக்குளத்தில் பல கற்கள் வந்து விழும். சலனப்படாதே தம்பி. கவனம் சிதறாதே. அடுத்தடுத்த படிகளுக்கு முன் தடுக்கிவிழுந்து போகாதே.(போதுமாங்கோ!)*

••

**★ 'மக்களாட்சி' படம் பார்த்தீர்களா, எப்படியிருக்கிறது?**

ஜெ.சிவகரன், கொழும்பு–07

*பெயர்தான் மக்களாட்சி-நம்பமுடியாதளவுக்கு ரீல் சுத்தி சலிக்கவைத்துவிட்டார்கள். (படத்தைப் பற்றித்தான் சொன்னேன்)*

••

**★ காதலி காட்டும் அன்புக்கும் தாய் காட்டும் அன்புக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

ஜே.ஜிப்ரி, அக்கரைப்பற்று–06

*தாங்கள் கேட்டதில் முன்னது கண்ணசைவில் ஆரம்பிப்பது, பின்னது கருவறையிலிருந்தே ஆரம்பிப்பது.*

••

**★ பெண்கள் ஏன் அலங்காரம் செய்து கொள்கின்றனர்?**

ஏ.ஆர்.ஏ.ஹீமைட், கல்முனை.

*ஹீமைட்! நீங்கள் தலைவாரிக் கொள்வதேயில்லையோ?! அதுவும் ஒரு அலங்காரம்தானே; அதை ஏன் செய்கிறீர்கள்?*

**★ அன்டநோவ் விமானவிபத்துக் குறித்து உமது உறுதியான பதில்?**

இரா. விஷ்னுராஜா, பள்ளகெட்டுவ.

*விபத்து விபத்துத்தான். விஷ்னுராஜா! நீர் இன்னமும் அன்டநோவ் நினைவில் இருப்பது நம் நாட்டு நடப்பின்படி பேராச்சரியம்.*

••

**★ பெண்கள் என்றால் பேயும் இரங்குமாம். ஆண்கள் என்றால்?**

ஏ.எச்.ராஸீன் மொகமட், ஏத்தாலை.

*பேயும் இறங்கும். இறங்கும் பேய் ஆட்டுவிப்பதால்தான் சில ஆண்கள் பேய் மாதிரி நடந்துகொள்கிறார்களோ?!*

••

**★ இந்தியப் பிரதமர் நரசிம்மராவை ரஜினி சந்தித்த மர்மம் என்ன?**

பி.தயாளினி, நீர்கொழும்பு.

*ரஜினியின் நோக்கம் எதுவாக இருந்தாலும் திரு.நரசிம்மராவின் நோக்கம் செல்வியை மிரட்டுவது.*

••

**★ ரஜினிகாந்த் காங்கிரசில் சேருவாரா?**

எம்.எஸ்.ராஜா, ஹட்டன்.

*அந்தளவுக்கு விபரம் தெரியாதவரல்ல ரஜினிகாந்த்.*

••

**★ 'செஸ்'போட்டியில் ஆனந்த் தோல்வியடைந்தது உமக்கு வருத்தமில்லையா?**

எல்.உதுமான், காத்தான்குடி

*மோதிரக்கையால்தானே குட்டு வாங்கியிருக்கிறார்! தவிர, ஆனந்துக்கு இன்னமும் வயதிருக்கிறது.*

••

**★ ஐ.நா. செயலாளர் அகதிகள் விடயத்தில் தலையிட்டுள்ளாரே?**

ம.யோகநாதன், வெள்ளவத்தை.

*தலையிட்டார் சரி, அதனால் அகதிகளுக்கு நிவாரணம் இட்டார்களோ சம்பந்தப்பட்டவர்கள்-என்பதை அறிய முயன்றாரா? என்பதே எனது கேள்வி. சொல்லோடு நிறுத்தாமல் சொன்னது நடக்கிறதா என்றும் கவனித்தால் ஐ.நா. சபை பற்றி மெச்சிக் கொள்ளலாம்.*

••

**★ தமிழக முதல்வரின் நடவடிக்கைகளை எல்லோரும் கண்டிக்கிறார்கள். பாராட்டும்படியாக நீராவது ஒரு வார்த்தை சொல்லக் கூடாதோ?**

கே.தமயந்தி, கண்டி.

*அறிஞர் அண்ணாவின் நாவல்களை தேசிய உடைமையாக்கி, அதற்கான தொகையாக 75 இலட்சம் ரூபாயை அண்ணாவின் பாரியாரிடம் கொடுத்திருக்கிறார். அரசியல் லாபம் தேடும் முயற்சி என்று அதையும் சொல்லலாம். ஆனாலும், அண்ணாவின் தம்பிகள் என்று தம்மை அழைத்துக் கொண்டவர்கள் அதனை ஏன் செய்ய மறந்தனர்? ஜெயலலிதாவைப் பாராட்டலாம்.*

••

**★ பாரதியார் இன்று பிறந்து வந்தால்?**

வ.தங்கராசா, திருமலை

*'உச்சிமீது வான் இடிந்து' என்பதற்குப் பதிலாக, 'உச்சிமீது ஷெல் விழுந்து' என்று தொடங்கியிருப்பார்.*

••

**★ கலைஞர் கருணாநிதி மீண்டும் முதல் வராவாரா?**

சி.மகாதேவன், பதுளை.

*இப்போதும் அவர்தானே முதல்வர்! (தமிழக அரசியல் தலைவர்களில் மூத்தவர்.)*



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம்

## அங்கம் 6

# மாமுனிவர் பின் நடந்த மன்னவர் குமாரர்கள்

அயோத்திமா மன்னன் தசரதன் எத்தகைய சந்தர்ப்பத்திலும் நிலைதளம் பாதவர். தடுமாறாதவர். அத்தகைய மாவீரரான மாமன்னர் தடுமாறிக் கீழே விழுந்துவிடாமல் உபேந்திரன் தாங்கிப் பிடித்துக் கொண்டார். அரசனின் ஒவ்வொரு அங்க அசைவையும் எட்டத்திலிருந்தே அவதானித்துக் கொண்டே-வேறு எப்பக்கமும் தன் புலனைச் செலுத்தாது-கடமையே கண்ணாக இருந்தமையால்-கண்மூடி விழிப்பதற்குள் அரசருக்கு அருகில் ஓடிவந்து விட்டார். வேறு எவரும் நிலமையை அவதானிப்பதற்கு முன்னதாக தானாகவே உணர்ந்து செயலில் இறங்கிய உபேந்திரனை அவையிலிருந்த அனைவரும் கவனித்தனர்.

அயோத்திமாநகர ஆட்சி பீடமேறி, மூன்று பத்தினிகளைக் கைப்பிடித்தும்-ஆண்டுகள் பல உருண்டோடியும்-குழந்தைப் பாக்கிய மின்றித் தவித்த அரசர்க்கரசர் மூத்த குமாரனாக வந்துதித்த இராமன் மீது அளவு கடந்த பாசத்தைப் பொழிந்தார். தன்னுடைய மகனின் தெய்வீக அழகால் கவரப்பட்டுக்கிடந்தார். இராமனுடைய அங்கங்கள் ஒவ்வொன்றிலும் விபரிக்க முடியாத அழகு பொலிவதை தசரதர் கண்டு அவன்மீது கட்டுக்கடங்காத வாஞ்சை கொண்டவராக காணப்பட்டார். தனது தம்பிமார்களுடன் இராமன் குருகுலவாச மேற்றுச்சென்று சில வருடங்கள் தங்கியிருந்த காலத்தில் பிரிவாற்றாமையால் துயருற்றுக் கிடந்தார் மாமான்னர். ஆசிரமத்திலிருந்து திரும்பிய தனது நான்கு குமாரர்களும் முன்பைவிட மிக்க எழிலுடன் வீரக் கனல்களாக வந்திருந்தனர் என்பதையும்



இராஜகுமாரன்

கண்ணுற்றார். இளமை எழில் கொஞ்சும் இளைஞன் இராமனை இனிமேல் என்றுமே பிரிவதில்லை என்று தசரத மாமான்னர் திடசங்கற்பம் பூண்டிருந்தார்.

இவ்வாறு இராமனை என்றும் தன்னருகிலேயே வைத்திருக்க வேண்டும் என்று விரும்பி இருந்த தசரத மன்னருக்கு விசுவாமித்திரர் விடுத்த வேண்டுகோள் விபரீதமாகவே பட்டது.

தபோவனத்தில் முனிவர்கள் அவ்வப்போது வேள்விகளை நடத்துவார்கள். மிகப்பெரிய ஓமகுண்டங்களை அமைத்து தீ வளர்ப்பார்கள். அத் தீயை தேவதைகளாக உபாசித்து பலதரப்பட்ட பொருட்களை அத்தீயில் இடுவார்கள். ஆவின் நெய்யில் தீக்குண்டத்தில் இடப்பட்டிருக்கும் பல தரப்பட்ட மூலிகைகள் பற்றி எரியும். வேத மந்திரங்களை முனிவர்கள், ஓமகுண டத்தை வளைத்திருந்த வண்ணம் இடைவிடாது ஓதிக்கொண்டே இருப்பார்கள். குறிப்பிட்ட தேவதைக்குரிய மந்திரங்களை உச்சாடனம் பண்ணி ஓமகுண்டத்தில் அவிர்ப்பாகங்களை இடும்போது குறிப்பிட்ட தேவதை தீயினுள்ளிருந்து எழுந்து முனிவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றி வைக்கும்.

இத்தகைய வேள்விகளை நடக்கவிடாமல் தடுப்பதில் சில இராக்கதர்கள் ஈடுபட்டிருந்தனர். வேள்வித் தீ எரிந்து கொண்டிருக்கும் போது, இராக்கதர்கள் வானில் தோன்றி மிருகங்களின் மாமிசங்களையும் இரத்தத்தையும் வேள்வித் தீயில் கொட்டி அசுசை ஏற்படுத்தி வந்தனர். இச் செயல்களால் வேதனை அடைந்த முனிவர்கள் விசுவாமித்திரரைச் சரணடைந்தனர். அவர் நினைத்த மாத்திரத்தில் இராக்கதர்களை அழித்துவிடமுடியும். ஆனால் தனது தவவலிமையினை இதற்காக இழக்க விரும்பாத முனிவர் ஒரு முடிவுக்கு வந்தார். இராக்கதர்களை வேரோடு ஒழிக்கவே அவதாரமெடுத்த இராமபிரானே இவ்வரக்கர்களையும் அழிக்க வல்லவர் என்று தனது ஞானத்தால் உணர்ந்த விசுவாமித்திரர் அயோத்திமாமன்னரிடம் வந்து "அரக்கர்களை அழிக்க வல்லவன் இராமனே!

மகாபாரதம்-பிரதிகள் ஒரு விளக்கம்

தினமுரசு-120வது (செப்.24-30) இதழ் 19ம் பக்கத்தில் 'மகாபாரதம் முடிவுரை' வெளியாகியிருந்தது. இதனடியில் "பிரதிகள் தேவையானால் தொடர்புகொள்ளவும்." என்று குறிப்பிட்டிருந்தோம். இந்த விளம்பரத்தில் காணப்பட்ட வாசகங்களை வாசகர்களில் சிலர் தவறாகப் புரிந்து கொண்டனர்.

மகாபாரதத்தொடர் பிரசுரமான இதழ்களில் குறிப்பிட்ட சில பிரதிகளே கைவசமுள்ளன. பிரதிகளை விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபா 15 பெறுமதியான முத்திரைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டிருந்தோம்.

மகாபாரதத்தொடர் மொத்தம் 94 அங்கங்களைக் கொண்டது. தினமுரசு 29வது இதழிலிருந்து 120வது இதழ் வரை வாரம் தோறும் இவை பிரசுரிக்கப்பட்டன. மகாபாரதம் வெளியான இதழ்களைச் சேர்த்து தொகுக்க விரும்பி அவற்றைப் பத்திரப்படுத்தியவர்கள் சில பிரதிகளை தவறவிட்டிருக்கலாம். அவ்வாறு தவறவிட்டவர்கள் தங்களிடம் இல்லாத இதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாகவே அவ்விளம்பரம் பிரசுரமானது. இதனைச் சரியாக புரிந்து கொள்ளாமல் ரூபா 15/-பெறுமதியான முத்திரைகளையும் முகவரியையும் மட்டும் அனுப்பிவைத்துள்ளனர். இதற்காக வருந்துகிறோம்.

தங்களிடமில்லாத பிரதிகள் பெற விரும்புவோர் இதழில் இலக்கம், திகதி அல்லது மகாபாரதத்தின் அங்க இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும். இப்பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 15/-பெறுமதியான முத்திரைகள் தபாலுறைக்குள் வைத்து அனுப்பப்படவேண்டும். ஏற்கனவே ரூபா 15/-பெறுமதியான முத்திரைகளை அனுப்பியவர்கள் தினமுரசு இதழ்களில் எந்த இலக்கம் வேண்டும் என்று தபாலட்டையில் எழுதி-முகவரியையும் தெளிவாக ஆங்கிலத்தில் எழுதி அனுப்பினால் அப்பிரதியை அனுப்பிவைப்போம்.

அவனை என்னுடன் அனுப்பிவைப் பாயாக" என்று கோரிக்கை விடுத்தார்.

இக் கோரிக்கையினை விடுத்த மாத்திரத்திலேயே நிலைதடுமாறிப்போன தசரதச் சக்கரவர்த்தி ஓரளவு தெளிவு பெற்றதும், "இராமனோ சிறியவன்; குருகுலத்தி லிருந்து இப்போதுதான் திரும்பியிருக்கிறான். போர்க்கலை கற்றிருப் பான். ஆனாலும் அதில் போதுமான பயிற்சியும் அனுபவமும் இல்லையே! உலகினையே கலங்கவைக்கும் பேராற்றல் படைத்த இராக்கதர் களைக் கொல்ல இந்தச் சின்னஞ் சிறுவனான இராமனால் முடியுமா சுவாமி? எனது படைகளை அனுப்புகிறேன். பாலகனை விட அதி பாரக்கிரமசாலிகளான பல்லாயிரம் வீரர்களை அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் அந்த இராக்கதர் களை அழித் தொழித்து விடுவார்கள். இல்லையேல் நானே படைத் தலைவனாக வந்து அந்த இராக்கதர்களை வதம் செய்கின்றேன்" என்று அழாக் குறையாகக் கூறினார்.



சினத்தை அடக்கும் சக்தியற்றவரான விசுவாமித்திரர் எரியும் தணலானார். ஆசனத் திலிருந்து துள்ளி எழுந்தார். அரசவையே ஆட்டம் கண்டது. "ரகுவம்ச மன்னன்- இச்சுவாகு குலத்திலுதித்து, சக்கரவர்த்தி என்ற பட்டத்தையும் பெற்றவனான நீ வார்த்தை மீறிவிட்டாய்! கேட்பதனைத்தையும் குறைவின்றித் தருவதாகக் கூறிய நீ, இப்போது கேட்டதைக் கொடுக்கத் தயங்கு கிறாய். வேண்டாம் ஏதும்; நானே எல்லாவற் றையும் கவனித்துக்கொள்கிறேன்" என்று கூறிய வண்ணம் அரசவையைவிட்டு வெளியேற முற்பட்டார். அவர்முன் ஓடோடிச் சென்று வழி மறித்தார் வசிட்ட மாமுனிவர்.

"பிரம்மரிஷியே! சினத்தை அடக்குங்கள். இராமனுடைய தகுதியைத் தாங்களும் அறிவீர்கள்; யானும் அறிவேன். மன்னவன் அறியமாட்டான். சற்றுப் பொறுமையாக இருங்கள். இராமன் மட்டுமல்லாமல் அவனுடைய நிழல் போன்ற இலக்குவனையும் தங்களுடன் அனுப்பிவைக்க நான் ஏற்பாடு செய்கிறேன். தயவுசெய்து ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்"

இவ்வாறு வசிட்டாமாமுனிவர் கூறியதும் சினம் தணிந்த விசுவாமித்திரர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார். வசிட்டர் தசரதரிடம் சென்றார். "மாமுனிவர் விசுவாமித்திரர் பற்றி சகலமும் தெரிந்து வைத்துள்ள மன்னரான நீர் அவருடன் இராமனையும் இலக்குவனையும் அனுப்புவதே சிறந்தது. இந்த உலகத்தில் எந்த இராக்கதனையும் அழிக்கவல்ல தகுதியுடையவர்கள் உமது புதல்வர்களான இராமனும் இலக்குவனுமாவர்" மேலும் விசுவாமித்திரருடன் இவர்கள் செல்வதால், ஈரேழு பதினான்கு உலகிலுமுள்ள எவராலும் அவர்களுக்கு எத்தீங்கும் ஏற்படப்போவதில்லை. அதுமட்டுமல்லாமல் மாமுனிவரின் பணியினை வெற்றிகரமாக முடித்து அம் மகானின் ஆசியைப் பெற்றால் உமது பிள்ளைகளுக்கு அதைப்போல் பேறு எதுவும் கிடையாது. ஆகவே, தயக்கமின்றி உமது குமாரர்களை இன்றே முனிவருடன் அனுப்பி வைப் பாயாக" என்று கூறினார்.

தசரதரின் மனம் ஓரளவு தெளிவு பெற்றது. விசுவாமித்திரரின் தாழ்பணிந்து, "முனிபுங்கவரே அறியாமற் செய்த இந்த அடியேனின் தவறினை மன்னித்தருளுங்கள். என்னிரு கண்மணிகளாக நான் கருதிவந்த இராமனும் இலக்குவனும் இன்று முதல் தங்கள் பொறுப்பு. அவர்களைத் தாங்கள் எங்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறியதுடன், உபேந்திரனை அழைத்து, "இராமனையும் இலக்குவனையும் அழைத்துவா. அத்துடன் அந்தப்புரம் சென்று, அவர்களுடைய அன்னையர் மூவரையும் கண்டு, இரு புதல்வர்களும் விசுவாமித்திர மாமுனிவருடன் சென்று சிலகாலம் தபோவனத்தில் வாழ விருப்பதனால், அவர்களுக்கு ஆசிகூறி விடையளித்து அனுப்பிவைக்கும்படி கூறு" இவ்வாறு அரசர் கூறியதும் அரசருக்கு வணக்கம் செலுத்திவிட்டு உபேந்திரன் புறப்பட்டான்.

சிறிது நேரத்தில் இராமனும் இலக்குவனும் காவி வர்ண மரவுரி தரித்து விசுவாமித்திர மாமுனிவரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினர். இருவருக்கும் தன் மனப்பூர்வமான ஆசிகளை முனிவர் வழங்கினார். அடுத்து குலகுருவான வசிட்ட மகாமுனிவரின் தாழ்பணிந்து வணங்கினர். அவர் மன்னரைக் காட்டி, "தந்தையாரிடம் சென்று விடை பெற்று வாருங்கள் மக்காள்" என்று கூறினார். மன்னரிடம் வந்து தாழ்பணிந்த மக்களை தோள்தொட்டு தூக்கி நிறுத்தி வாஞ்சையுடன் வாரி அணைத்து, உச்சி மோந்து, அவர்களுடைய வலது கரங்களைப் பற்றி முனிபுங்கவரின் இரு கைகளிலும் இணைத்தார்.

கொந்தளிக்கும் கடலுக்கு ஒப்ப, தசரத மாமன்னனின் உள்ளம் கொதித்தது. கண்கள் குளமானபோதும் கண்ணீர் ஒரு சொட்டும் வெளியேறிவிடாமல் பார்த்துக்கொண்டார். அவையிலிருந்த அனைவரும் கற்சிலைகள் போல் கை கூப்பி வணங்கினர். முனிவர் முன்செல்ல, புன்னகை பூத்தவர்களாக இருவரும் பின்சென்றனர். அவையினர் அனைவரும் அரண் வாயில்வரை வந்து வழியனுப்பினர். நகர மாந்தர் எல்லோரும்-செய்தி அறிந்து வீதிகளின் இரு மருங்கும் நின்று முனிவருடன் இரு அரச குமாரர்களும் கால்நடையாகச் செல்வதைப் பார்த்துக் கலங்கினர்.

சக்கரவர்த்தி தசரதரால் இராமன் பிரிவை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்தப்புரம் சென்றார். அங்கு அரசிகள் மூவரும் ஆற்றொணாத் துயரத்துடன் காணப்பட்டனர். அவர்களுடன் இணைந்து கொண்டார். ஒவ்வொருவரும் தத்தமது துயரினைப் பகிர்ந்து கொண்டு ஓரளவு ஆறுதலடைந்தனர். அந்தப்புரத்தில் நால்வரும் துயரக் கடலில் மூழ்கியுள்ளனர் என்பதனை உபேந்திரன் மூலம் அறிந்த வசிட்டமாமுனிவர் அங்கு வந்து ஆறுதல் கூறி நால்வரையும் கண்கலங்காதிருக்குமாறு கேட்டுக்கொண்டார். விசுவாமித்திர மாமுனிவருடன் அரச குமாரர்கள் செல்வதால் பெருநன்மையே வந்தணையும் என்று கூறினார்.

### முனிவரளித்த மந்திரோபதேசம்

முனிவரும் அரச குமாரர்களும் கால் நடையாகவே சென்று சரயு நதியின் தென்கரையை அடைந்ததும், அந்நதியில் குளித்துவிட்டு வருமாறு முனிவர் சொன்னார். குளித்துவிட்டு வந்ததும் முனிவர் இருவருக்கும் 'பலை' மற்றும் 'அபலை' ('பலம், அதிபலம்' என்பது இவற்றின் பொருள்) என்ற இருமந்திரங்களையும் உபதேசித்தார். வேதமந்திரங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய இவ்விரு மந்திரங்களும் மிகவும் சக்தி வாய்ந்தவை என்பதனால் முதலில் இவ்விரண்டையும் முறைப்படி கற்பது சிறந்தது என்று தெரிவித்த முனிவர் அரச குமாரர்களுக்கு அம்மந்திரங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் கற்பித்தார்.

இம் மந்திரங்களை உபாசிப்பவருக்கு எப்போதும் களைப்புத் தோன்றாது; நோய் நொடிகள் தாக்காது; அதிக பலமும் ஞானமும் உண்டாகும். இவர்களை எவரும் வெல்லவும் முடியாது.

இதன் பின்னர் காமாச்சிரமம் என்ற வனத்தை மூவரும் அடைந்தனர். இந்த வனத்தில்தான் முன்பு சிவபெருமான் காமக்கடவுளான மன்மதனை எரித்தவர். இக் கதையினையும் இராம-இலக்குவனுக்கு மாமுனிவர் சொன்னார். காமாச்சிரமத்தில் இருந்த முனிவர்களின் அதிதிகளாக அன்றிரவு தங்கியிருந்த மூவரும் அடுத்த நாட்காலையில், காலைக் கடன்களை முடித்துவிட்டு வடதிசை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர்.

வழியில் ஓங்கார ஓசை எங்கும் ஒலித்தது. 'மானசரசு' என்ற நதி ஓடிக் கொண்டிருந்தது. இந்நதி கங்கையுடன் சங்கமமாகும் இடத்திலிருந்துதான் ஓங்கார ஓசை எழுகிறது என்பதனை முனிவர் விளக்கியதுடன் கோசலை நாட்டை ஊடறுத்துப்பாயும் சரயு நதியும் மானசரசு ஆற்றின் கிளை நதியே என்றும் தெரிவித்தார்.

### தாடகை என்றோர் அரக்கி

மானசரசு-கங்கை ஆகிய இரு புண்ணிய நதிகளும் ஒன்றுடனொன்று கலக்கும் சங்கமத்தில் வணக்கம் செலுத்திய இராமன்-இலக்குவன் முனிவரைத் தொடர்ந்து தா காவனத்துள் பிரவேசித்தனர். மிகச் செழிப்பாக-இயற்கை அழகு கொலுவீற்றிருக்கும் அவ்வனத்தில் எதுவித உயிரோட்டமும் அற்ற நிலை இருப்பதைக் கண்ட அரச குமாரர்கள் அதற்கான காரணத்தை முனிவரிடம் வினவினர். அவரும் காரணத்தை விளக்கினார்.

முன்னொரு காலத்தில் மிகவும் சிறப்பானதோர் இராச்சியமாக இப்பிரதேசம் திகழ்ந்தது. யற்ச குலத்தவனான சுகேது என்பவன் ஆட்சி புரிந்து வந்தான். இவனுக்குக் குழந்தைகள் இல்லை. பிரம்மதேவனை நோக்கித் தவமிருந்தான். சுகேதுவின் தவத்தை மெச்சிய பிரம்மன் "உனக்கொரு பெண் குழந்தை பிறப்பாள். மிகவும் அழகியான அவள் ஆயிரம் யானை பலம் பெறுவாள்" என்று வரமளித்தார்.

பிரம்மனின் வரத்தால் பிறந்த தாடகையை சுந்தன் என்ற யட்ச இளவரசர் மணந்தான். இவர்களுக்கு மாரீசன் என்றொரு மகன் பிறந்தான். அகத்திய மாமுனிவரின் சாபத்துக்குட்பட்ட சுந்தன் அழிந்தான். தன் கணவனைக் கொன்ற அகத்தியை மாமுனிவருடன் தாடகை மோதினாள். கோபம் கொண்ட அகத்திய மாமுனிவர் தாடகையையும் அவள் மகன் மாரீசனையைம் இராட்சத உருபெற்று அலையுமாறு சபித்தார்.

இதனால் பேரழகியான தாடகை அவலட்சணம் பொருந்திய அரக்கியாகவும் மகன் மாரீசன் அரக்கனாகவும் மாறினர். இருவரும்



நரமாமிசம் உண்ணும் கேவல நிலையினை அடைந்தனர். அந்நாட்டில் வாழ்ந்த மக்களும் வேறிடங்களை நாடிச் சென்றனர். இதனால் வளமும் வனப்பும் நிறைந்த வனம் அவற்றை ஆண்டு அனுபவிக்க எவருமின்றி வீணாயிற்று. இக்கதையினை அரச குமாரர்களுக்குக் கூறிய விசுவாமித்திர மாமுனிவர் "தாடகை பெண்ணல்ல; பெண்ணுருவில் மாபெரும் கொடுமைகளை விளைவிக்கும் கொடிய பிசாசு. இவளை அழித்தால்தான் இவ்வனம் மீண்டும் செழித்து விளங்கும். இன்பபுரியாக மாறும்" என்று கூறினார். அத்துடன் இராமனின் முதற்கடமை தாடகையை வதம் செய்வதேயாகும் என்றும் சொன்னார்.

"தங்கள் கட்டளைக்காகவே காத்துக் கிடக்கிறோம் குருமகானே!" என்று கூறிய இராமன் தன்னுடைய வில்லில் நாணை ஏற்றி அதனை தன் விரலால் சுண்டினான். 'கிண்' என்ற பேரொலி பிறந்தது. இவ்வொலி அந்தப் பிரதேசம் எங்கும் எதிரொலித்தது. விண்ணிலுள்ள தேவர்களுக்கும் அவ் வொலி கேட்டது. அவ்வனத்திலுள்ள பட்சி ஜாலங்கள் எல்லாம் பதறின. மிருகங்கள் எல்லாம் மருண்டன. தாடகையின் காதுகளுக்கும் அவ்வொலி கேட்டது.

தன்னுடைய பிரதேசத்துள் புகுந்து இத்தகைய ஓசையை ஏற்படுத்தியவர் யாரென்பதை அறிவதற்காக விண்ணில் தாவி வந்தவள் கீழே அழகிய இரு குமாரர்களுடன் முனிவர் ஒருவர் நின்றிருப்பதையும் கண்டாள்; கடும் சினம் கொண்டாள். பாய்ந்தோடி வந்து இரு இளைஞர்களையும் பிடிக்கத் தன் கொடிய கரங்களை நீட்டினாள் தாடகை.

வீரமரபுப்படி பெண்களைக் கொல்வது பெரும் பாவமாகும். இதனால் இராமன் தயங்கினான். "தன்னைக் கொல்லவரும் பசுவைக்கொல்வது பாவமல்ல. இராமா! இவள் பெண்ணல்ல; பிசாசு. இவளைக் கொல்லாவிட்டால் உங்கள் இருவரையும் உயிருடன் உணவாக்கிவிடுவாள். ஆகவே உன் அம்புக்கு இரையாக்கிவிடு" என்றார் மாமுனிவர்.

தன்தம்பி இலக்குவனை ஓரக்கண்ணால் இராமன் பார்த்தார். அப்பார்வையின் பொருளை உணர்ந்த இலக்குவன் தன் வில்லையும் எடுத்து நாணேற்றி அண்ணன் அருகிலேயே நின்றான். இருவருடைய பாணங்களும் அரக்கி தாடகையின் மார்பில் பாய்ந்தன. நொடிப்பொழுதில் உயிரற்ற அவள் உடல் பூமியில் பயங்கரமான சத்தத்துடன் விழுந்தது. பூமியே அதிர்ந்தது. அரச குமாரர்கள் இருவரும் மாமுனிவரின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தனர். மகிழ்ச்சி பெருக்குடன் இருவருக்கும் ஆசி கூறிப் அரவணைத்துக் கொண்டார் விசுவாமித்திர மகாரிஷி.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—4
### பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

**சரியான விடை** "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"

1. செல்வி.சி. கௌஷிக்கா
36/8,வெள்ளவத்தை, கொழும்பு-06.
2. பாத்திமா பர்ஸான்
இல.36, நாகொல்லவீதி, மாத்தளை.
3. க. தனுஜா
கோனகெல குறுப், பசறை.
4. க. விவேகானந்தம்
கன்னன்குடா-2, மட்டக்களப்பு.
5. ஏ.பி. யோன், 39/11, நெல்ஷன் வீதி, கொழும்பு-03.

### இராமாயணப் போட்டி 06

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- மன்மதன் எரிக்கப்பட்ட வனத்தின் பெயர் என்ன?**

நவம்பர் 11ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:06.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (PRO/7/95)

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

த
ரு
வ
து
வி
யோ
ட



அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

# நாயகன்

➢ டெஸ்ட் போட்டிகளில் இலங்கைக் கிரிக்கெட் அணி இதுவரை பெற்ற வெற்றிகள் ஏழே ஏழுதான். அதில் ஐந்து வெற்றிகள். அதுவும் அந்நிய மண்ணில் மூன்று வெற்றிகள் வசப்பட்டதுவரை அர்ஜுன் ரணதுங்கா தலைமையில் பெறப்பட்டதுதான் குறிப்பிடத்தக்க விஷயம். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் சமீபத்திய சாதனை சிங்கர் கிண்ணம்.

ஏனைய நாட்டு கிரிக்கட் கப்டன்கள் போல உடல்வாகு கொண்டவரல்ல. இவரால் ஓட முடியுமா? என்று யோசிக்கவைக்கும் உடலமைப்பு. தோற்றத்தை வைத்து எடை போடுவது எவ்வளவு தவறு என்பது ரணதுங்கா களத்தில் இறங்கியபின்னர் தெரிந்துவிடும். படு சுறுசுறுப்பு. பந்தை தடுத்து, விரைவாக சேகரித்து அனுப்புவது, பந்து வீசுவது, விளாசுவது, ஒவ்வொரு ரன்னாக ஓடிச் சேகரிப்பது என்று சகல துறைகளிலும் முத்திரை பதித்துக் கொண்டிருக்கிறார்.

அர்ஜுன் ரணதுங்காவுக்கு இப்போது 31 வயது. 32 டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கிய பழுத்த அனுபவம் சமீபத்திய வெற்றிகளில் பளிச்சிட்டுள்ளது. 32 போட்டிகளில் 5 வெற்றிகள், 11 தோல்விகள். ஏனையவை வெற்றி தோல்வியின்றி முடிந்தன. பாடசாலையில் படிக்கும்போதே 1982இல் டெஸ்ட் போட்டியில் தேசிய அணியில் நுழைந்து கொண்டார். அப்பா அரசியல்வாதி. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். அண்ணன் தம்மிக ரணதுங்கா முன்னாள் கிரிக்கெட் வீரர். தம்பி சஞ்சீவ ரணதுங்கா தற்போது அணியில் இடம்பெற்றுள்ளார்.

அணி முழுக்க நம்பிக்கை வைத்திருக்கிறது. கப்டனுக்கு அதைவிட வேறென்ன பலம் வேண்டும். சமீபத்திய வெற்றிகளின் நாயகன் இந்த பருத்த உடல் மனிதர்தான். அலட்டல் கிடையாது. முயற்சி இருக்கிறது. அதனால் இன்னும் உயர்ச்சி காத்திருக்கிறது.

# தூக்க முடியவில்லை


▽ குழந்தைகளைக் கண்டால், தூக்கியெடுத்து கொஞ்ச வேண்டும் போலவே இருக்குமல்லவா. ஆனால் டானியல் என்னும் குழந்தையைத் தூக்கமுன்னர் பாரம் தூக்கும் பயிற்சியில் தேர்ச்சி இருக்கவேண்டும். பிறந்தவுடனேயே 15 1/2 இறாத்தல். பெற்றவளுக்கு பொலிவு கண்டு பெ.....ரி...ய...ய சந்தோசம். மருத்துவர்களுக்கு வியப்பு. பிறந்தவுடன் இருக்க வேண்டிய நிறையைவிட இருமடங்கு அதிகம். படத்தில் இன்னொரு குழந்தையிருக்கிறது பாருங்கள். அதுவும் டானியல் பிறந்தபோதுதான் பிறந்தது. அதன் எடை 8 இறாத்தல். வோஷிங்டனில் உள்ள சென்-ஜோசப் மருத்துவ மனையில்தான் டானியல் பிறந்தான். குழந்தையை எடை காட்டுகிறவர்தான் அம்மா. பெயர் நத்தாலியா. 39 வயது. ஏற்கனவே 9 குழந்தைகள். "டானியல் கடவுளின் பிரசாதம்" என்கிறார் அம்மா நத்தாலியா. (பாரமான பிரசாதம்)

உலகில் மிகப் பெரிய குழந்தையென்று டானியல் பட்டம் பெற்றிருப்பான். ஆனால் 1955 ஆண்டில் இத்தாலியில் ஒரு குழந்தை பிறந்தது. அதன் எடை, 22 இறாத்தல் 8 அவுன்ஸ். உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, டானியல் உலகில் இரண்டாவது பெரிய குழந்தை என்ற பட்டத்தைப் பெற்றுவிட்டான்.

பிறந்தபோது டானியலின் உயரம் 22 அங்குலம். சாதாரணமாக 16 தொடக்கம் 20 அங்குலம்தான் பிறந்த குழந்தையின் உயரம் இருப்பதுண்டு. குண்டு, குண்டு டானியல்.













# தூறல் நிற்கவில்லை

தினமுரசு வாரமலர்

அமெரிக்க கால்பந்து (ரகர்) விளையாட்டின் சூப்பர் ஸ்டார் ஓ.ஜே சிம்சன் கொலையாளியல்ல என்று விடுதலை செய்யப்பட்டுவிட்டார். தனது மனைவி (படத்திலிருப்பவர்) நிக்கோலையும், நிக்கோலின் ஆண்நண்பர் கோல்ட்மேனையும் துடிக்க துடிக்க கத்தியால் குத்தி, தலையைத் துண்டாக்கி கொலை செய்தார் ஓ.ஜே.சிம்ஸன். அதுதான் குற்றச்சாட்டு. கிட்டத்தட்ட ஒன்பது மாத விசாரணை. கறுப்பின ஜூரர்கள் கறுப்பின சிம்ஸனுக்கு ஆதரவாக நீதியை பத்திரமாக புதைத்துவிட்டார்கள் என்று பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.

தீர்ப்பு வெளியாகி ஓ.ஜே.சிம்ஸன் சுதந்திரப் பறவையாகிவிட்டார். ஆனால் சர்ச்சைகள் மழைவிட்டும் நிற்காத தூறலாகத் தொடர்கிறது.

கொல்லப்பட்ட நிக்கோலும், கோல்ட்மேனும் வெள்ளையினம். அதனால் வெள்ளையினத்தவர்களில் 90 வீதமானோர் சிம்சன் குற்றவாளி என்கின்றனர். கறுப்பினத்தவர்கள் சிம்சன் கொலையைச் செய்திருந்தாலும் செய்திருக்காவிட்டாலும், விடுதலையானதில் சந்தோசப்பட்டு ஆரவாரிக்கின்றனர். தமது சூப்பர் ஸ்டாரை இழந்துவிட அவர்கள் தயாரில்லை. நீதி பற்றிய கவலையெல்லாம் கிடையாது. இன அபிமானமே மேலோங்கியிருக்கிறது.

சர்ச்சைகள் கதைகளாகி, ஊகங்கள் நாவல்களாகி வெளிவரலாம். ஆனால் நீதி செத்தது செத்ததுதான். பணத்திற்கு வலிமை அதிகம் என்பதை சிம்சனின் பணமும் விளையாடிக் காட்டிவிட்டது.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை கவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 28, வெல்லவா தாலையில் உள்ள சமனை அச்சகத்தில் நவம்பர் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது

படிப்பகம்